பக்கங்கள் : பதினெட்டு + VI = 24

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 27 ஞாயிற்றுக்கிழமை (12.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 16

## பௌத்த தேரர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில்

# கொழும்பில் சாருக்ஹான் பங்குபற்றிய களியாட்ட நிகழ்வில் குண்டு வெடிப்பு!

கொழும்பு,டிசெ.12

கொழும்பில் குதிரைப் பந்தய சதுக்கத்தில் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டிருந்த களியாட்ட நிகழ்வில் நேற்றிரவு பெரும் குண்டு வெடித்தது. இதில் இருவர் உயிரிழந்தனர்; பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பிரபல இந்தி நடிகர் சாருக்ஹான் குழுவினர் பங்கு பற்றிய இந்தக் களியாட்ட நிகழ்ச்சி பௌத்த தேரர்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நடத்தப்பட்டது.

உண்ணாவிரதம், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் என்பனவற்றின் மத்தியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நிகழ்ச்சி நடந்தது.

நேற்றிரவு 11.15 மணியளவில் நிகழ்ச்சி முடிவடைவதற்கு சிறிது நேரம் இருக்கையில் பார்வையாளர்கள் அமர்ந்திருந்த பகுதியில் குண்டு வெடித்தது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பார்வையாளர்கள் பகுதியை நோக்கி வீசப்பட்ட கிரனேட் குண்டு ஒன்றே வெடித்தது என்று முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பெரும் அதிர்வுடன் குண்டு வெடித்ததும் பார்வையாளர்கள் தலைதெறிக்க ஓட்டம் எடுத்தனர். இதனால், அங்கு



பெரும் கலேபரம் ஏற்பட்டது.

உடனடியாக நிகழ்ச்சி நிறுத்தப்பட்டு களியாட்ட நட்சத்திரக் குழுவினர் பாதுகாப்பாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

குண்டு வெடிப்பில் உயிரிழந்த இருவரில் ஒருவர் 'லங்காதீப' பத்திரிகையின் படப்பிடிப்பாளர் லங்கா ஜெயசுந்தர என்று அடையாளம் காணப்பட்டார். அடுத்தவர் இரத்தினபுரியைச் சேர்ந்த ஒரு பெண் ஆவார்.

'Temptations 2004' எனப் பெயரிடப்பட்ட இந்த நிகழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்காக 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட ரசிகர்கள் 10 ஆயிரம் ரூபா வரை பெறுமதியான ரிக்கெட்டுகளைப் பெற்று சதுக்கத்தில் திரண்டிருந்தனர்.

பிரபல இந்தி நடிகர் சாருக்ஹான், பிரிட்னி சின்டா, சாபி அலிஹான், பிரியங்கா சோப்ரா, ஜவட் ஹான் மற்றும் செலினா ஜெட்லி ஆகியோர் இந்தக் களியாட்ட நிகழ்வில் பங்குபற்றினர்.

இந்தக் களியாட்ட நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்ட நேற்றையதினம் மறைந்த பௌத்த தேரர் ஒருவரின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட இருந்தது.

மொஸ்கோவில் மரணமடைந்த (16ஆம் பக்கம் பார்க்க)

# கருணா குழு என்று இன்று எதுவுமில்லை

## அந்தப் பெயரில் கிழக்கில் நடப்பது உளவியல் போர் என்கிறார் கௌசல்யன்



மட்டக்களப்பு,டிசெம்பர்12

**கிழக்கில் கருணா குழு என்று ஒன்று தற்போது இல்லை. அந்தப் பெயரில் இராணுவப் புலனாய்வுத்துறையே இங்கு அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது. கருணா குழு என்ற பெயரில் மக்கள் மத்தியில் ஓர் உளவியல் போரைத் தொடுக்கிறது இராணுவம்.**

**- இப்படிக் குற்றஞ்சாட்டுகிறார் விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன்.**

ஆயுதக் குழுக்களையும் தனிநபர்களையும் பயன்படுத்தி ராஸிக், புளொட் மோகன் என்ற பெயர்களில் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு காலத்துக்குக் காலம் கிழக்கில் மக்கள் மீது அரச பயங்கரவாதத்தைத் திணித்து வந்திருக்கிறது. மோசமான அந்த வரலாற்றின் தொடர்ச்சியாகவே இப்போது 'கருணா' என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது என்றும் கௌசல்யன் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கு நிலைவரம் தொடர்பாக நேற்று அவர் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தார்.

கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு செய்தியாளர்களிடம் கௌசல்யன் தெரிவித்ததாவது:-

போர் நிறுத்த உடன்படிக்கையின்படி 60 நாள்களுக்குள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயுதக் குழுக்கள் வெளியேற்றப்பட்டிருக்க வேண்டும். அதனை இலங்கை அரசு அமுல்படுத்தியிருந்தால் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

ஏற்கனவே உள்ள ஆயுதக் குழுக்களையும் தனிநபர்களையும் பயன்படுத்திக் கொண்டு இராணுவப் புலனாய்வுத் துறையினர் இப்படியான வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். இதன் மூலம் உளரீதியான போரை இராணு

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழறிஞர் சொக்கனின் இறுதிச் சடங்கு நாளை

யாழ்ப்பாணம்,டிசெ.12

நேற்றுமுன்தினம் காலமாகிய தமிழறிஞர் கலாநிதி சொக்கலிங்கத்தின் (சொக்கன்) இறுதிச் சடங்குகள் நல்லூரில் உள்ள இல்லத்தில் நாளை நடைபெறவிருக்கின்றன.

நல்லூரில் உள்ள அவரது புதல்வரின் இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும் பூதவுடலுக்குப் பலரும் அஞ்சலி செலுத்திவருகின்றனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சின்னக்கடைச் சந்தை பலவந்தமாகத் திறப்பு

குருநகர்,டிசெ.12

குருநகர், சின்னக்கடை பொதுச் சந்தை நேற்றுத் திறக்கப்பட்டது. பொதுமக்களும் வர்த்தகர்களும் இணைந்து சந்தை நுழைவாயில்களில் போடப்பட்டிருந்த பூட்டுக்களைப் பலவந்தமாக உடைத்துத் திறந்தனர்.

யாழ். மாநகரசபையின் நகர சுத்திகரிப்புத் தொழிலாளர் யாழ். மாநகரசபை வாயில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் மூடப்பட்டன

குருநகர்,டிசெ.12

அரச பாடசாலைகள் யாவும் மூன்றாம் தவணை விடுமுறைக்காக நேற்றும் நேற்று முன்தினமும் மூடப்பட்டன.

ஆரம்ப வகுப்புகளை மட்டும் கொண்ட பாடசாலைகள் நேற்றுமுன்தினமும், உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் நேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்கக் கவுன்ஸிலின் கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு,டிசெ.12

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அமைக்கப்பட்ட சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான கவுன்ஸிலின் கூட்டம் திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் மத நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன், சமாதான முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி தலைமையில் இந்தக் கவுன்ஸில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கவுன்ஸிலின் கூட்டம் நேற்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# கலை, இலக்கியம், மொழியுடன் மண்ணையும் நேசித்த பற்றாளர்



## சொக்கன் ஐயாவுக்கு கலை பண்பாட்டுக் கழகம் புகழாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தேசியத் தலைவரின் வழிகாட்டுதலையும் தன் எழுத்தாற்றலால் எடுத்துக்காட்டியவர் அமரர் சொக்கன். கலை, இலக்கியம், மொழி என்பவற்றுடன் நம் மண்ணையும் நேசித்த நாட்டுப் பற்றாளர் அவர்.

தமிழறிஞர் சொக்கனின் மறைவு குறித்து விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் விடுத்திருக்கும் இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்தச் செய்தி வருமாறு -

மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களின் மறைவுச் செய்தி எம்மீது பேரிடியாகத்தான் விழுந்தது.

இம்மண்ணின் முதுபெரும் தமிழ் அறிஞரும் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கு அளப்பரிய தொண்டாற்றியவரும் தமிழீழ விடுதலையை நேசித்தவரும், எழுத்தாளரும், கவிஞரும், நாடக ஆசிரியருமான சொக்கன் ஐயா காலமானதையறிந்து நாங்கள் கலங்கியுள்ளோம்.

தமிழ் மொழியின் ஆழவேரறிந்த மூத்தோனாக இவர் எம்முடன் வாழ்ந்திருந்தார்.

தமிழ் மொழியின் சீரையும் செம்மையையும் மொழியின் வழுவிலா இலக்கண வகையையும் தெரிந்து விளங்கும் பேரறிஞராக இவர் பிரகாசித்தார்.

இவர் தமிழ் மொழிமீது இடையறாத காதலும் தமிழீழ விடுதலை மீது ஆழமான பற்றும் கொண்டவர்.

'சங்கிலியன் தொடக்கம் பிரபாகரன் காலம்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த சுவிஸ் நாட்டின் தூதுவர் பேனாடினோ றெகலோஸி யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனுடன் கலந்துரையாடுவதையும், சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் புதிய கட்டடத்தை திறந்துவைப்பதையும், அவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவதையும் படங்களில் காணலாம்.

*படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர், சாவகச்சேரி செய்தியாளர்.*

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் சுவிஸின் மனிதாபிமானப் பணி தொடரும்

## நேற்று யாழ். வந்த அந்நாட்டுத் தூதர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12

சமாதானக் காலத்தில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே எமது அரசின் முக்கிய நோக்கமாகும். இந்தப் பணி தொடரும்.

- இவ்வாறு தெரிவித்தார் சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் பேனாடினொ றெகலோஸி.

இரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவரும், சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் பிராந்தியப் பணிப்பாளர் றுடொல்வ் பன் ஹஸ்ஸர் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

இவர்கள் யாழ் செயலகத்தில் யாழ். மாவட்ட அரச அதிபர் செபத்மநாதனைச் சந்தித்துக் குடாநாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடினர்.

குடாநாட்டிற்கான விஜயம் தொடர்பாக அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது- சமாதானச் சூழ்நிலையில் எம்மால் பல்வேறு உதவிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு சுவிஸ் நாட்டு நிறுவனத்தின் மூலம் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு வேண்டிய உதவிகள் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது, கல்வி அபிவிருத்திக்கும் எம்மால் வேண்டிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் இவ்வுதவிகள் வழங்கப்படும் - என்றார்.

இச்சந்திப்பில் அரச அதிபருடன் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை மற்றும் மிதிவெடி செயற்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் எல்மோ ஆனந்தராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-5)

# நாகசுர, தவில் பரீட்சைக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.12

வட- இலங்கை சங்கீதசபை நடத்தும் நாகசுர, தவில் கலைப்பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும்படி இலங்கை இசைவேளாளர் சங்கம் கோரியுள்ளது.

முதல்முறையாக இக்கலைகளுக்கான பரீட்சைகளை வட இலங்கை சங்கீதசபை நடத்த முடிவுசெய்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது என்றும் -

இதற்கான இறுதித் தினம் எதிர்வரும் 15 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், இக்கலை தொடர்பான பரீட்சைகளில் தோற்ற உடன் விண்ணப்பிக்கவேண்டும் என்றும் - அச்சங்கத் தலைவர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் கேட்டுள்ளார். (எ-

# இன்றைய நிகழ்வுகள்

குடத்தனை,டிசெ.12

யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்கள் சங்கத்தின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கத் தலைவர் க.நாகராசா தலைமையில் யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-78)

❋ ❋ ❋

யாழ்ப்பாணம், டிசெ.12

இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் நீரிழிவு நோய்க்கான இலவசக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இணுவில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் இந்திய நீரிழிவு சங்க மருத்துவர் ஓ.எம்.எஸ். அப்துல்காதர் ஆலோசனை வழங்குவதோடு, மருத்துவ பரிசோதனைகளையும் மேற்கொள்வார். (எ-202)

❋ ❋ ❋

யாழ்ப்பாணம், டிசெ.12

சுன்னாகம் றோ.க.த.க. பாடசாலையின் ஒளிவிழாவும், பரிசளிப்பு வைபவமும் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் செல்வி அ.றொ.ஜெயநாயகி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் வலிகாமக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பிரதம விருந்தினராகவும் -

நவாலி சென்.பீற்றர் றோ.க.த.க. பாடசாலை அதிபர் சிறில் சுகந்தன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-6)

❋ ❋ ❋

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு முத்துக்குமாரு அரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கொழும்பு வர்த்தக வங்கி சர்வதேசப் பிரிவின் தலைமை அதிகாரியும் கல்லூரியின் பழைய மாணவனுமாகிய செல்வரத்தினம் இராகவன் கலந்துகொள்வார். (எ-5)

# அன்புப் பூக்கள் ஆயிரம் சொரிவோம்!



வாய்மைக்கென்று
வாய்த்தவன் தமிழை
வன்மை செய்து
வளம்பல வாக்கித்
தூய்மை செய்து
துலக்கிய ஒருவன்
தொன்மை யிருந்தவை
புதுக்கிய கலைஞன்
தாய்மை முறுவல்
தனிப்பெருங் கருணை
தேயா முகத்தன்
தொலையாச் செயலன்
சேய்மை யிடத்தைத்
தெரிந்தவன் போனான்
திகைத்தோம் விழிகள்
புனற்பெருக் கானோம்...

இலக்கணச் சதங்கை
இன்னொலி யிழந்து
இடிவிழுந் தன்னப்
புலம்பிடும் – சொக்கன்
இயற்றித் தந்த
இலக்கிய வீணை
இனனரம் பறுந்து
இழுமெனும் நாவின்
நலங்களால் மகிழ்ந்து
உலவிய காற்று
நலிந்துபோம் நாளும்
நடையொழிந் திருக்கும்
கலங்கிடா உருக்கின்
விழிகளும் உருகக்
காற்றிடை ஏறினன்
கண்டுளம் பதைத்தோம்.

அரங்கிவன் வருகையில்
அணிபல கண்டது
ஆய்கலை யாவும்
அவன்துணை யிருந்தது

இரங்கிடும் இன்றிவன்
இலையெனும் உண்மை
இடியெனச் செவியில்
ஏறிடும் வகையால்
வரங்களாய் கல்விக்
கழகத்துப் பணிகள்
வழங்கிய சொக்கன்
வாழ்விற்றன் னெல்லை
தெரிந்துதான் போனா
னாயினும் எங்கள்
தோள்வலி தொலைந்த
துன்பம றிந்தோம்.

கற்றறிந் துதவிய
கருணையன் பிரிவு
வெற்றிடம் அதனை
நிரப்பிடும் தகைமை
உற்றவர் எவரோ?
மூன்றுதற் றமிழின்
தத்துவம் விளக்கும்
தாய்மடித் தென்ன
நற்றவன் பிரிந்தான்
நாற்றிசை மறைய
வற்றிய குளமாய்
வாயெடுத் தரற்றிப்
பெற்றிகள் பெருமைப்
பேச்சொடு கைகள்
உச்சியிற் குவித்தோம்
வேறெது செய்வோம்?

உலகப் பெருமை
பிறத்தலும் முடிவும்
உணர்வோ மதனால்
ஊறிடும் விழிநீர்
அகலத் துடைத்து
அருந்தவன் தாளில்
அன்புப் பூக்கள்
ஆயிரம் சொரிவோம்.

– தமிழீழக் கல்விக் கழகம்
– தமிழீழத் தமிழ் வளர்ச்சிக் கழகம்
– தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை.

# மூன்று தலைமுறைகளின் இணைப்புப் பாலம்

## சொக்கனுக்கு ஓர் அஞ்சலிக் குறிப்பு

'சொக்கன்' என்ற நான்கெழுத்துக்குள் பெரிதும் அறியப்பட்ட ஓர் ஆளுமையை - மாமனிதனை - குறுமுனியை - தமிழ் கூறு நல்லுலகம் இழந்து நிற்கிறது. விவரிக்க முடியாப் படைப்பாக்க சாதனைகளின் சிகரமான அவரது மறைவு பேரிடியாய், தமிழர்களின் இதயத்துள் இறங்கியுள்ளது.

தமிழ் இலக்கணத்தின் ஆழ, அகலங்களை அறிந்து துறைபோகக் கற்றவர்; தமிழிலும், ஆங்கிலத்திலுமுள்ள இலக்கியக் கருவூலங்களை உளவாங்கியவர்; நாவல்களை, சிறுகதைகளை, கவிதைகளை, உருவகக் கதைகளை, நாடகங்களை, கட்டுரைகளை, விமர்சனங்களை, ஆய்வு நூல்களை, பாடநூல்களை, மொழிபெயர்ப்புக்களை ஆக்கியளித்தவர்; ஆசிரியராக, அதிபராக, விரிவுரையாளராகப் பணியாற்றி பல விழுதுகளை உருவாக்கியவர். இவ்வாறு நீளும் பல் திறப்பட்ட ஆளுமைகளின் மொத்த உருவாக அவர் திகழ்ந்தார்.

பதினான்கு வயதுமுதல் மரணம் அரவணைத்த 74 வயதுவரை அவரது கைகள் எழுதுகோலுடன் தனது எண்ணங்களையும் வண்ணங்களையும் வரைந்து கொண்டேயிருந்தன. மரபின் அடித்தளத்தில் நின்றுகொண்டு, புதுமையையும் மாற்றங்களையும் காணவிழைந்த அவர், மரபுக்கும் நவீனத்துக்கும் இடையிலான எல்லைகளை மாற்றியவராகவும் விளங்கினார்.

மூன்று தலைமுறைகளின் இணைப்புப் பாலமாகவும் அவரைக் குறிப்பிடலாம். இளந் தலைமுறைகளின் உருவாக்கத்துக்கும், அவர்களின் ஆளுமை விரிவாக்கத்துக்கும் சொக்கன் நேரடியாகவும், தோன்றாத் துணையாகவும் இருந்துள்ளாரெனில் அது மிகையல்ல.

தமிழ், தமிழ்த்தேசியம், தமிழினம் என்ற ரீதியில் தமிழின் மேன்மைக்காகவும், தமிழ்த் தேசியத்தின் உயிர்ப்புக்காகவும் அவர் பாடுபட்டார்.

தமிழ்த்தேசிய விடுதலையின்பால் அதிக ஈடுபாட்டோடு, அர்ப்பணிப்போடு பங்காற்றிய மூத்த தலைமுறைப் படைப்பாளிகள் சிலருள் அவர் தலையானவர்.

இறுதியாக, அவர் 'பாலையும் சோலையும்' என்ற சுய வரலாற்று நூலையும், வரலாற்றுப் புனைவு ஒன்றையும் எழுதியிருந்தார். இவ்விரு நூல்களின் வருகையையும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அமரர், வரலாறானமை பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணியுள்ளது.

அமரர் லண்டனுக்குச் சுற்றுப் பயணம் செய்வதற்குக் காரணமான இ.பத்மராப ஐயரின் பெரு முயற்சியால் உருவான 'பாலையும் சோலையும்' நூல் வெளிவராதிருந்தமை துரதிர்ஷ்டமே.

சில தினங்களுக்கு முன்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் அவரைச் சந்தித்த போது, அவர் நோயாலும், முதுமைத் தளர்வாலும் களைத்திருந்தார். எனினும், இலக்கிய சங்கதிகள் பலவற்றைக் கேட்டும் சொல்லியும் கொண்டிருந்தார். மரணம் நெருங்கும் கணம்வரை இந்த உணர்வே அவரைப் பற்றியிருந்தது.

தனது எண்ணங்களால் தமிழன்னைக்குப் பல மாலைகளைச் சூடிய மகாமனிதனுக்கு தமிழ் கூறு நல்லுலகம் புகழ் மாலைகளால் அலங்காரம் செய்யட்டும்.

**இயல்வாணன்.**

# ஐ.நாவின் பொதுச் செயலாளராக தொடர்ந்தும் கோபி அனானே!

## பதவி வகிக்கவேண்டுமென்கிறது அமெரிக்கா



ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் கோபி அனான் பதவி விலகவேண்டும் என்ற பிரச்சினையில், இதுவரை மௌனம் சாதித்த அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகம் தற்போது வாய் திறந்து ஆதரவு தெரிவித்துள்ளது.

ஈராக் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்ட பின், எண்ணெய்க்கு உணவுத் திட்டதை ஐ.நா. கொண்டு வந்தது. அதில் ஐ.நா. பொதுச செயலாளர் கோபி அனானின் மகன் கோஜோ அனான் முறைகேடுகள் செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. ஈராக்குக்கு உணவு விநியோகம் செய்ய அனுமதி பெற்ற நிறுவனம், கோஜோவுக்கு மாதந்தோறும் லஞ்சப் பணமாக ரூபா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அனுப்பியமை தெரியவந்தது.

இதையடுத்து கோபி அனான் பதவி விலக வேண்டும் என்று பலர் பகிரங்கமாகக் கூறினர். ஆனால், அமெரிக்கா தனது கருத்தைத் தெளிவாக்கவில்லை. ஆளும் குடியரசுக் கட்சி செனட்டர்கள் கூட கோபி அனான் பதவி விலக வேண்டும் என்று பேட்டியளித்தனர். அது குறித்து புஷ் மழுப்பலாகவே இதுவரை பதில் சொல்லிவந்தார். இந்நிலையில், கோபி அனான பதவி விலகத் தேவையில்லை. அவர் ஐ.நா. பொதுச் செயலராக நீடிக்கவேண்டும் என்று அமெரிக்கா திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜான் டேன் போர்த் நேற்றுமுன்தினம் நிருபர்களைச் சந்தித்துக் கூறியதாவது:-

கோபி அனானுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கவில்லை என்ற கருத்து ஊடகங்களிலும், அமெரிக்கப் பிரதிநிதிகளிடமும் நிலவி வருகின்றது. அதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஐ.நா. பொதுச் செயலாளராக கோபி அனான் நீடிக்க வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நிலை. நாங்கள் அவருக்கு முழு ஆதரவு அளிக்கிறோம். எனக்குத் தெரிந்த வரையில் கோபி அனானின் செயற்பாடுகளில் யாரும் சந்தேகம் தெரிவிக்கவில்லை. யாருமே அவர்மீது சந்தேகப்படவுமில்லை. இந்தக் கருத்தை வெள்ளைமாளிகை சார்பாக நான் சொல்கிறேன - என்றார். (8)

## ஜெயேந்திரர் விடுதலைக்காக 108 துறவிகள் இணைந்து யாகம்

ஜெயேந்திரர் விடுதலைக்காக சிவசேனா சார்பில் 108 துறவிகள் கலந்துகொள்ளும் யாகம் கன்னியாகுமரியில் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவிருப்பதாக சிவசேனா மாநிலத் தலைவர் நாராயணன் இத்தகவலை வெளியிட்டார்.

ஜெயேந்திரர் விடுதலையாக வேண்டும். அவர் நலத்துடன் மீண்டும் மடத்திற்கு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் வரும் 30ஆம் திகதி கன்னியாகுமரியிலுள்ள திரிவேணி சங்கமத்தில் 108 துறவிகள் கலந்துகொண்டு யாகம் நடத்துகின்றனர். (8)

உலக அரங்கில்

# உலகில் மிக உயரமான கட்டடம்; 'சாம்சங்' நிறுவனம் கட்டுகிறது

சியோல்,டிசெ.12

உலகிலேயே மிக உயரமான கட்டடத்தை டுபாயில் 'சாம்சங்' நிறுவனம் கட்டவுள்ளது.

இதற்கான கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரியில் ஆரம்பமாகவுள்ளதாக 'சாம்சங்' நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் வியாழக்கிழமை தெரிவித்தார்.

கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை தென் கொரிய நிறுவனம் பெற்றுள்ளது. 1200 கோடி ரூபா செலவில் உருவாகும் இந்த கட்டடத்தின் உயரம் 800 மீற்றர். 160 மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத்தின் மொத்தப் பரப்பளவு 5 லட்சம் சதுர அடியாக இருக்கும். ஹோட்டல்கள்,வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள், குடியிருப்புகள் என அனைத்து வசதிகளும் இதில் செய்யப்படவுள்ளன. 2008ஆம் ஆண்டு நவம்பரில் கட்டிமுடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (8)




ஜப்பானின் 'பனசொனிக்' நிறுவனம் புதிய பற்றறி செல் காரை உருவாக்கியிருக்கிறது. இந்த நவீன கார் 'ஒக்சிரைட்' என்ற 2 பட்டரி செல் மூலம் இயங்குகிறது.
பெற்றொல், டீசல் எதுவும் தேவையில்லை. 2.9 மீற்றர் நீளம் உள்ள இந்தக் காரின் எடை 18.5 கிலோ. 2பட்டரி செல்களைப் பொருத்தினால் 1300 மீற்றர் தூரம் இது ஓடும். 50 கிலோவுக்கு அதிகமான எடையைச் சுமந்து செல்லும். (8)

# சவூதி அணு ஆயுதம் தயாரிக்க பாகிஸ்தான் தொழில்நுட்ப உதவி

வாஷிங்டன்,டிசெ.12

சவூதி அரேபியா அணு ஆயுதம் தயாரிப்பதற்கு பாகிஸ்தான் தொழில்நுட்ப உதவி வழங்கியுள்ளது. இந்தத் தகவலை ஈரான் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கும், சவூதி அரேபியாவுக்கும் இடையில் 2003ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின்படி அணு ஆயுதம் தயாரிக்க தொழில் நுட்ப உதவிகளை பாகிஸ்தான் செய்துகொடுக்கும்.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான அணு ஆயுதம் தயாரிக்க தொழில்நுட்ப உதவிகளை பாகிஸ்தான் செய்து கொடுக்கும்.

இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையேயான அணு ஆயுத ஒத்துழைப்பும் முன்னேற்றமடைந்துள்ளது. இதனால், விரைவிலேயே சவூதி அரேபியா அணு ஆயுதம் தயாரிக்கும்.

இந்தத் தகவல் ஈரான் மூலம் கிடைத்துள்ளது. அணு ஆயுதம் தயாரிக்கப் பயன்படும் யுரேனியத்தைச் செறியூட்டும் பணியை ஈரான் கைவிட்டது. இதுதொடர்பாக இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் ஈரான் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அப்போதுதான் ஈரான் வட்டாரங்கள் இந்தத் தகவலை கசியவிட்டன. இதை இஸ்ரேல் பத்திரிகையான 'ஹாரேட்ஸ்' வெளியிட்டுள்ளது. (8)

## சுரங்கத்தில் வெடிவிபத்து: சீனாவில் 33பேர் பலி!

சீனாவில் கடந்த 9ஆம் திகதி ஏற்பட்ட சுரங்க விபத்தில் 33பேர் பலியாகினர்.

சீனாவின் பல்வேறு மாகாணங்களில் நிலக்கரி சுரங்கங்கள் ஏராளமாகவுள்ளன. போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததால் இங்குள்ள சுரங்கங்களில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக் கணக்கில் சுரங்க ஊழியர்கள் பலியாவது வாடிக்கையாகிவிட்டது.

சீனாவின் வடக்குப் பகுதியில் ஷான்சி மாகாணத்தின் யாங்யுயான் நகரில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் கடந்த 9ஆம் திகதி வெடி விபத்து ஏற்பட்டது. வெடி விபத்து ஏற்பட்ட போது 71 தொழிலாளர்கள் சுரங்கத்துக்குள் இருந்தனர். இதில், 33 தொழிலாளர்கள் விபத்தில் சிக்கிப் பலியாகினர். சுரங்கம் முழுவதும் விஷவாயு பரவியுள்ளதால் மீட்புப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. வெடி விபத்துக்கான காரணம் குறித்து ஆராயப்பட்டு வருகிறது. (8)

# இந்தியாவுடன் நெருக்கமான உறவை வைத்துக் கொள்ள அமெ. விருப்பம்

## ரம்ஸ்பீல்ட் தெரிவிக்கிறார்



புதுடில்லி,டிசெ.12

பாதுகாப்புத் துறையில் மேலும் நெருக்கமான உறவுகளை வைத்துக் கொள்ள அமெரிக்கா விரும்புவதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

இந்தியா வந்துள்ள ரம்ஸ்பீல்ட் பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் 90 நிமிடங்கள் பேசினார். அதன் பிறகு இருவரும் நிருபர்களிடம் கூட்டாக வியாழக்கிழமை பேட்டி அளித்தனர்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவை நடைமுறைக்கு உகந்த வகையில் மாற்றுவது என்பதில் இரு நாடுகளுமே தயாராக உள்ளன. பாதுகாப்புத்துறை உறவை மேலும் நெருக்கமாக வளர்த்துக்கொள்ள அமெரிக்கா விரும்புகிறது.

கடந்த 4 ஆண்டுகளாக அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையே கூட்டுறவு மலர்ந்துள்ளது. இது மேலும் வளரவேண்டும். இருநாடுகளுக்கும் இடையே உறவு அதிகரிக்கிறது என்பதை கூட்டு இராணுவப் பயிற்சி, பாதுகாப்புத்துறை கருத்துப்பரிமாற்றங்கள் தெளிவுபடுத்தும்-என்றார் ரம்ஸ்பீல்ட்.

இந்தியாவை மிக மிக முக்கிய கூட்டாளியாக அமெரிக்கா கருதுகிறது. அதனால்தான் ஆப்கானிஸ்தானில் புதிய அதிபர் பதவியேற்பு முடிந்ததும் இந்தியாவுக்கு வந்தேன். இங்கு வந்ததை எனக்கு கிடைத்த அரிய பெருமையாகக் கருதுகிறேன் என்றார்-அவர் .(8)

நத்தார் நற்சிந்தனை
"ஈசாயின் குலக்கொழுந்து ஒருவர் வருவார். மக்களினங்களை ஆளும் தலைவராய் அவர் தோன்றுவார். மக்களினங்கள் அவரையே எதிர்நோக்கி இருப்பர்."
உரோமையர் 15:12-13
SHARP
பிறவுண்ஸ் be sharp
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 5150

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road, Jaffna. Tel.:021-2226242 Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road, Trincomalee.
Tel.:026-2221519 Fax:026-2221519
Branch
No. 295, Jampettah Street, Colombo 13 Tel.:2430782 Fax:2430782
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு

ஹரிகனன்
கலண்டர் & டயரிகள்
மிகக் குறைந்த விலையில்
2005
Harikanan Printers
424, K.K.S Road, Jaffna.
021-2222717
4590123

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

ஏழாலை மேற்கு, நாக்கியம்புலம் சுன்னாகம் பகுதியில் 10 பரப்பு சோலையான வளவில் சகல வசதிகளுடன் கூடியவீடும், 4½ பரப்புள்ள இருகடைக் கட்டடத்தொகுதிகளும் மற்றும நல்ல நிலையிலுள்ள கேம்பிறிச் வானும் விற்பனைக்குண்டு. தொடர்பு: J.மொண்பேட், நாக்கியம்புலம், சுன்னாகம். (39313)

1½மாதம் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டி வற்பனைக்குண்டு (புளு நீக்கப்பட்டது). தொடர்பு: P.கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மாணிப்பாய். (39528)

வீட்டுப் பாவனைக்கும் நகைக் கடைக்கும் பொருத்தமான இரும்புப் பெட்டகம், இரும்புக் கேற், சாப்பாட்டு மேசை, கதிரைகள் சோபா செற், கொமினிக்கேசன் மேசை, கதிரைகள், சிறிது காலம் பாவித்த L.G. குளிர்சாதனப் பெட்டி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 361, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (நல்லூர் ஆலயப் பின் வீதிக்கு அருகில்).(39536)

நல்ல நிலையிலுள்ள VIDEO டெக் விற்பனைக்குண்டு. AKAI, JVC டெக் மற்றும் AUDIO ரெக்கோடிங் கெசட் டெக் AKAI, TECHNICS, AUDIO FISHER CD Player, TV என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ஜெகன் வீடியோ ஓடியோ சென்ரர், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி. T.P.: 0777 042716. (39513)

நல்ல நிலையிலுள்ள போட்டோப் பிரதி எடுக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.சிறிதரன், இல.964, கே.கே.எஸ். வீதி (நாச்சிமார் கோயிலடி), யாழ்ப்பாணம். T.P.: 021 - 222 2541. (சி-39548)

வளர்ப்பு மீன்கள், தொட்டிகள், அலங்காரப் பொருள்கள், பல இன குருவிகள், கூடுகள், பூங்கன்றுகள், சாடிகள், பொம்மேரியன் நாய்க் குட்டிகள் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சனியர் லேன், தட்டாதெருச் சந்தி அருகில், யாழ்ப்பாணம். (39572)

## வீடு விற்பனைக்கு

சுதுமலை வடக்கு ஒழுங்கையில் 4பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவசுப்பிரமணியம், அரசினர் வைத்திய சாலைக்கு அருகில், அச்சுவேலி. T.P.: 0777 - 111417. (39457)

## வீடு, காணி விற்பனைக்கு

ஆலயங்கள், குருத்துவக் கல்லூரி அமைந்துள்ள சூழலில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும், 7 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிக்குப் பின்னரும் கிழமை நாள்களில் மாலை 4 மணிக்குப் பின்னரும் தொடர்புகொள்ளலாம். தரகர் தேவையில்லை. தொடர்புகளுக்கு: 22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (39436)

## காணி விற்பனைக்கு

யாழ். பிரதான வீதி, முதலாம் குறுக்குத் தெருச் சந்தியில் அமைந்த 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6736860, 021 222 5572. (39550)

நல்லூர் துர்க்கா மணிமண்டபத்துக்கு அண்மையில் 2 பரப்புக் காணி (சுற்றுமதிலுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: காலை 8.00 - மாலை 5.00 மணி வரை. T.P.: 021 2225604, 0777 495229. (39551)

கொக்குவில் கிழக்கில், ஆடியபாதம் வீதியை அண்டியும் யாழ்.மருத்துவ பல்கலைக்கழகத்தின் முன்பாகவும் கோணாவளை வைரவர் கோயிலுக்கு அருகில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக குண்டு. தொடர்பு: 0777 370178. (சி-39538)

சுன்னாகத்தில் காங்கேசன்துறை வீதியில் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையல்லை. நேரில் தொடர்புகொள்ளவும். தொடர்பு: இல. 0112 - 554912. (சி-39551)

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள NISHAN LAGO VAN 52 - XXXX தொடர் இலக்கமுடையது விற்பனைக்குண்டு. தொடர்பு: 119B, கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம் (பெந்தகோஸ் சபைக்கு அருகில்). T.P.: 5655. (39570)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக் குண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (39511)

## வீடு விற்பனைக்கு

யாழ். மருத்துவீடத்துக்க முன்பாகச் செல்லூர் ஒழுங்கையில், துர்க்கை அம்மன் கோயிலுக்கு அண்மையில் 2பரப்புக் காணியில் 5அறைகள், குசினி, கூடத்துடன், 2கழிகூடங்கள், தண்ணீர்த்தாங்கியும் இருபக்க மதிலுடன் பயன்தரு மரங்களுமுடைய கொக்குவில் கிழக்கு, "கல்நிலம் கலட்டி" வீடு வளவு விற்பனைக்குண்டு. தரகர் இன்றி நேரில்தொடர்பு கொள்ளவும். தொடர்பு: வை.நடராசா
இல.10. அரசடி லேன். வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம்.
(39557)

## கடை விற்பனைக்கு

யாழ். கன்னாதிட்டி வீதியில் கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: 021 - 222 5572, 077 6736860 (காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை). (39552)

## மாடி வீடு விற்பனைக்கு

யாழ்.கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியில் சுற்று மதிலுடன் கூடிய 2½ பரப்புக் காணியும் சுற்று மதிலுடன் சேர்ந்த மாடி வீட்டுடன் கூடிய 3½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6736860, 021 222 5572. (39549)

## இறைச்சிக்கோழிவிற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுககுத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39483)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் தினமும் விறபனைக்குண்டு. புறொயிலர், கல்பேட் கூடிய நிறையில் தினமும் சுத்தஞ்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல்செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (39521)

## நாய்க்குட்டி விற்பனை

சுத்தமான Original Dobermann Pincher, Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39483)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Original Prima பேட்டுக்குஞ்சுகள் 2 கிழமை தொடக்கம் 8 கிழமை வரையுள்ளது உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (39385)

## தேவை

பகுதிநேர விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
தொடர்பு: 0714810316.
(சி-39783)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, இருமுறை தடுப்பு மருந்தூட்டப்பட்ட Prima Original Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.12.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பரு.நெல்லியடிக் கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில்,சுன்னாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (39386)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு, இந்து, கிறிஸ்தவ, அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மணமக்கள் உள்ளனர். தொடர்பு: கல்யாணவேலன் சர்வதேச திருமண சேவை, இல.72, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (39530)

1965ஆம் ஆண்டு, Canada Computer Engineer மணமகனுக்கு செவ்வாய்க் குற்றமுள்ள Doctor, Engineer, B.Sc. மணமகள் தேவை. மணமகன் இங்கு வந்துள்ளார். தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (கட்டணம் ஒன்றும் இல்லை). T.P.: 021 - 4591417. (39563)

## தவறிவிட்டது

இல.235/13, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆசைபபிள்ளை இரட்ணராஜா என்பவருடைய JK 9363 இலக்க CD HONDA DAWN மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ் வரி, பற்றுச்சீட்டு, வாகன அடையாள அட்டை என்பன 08-12-2004 புதன்கிழமை திருநெல்வேலிக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (39529)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு:
BIO TEC INTERNATIONAL
இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021- 4590907.
(38381)

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 35 வயது, அச்சுவினி நட்சத்திரம் கிரகபாவம் 53½, செவ்வாய்க் குற்றமற்ற, ஆசிரியையாக (B.A.Dip.) கடமைபுரியும் மணமகளுக்கு அரச தொழில் புரியும், உள்ளூர் மணமகன் தேவை. தொடர்பு: 0776 128431. (C/39786)

1971இல் பிறந்த, கொழும்பில் பொறியியலாளராகக் கடமையாற்றும், யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லக்கினத்தில் செவ்வாயுள்ள மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. டாக்டர், எஞ்ஜினியர், விரிவுரையாளர், எக்கவுண்டன் ஆகியோர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு: விளம்பர இல.2453, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (39419)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 25 வயது, மூல நட்சத்திரம் 4ஆம் பாதம், கிரக பாவம் 25, 4இல் செவ்வாயுள்ள, GAQ படித்த மணமகளுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை. தொடர்புகளுக்கு: திரு.ச.ஞானேந்திரன், 98/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். T.P.: 222 7604. (39569)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் கௌரவ தொழில் பார்க்கும், 29 வயதுடைய, அழகிய, செவ்வாய்க்குற்றமற்ற, நிரந்தர வதிவிட உரிமைபெற்ற தமது மகனுக்குப் படித்த, அழகிய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: 45, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (39352)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயதுடைய, ரோகிணி நட்சத்திரம், செவ்வாய்க் குற்றமற்ற, கிரகபாவம் 6 உடைய, பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு படித்த, அழகிய மணமகளைத் தாயார் தேடுகின்றார். குடும்ப விவரம், ஜாதகக்குறிப்புடன் தொடர்புகொள்ளவும். விள.இல.2451, மே/பா, உதயன். (39562)

## பராமரிப்பாளர் தேவை

பெண் நோயாளரைப் பராமரிப்பதற்கு நடுத்தர வயதுடைய, நல்லொழுக்கமுள்ள பராமரிப்பாளர் தேவை. உணவு, இருப்பிட வசதியுடன் ஊதியமாக ரூபா 4000 வழங்கப்படும். தொடர்பு: நா.ரகுமார் 206A, செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (39560)

## உடுவில் மகளிர் கல்லூரி
### 2005ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பரீட்சை

2005ஆம் ஆண்டிற்கு விண்ணப்பித்த தரம் 1 தவிர்ந்த அனைத்து மாணவர்களும் நாளை (13.12.2004) திங்கட்கிழமை காலை 9மணிக்குப் பாடசாலையில் நடைபெறவிருக்கும் அனுமதிப்பரீட்சைக்குத் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

- அதிபர்.

(சி-39738)

சகல வயதினர்களுக்கும்!
ஞாபகசக்தி குறைவாக உள்ளதா? இதோ பாவியுங்கள்!

## "தாரணி" பிராமி மூலிகைப் பாணி (சிரப்)




நன்மைகள்:
கிரகிக்கும் சக்தி அதிகரிக்கும்,
புத்திக்கூர்மையை அளிக்கும், சருமநோயைக் குணப்படுத்தும், குரல்வளத்தை மேம்படுத்தும்,
காக்கை வலிப்பை நீக்கும்,
உளநோய் குணமாகும்.
பாலுடன் சேர்த்தும் அருந்தலாம்.

இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பாகும். யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்துப் பார்மஸிகளிலும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) ☎:021 222 2567.

SriLanka Ayurvedic Corporation
P.O.Box: 20, Nawinna, Makaragama.

## 35ஆம் நாள் நினைவஞ்சலி



### அம்பலவாணர் அட்சரலிங்கம் (கண்டு)

"மலராத மொட்டாக முடிந்ததோ உன்வாழ்வு?"

துயருறும்
நண்பர் குழாம்.

வினோபா சனசமூக நிலையம்,
வினோபா நகர், கச்சாய்.

(39565)(26-14-17)

## பிங் பேர்ள்
### அழகு நிலையம்

திருமதி S. ரஞ்சினி
அழகுக்கலை நிபுணர்

- ✦ இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம்
- ✦ பேசியல்
- ✦ மேக்கப்
- ✦ சாறி ரசில்ஸ்
- ✦ கேக் மேக்கிங்
- ✦ மலர் அலங்காரம்

இந்தியாவில் பயிற்சிபெற்ற ஒப்பனையாளரினால் நடத்தப்படுகின்றது.

இலங்கையில் எந்தப் பகுதிக்கும் மேலதிக கட்டணமின்றி வருகைதந்து மேக்கப் செய்துதரப்படும்.

ந.பாஸ்கரன் (லொறி).
சின்னக்கடை,
பொலிகண்டி.
077 - 6139898.

9/1, Ruban Peiris Mawatha,
Off Hospital Road,
Dehiwala.
011 - 2732523.
077- 3109495

(39341)(26-14-17)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சரவணபவன்

(தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியர்)



தெல்லிப்பழை - விழிசிட்டியைப் பிறப்பிடமாகவும் இடப்பெயர்வினால் கோண்டாவில் கிழக்கு, கனகசபாபதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியருமான சுப்பிரமணியம் சரவணபவன் நேற்றுமுன்தினம் (10-12-2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அமரர் சரவணபவன் விழிசிட்டி காலஞ்சென்ற சுப்பிரமணியம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் விழிசிட்டி நடராசா - கனகமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரியின (சீமாட்டி) அன்புக் கணவரும் சுகிர்தன், சுதாகரன், நிலானி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தடாதகைப்பிராட்டியின் தம்பியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-12-2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு அவரது கோண்டாவில் கிழக்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

கனகசபாபதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (39540)(26-14-17)

தகவல்: க.நடராசா (மாமனார்),
ச.நாகேஸ்வரி (துணைவியார்).

உதயன்

## மனித உரிமைகளை மதிப்பது தேசக் கட்டுமானத்தின் அங்கம்

நோயும் பிணியும் வருத்துவன. அந்த நோய்க்கு நிவாரணம் தேடி மருத்துவம் செய்யும் போது சில சமயங்களில் கசக்கும். கசாயங்களையும் அருந்த வேண்டியிருக்கும்; ரணவேதனையையும், எரிச்சலையும், நோவையும் தரும் மருந்துகளைப் பூசவேண்டியிருக்கும். சில சமயங்களில் வருத்தத்திலிருந்து விடுபடுவதற்காக உடலை வெட்டிக் கிழிக்கும் சத்திரசிகிச்சை கூடச் செய்ய நேரிடும்.

வருத்தத்தைத் தவிர்ப்பதற்காக வருந்த வேண்டிய - வருத்தம் தருகின்ற - சிகிச்சை முறைகளுக்கு நாம் உட்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அப்படி, சிகிச்சை பெறுவதைப் பார்த்து வருத்தத்திலிருந்து (நோயிலிருந்து) விடுபடுவதற்கான சிகிச்சையென்று கூறிக்கொண்டு மீண்டும் வருந்துகின்றாயே என்றுகேட்க முடியுமா? அப்படிக் கேட்டால் எம்மை ஏளனமாய்ப் பார்க்க மாட்டார்களா?

அதுபோன்ற அனுபவ நிலைமையைத்தான் நமது விடுதலைப் போராட்டத்துக்கு மத்தியில் நாம் எதிர் கொள்கின்றோம்.

நமது விடுதலைப்போர் எதற்கு? நமது தாயக மண்ணின் மீட்புக்கான யுத்தம் எதற்காக?

இழந்த உரிமைகளை மீட்டு நிலைநாட்டுவதற்கான போராட்டமே இது. சுருங்கக் கூறின் உரிமைக்கான போர் இது.

அந்த உரிமைக்கான போராட்டத்தை நாம் மேற்கொள்ளும் போது அதை முன்நகர்த்துவதற்காக, அந்த போராட்டக் களத்தில் பல்வேறு சிக்கல்களையும், நெருக்கடிகளையும் எதிர்கொள்கிறோம். நமது சமூகம் கட்டுமட்டில்லாத நெருக்கடிகளையும், கஷ்டங்களையும் எதிர்கொள்கின்றது. கட்டுப்பாடுகளையும், மட்டுப்பாடுகளையும் தமக்குத் தாமே விதித்துக் கொள்ளும் - வருத்திக் கொள்ளும் - இக்கட்டுக்குக்கு நமது இனமும், சமூகமும் தள்ளப்படுகின்றது.

சுதந்திரத்துக்காகவும், உரிமைக்காகவும் போராடப் புறப்பட்ட நமது சமூகம், அந்தப் போராட்டத்தின் காரணமாக சில சுதந்திரங்களையும், உரிமைகளையும் கூடத் தற்காலிகமாக இழக்கவேண்டியதாகின்றது.

உடலில் வருத்தம் தீருவதற்காக மருத்துவம் செய்யப் புறப்பட்டவர் அந்த மருத்துவத்தின் வருத்தத்தையும் (நோவையும்) தாங்கிக்கொள்ளுபவராக இருக்கவேண்டும். அப்போதுதான் மருத்துவம் சித்திபெறும்; பலன் கிட்டும்.

அதுபோன்று உரிமைக்காகப் போராடப் புறப்பட்ட இனம் அந்தப் போராட்டத்தின் நடுவே, அந்தப் போராட்டத்தின் வெற்றிக்காகத் தனது உரிமைகள் சிலவற்றை தாரைவார்க்கவும், விட்டுக் கொடுக்கவும் கூட நேரலாம். அதற்கு அது சித்தமாயிருக்கவேண்டும்.

நோய்ச் சிகிச்சை, என்றோ ஒருநாள் சித்திபெற்று பலன் கிட்டும் போது சிகிச்சையின் போது அனுபவித்த வருத்தமும் போய், நோயும் (வருத்தமும்) நீங்கிவிடும். அந்தச் சித்தி என்றோ ஒருநாள் கிட்டித்தானே ஆகவேண்டும்? எந்நேரமும் சிகிச்சையின் பெயரால் வருந்திக் கொண்டிருக்க முடியுமா?

அதே ஒப்பீடு நமது விடுதலைப் போராட்டத்திலும் கனகச்சிதமாகப் பொருந்துகின்றது.

உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை எமது இனம் ஆரம்பித்தபோது, அந்தப் போராட்டத்தின் நலனுக்காக எமது நலன்களை - உரிமைகளை - நாம் விட்டுக் கொடுத்தோம். இப்போது அவற்றை மீண்டும் நிலைநாட்டி நாம் பெற்றுக் கொள்ளும் காலம் கனிகிறது.

கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் அந்தக் காலத்தின் கட்டாயத்தின் பிரதிபலிப்பான தோற்றப்பாடேயன்றி வேறில்லை. போராட்டக் களத்தின் - யுத்த சூழ்நிலைகளுக்கு மத்தியில் - அடிப்படை மனித உரிமைகளை நிலைநாட்டும் ஓர் ஊற்றுக் கண்ணாக இந்தச் செயலணி தோற்றம் பெற்றிருக்கின்றது.

நமது இனத்தின் தேசக் கட்டுமானத்துக்கு ஊக்கமும், உத்வேகமும் தரும் விதத்தில் இந்த அமைப்பை விருத்தியடையச் செய்வதில் நமது போராட்டத்தின் தலைமை முழுமூச்சாக நிற்கின்றது.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் தனது முதலாவது மனித உரிமைகள் தினத்தை நேற்றுமுன்தினம் அனுஷ்டித்த போது அங்கு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் இதனையே அங்கு பிரதிபலித்தார்.

"எமது மக்களின் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை வெளிக்கொணரும் வகையிலும் - எமது தேசக் கட்டுமானத்துக்குத் துணைநிற்கும் வகையிலும் - எமது இனத்தின் விழுமியங்கள், கோட்பாடுகளை தெளிவுபடுத்தி, தேசத்தோடு சேர்த்து மனிதஉரிமைகளையும் கட்டி வளர்த்துப் பேணுவதில் இந்தச் செயலகம் சீரிய பணியாற்றும்," - என்று இது தொடர்பான நிகழ்வில் குறிப்பிட்ட தமிழ்ச்செல்வன் மற்றொரு தகவலையும் வெளியிட்டார்.

"கடந்த காலத்தில் எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்களும் இனிமேல் வெளிக் கொணரப்படும்?" - என்று அவர் குறிப்பிட்டிருப்பது முக்கிய அம்சம்.

பௌத்த, சிங்கள மேலாண்மைவாதிகளின் அடக்குமுறைகளால் நாம் இழந்த உரிமைகளை மீட்டெடுக்கப் போராடும் அதேசமயம், நமக்குள்ளும் நம்மவர்களின் உரிமைகள் மதிக்கப்படுவதையும், பேணப்படுவதையும் நாம் உறுதிசெய்தாக வேண்டும். அதற்கு, தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருப்பது போல நமது மனித உரிமைகள் செயலகம் நல்லதோர் பங்கு பணியாற்ற முடியும்.

# தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப் படவேண்டும்

### அகில இலங்கை இந்து மாமன்றம் அரசிடம் கோரிக்கை

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவும்.

இவ்வாறு அரசிடம் கோரியுள்ளது அகில இலங்கை இந்து மாமன்றம்.

இது விடயமாக மேற்படி மன்றம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரு தசாப்தங்களுக்கும் மேலாகத் தொடர்ந்த யுத்தநிலை காரணமாக இந்நாட்டு மக்கள் குறிப்பாக தமிழ்பேசும் மக்கள் சொல்லொண்ணா வேதனைகளை அனுபவித்து வந்திருக்கின்றனர். யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து நிரந்தர சமாதானம் வரும் என நம்பியிருந்த மக்களுக்கு யுத்தம் மீண்டும் ஏற்படுமா என்ற பீதி இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இந்நிலையில் அகில இலங்கை இந்து மாமன்றம், இந்நாட்டு இந்து மக்களின் குரலாக ஒரு பகிரங்க வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை இன்னும் காலம் தாழ்த்தாது உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்து மாமன்றம் அரசிடம் அவசரமாக வேண்டுகோள் விடுக்கிறது என்றுள்ளது.

# யாழ். மாவட்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்த பல இடங்கள் தெரிவு

யாழ். மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

சுற்றுலாத்துறை அபிவிருத்தி செய்யப்படவுள்ள கடற்கரைப் பிரதேசங்கள், நீர் ஊற்றுக்கள், பறவைகள் கூடும் இடங்கள், பிரபல புராதன ஆலயங்கள் உள்ள இடங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

இது தொடர்பான ஒரு நாள் செயலமர்வு இம்மாத நடுப்பகுதியில் உள்ளூராட்சி ஆணையாளரினால் நடத்தப்படவுள்ளது.

சுற்றுலாத்துறை மேம்பாடு குறித்த விவரங்களையும் -

புள்ளி விவரங்களையும் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து.விஜயலட்சுமி 72 உள்ளூராட்சி சபைகளிடமும் இருந்துபெற்றுள்ளார்.

(ஐ-185)

# காணாமல் போனோர் குறித்து ஜனாதிபதியை சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடுசெய்து தருக!

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் அன்னையர் முன்னணி கோரிக்கை

யாழ்ப்பாணம்.டிசெ.12

வடபகுதியில் 1995 முதல் 1996 ஆம் ஆண்டுவரையிலான காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போன இளைஞர், யுவதிகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் அன்னையர் முன்னணி மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

சர்வதேசமனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் காலை யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகம் முன்றிலில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினர். போராட்டத்தின் இறுதியில் இது விடயமாக மகஜர் ஒன்றை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் றொகான் சந்திரசேகரவிடம் கையளித்தனர்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

முன்னர் பல தடவைகள் எமது அன்னையர் முன்னணி இவ்வாறான மகஜர்களைக் கையளித்திருந்தது. சில தமிழ்க் குழுவினரும், படையினரும் திட்டமிட்டுச் செய்த நடவடிக்கை காரணமாகவே எமது பிள்ளைகள் கைதுசெய்யப்பட்டனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

எனவே, எமது உறவுகள் காணாமற்போன விடயம் தொடர்பாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடி நல்லதொரு முடிவொன்றைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து தரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

யாழ். மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தினாலும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு நேற்று மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், அருட்திரு சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார், அ.பஞ்சலிங்கம், என்.சோதிநாதன், சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் றொகான் சந்திரசேகரவிடம் இந்த மகஜரைக் கையளித்தனர்.

(எ-5-6-12-86)

# ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல் கருத்துச் சுதந்திரத்துக்கெதிரான செயற்பாடு

### ஊடகத்துறை பிரதியமைச்சர் கண்டனம்

கொழும்பு.டிசெ.12

வடக்கு-கிழக்கிலுள்ள ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான செயற்பாடுகளாகும்.

- இவ்வாறு ஊடகத்துறை பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

சக்தி தொலைக்காட்சி நிறுவனத்தின் யாழ்ப்பணக்கிளை, தினக்குரல் பத்திரிகையின் மட்டக்களப்பு கிளை ஆகியவற்றின் மீது கடந்தவாரம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு-கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் கருத்துச் சுதந்திரம் கடந்த இரு தசாப்தங்களாக பக்கசார்புடையதாகவே இருந்து வந்துள்ளது. ஊடகவியலாளர்களும், ஊடக நிறுவனங்களும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே தாம் சார்ந்த பக்கத்துச் செயற்பாடுகளைச் செய்து வந்துள்ளனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட எதிரும் புதிருமான ஆயுதப் பின்னணி கொண்ட சக்திகள் தமக்கு மாற்றமான கருத்துக்களை சீரணித்துப் பழகுவதை விடுத்து அவற்றை அழித்தொழிப்பதிலேயே ஆர்வம் காட்டி வந்துள்ளனர். பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கைகளினால் ஊடகவியலாளர்கள் உயிர்ப்பலி கொள்ளப்பட்டதும், ஊடக நிறுவனங்கள் உருக்குலைக்கப்பட்டதும் வடக்கு - கிழக்கின் எழுத்து, பேச்சுச் சுதந்திர வரலாற்றில் இரத்தக்கறை படிந்த பக்கங்களாகும்.

02.12.2004 இல் எமது அமைச்சுக்கான விவாதம் இடம்பெற்றபோது அரச தரப்பு உறுப்பினர் ஒருவர் சக்தி தொலைக்காட்சியில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் என்று குறிப்பிட்டுப் பேசியிருந்ததாக இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்திருந்தது.

தகவல் மற்றும் ஊடகத்துறைப் பிரதியமைச்சர் என்ற அந்தஸ்தில் சக்தி தொலைக்காட்சி சேவையில் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் அனைவரும் விடுதலைப் புலிகள் அல்லர் என்பதை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்துக்கு மிகுந்த கரிசனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வடக்கு - கிழக்கில் எல்லா சமூகங்களினதும் எல்லா அரசியல் சக்திகள், குழுக்களினதும் கருத்துகளுக்கு இடமளிக்கப்படவேண்டுமென்ற ஜனநாயக சிந்தனையை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வளர்த்தெடுக்க வேண்டும் - என்றுள்ளது.

(8-204)

**நாளை**

*கார்த்திகை 28*
*திங்கட்கிழமை*
*(13.12.2004)*
*திதி: துதியை*
*பின்னிரவு 03.09*
*நட்சத்திரம் : மூலம்*
*பிற்பகல் 12.20*
*சுபநேரம்: 12.21 - 11.51*
*ராகுகாலம்: 07.51 - 09.21*
*(பழையநேரப்படி)*

# குடாநாட்டில் காணிக் கச்சேரி நடத்துவதற்கு அனுமதி

கொக்குவில்.டிசெ.12

யாழ். மாவட்டத்தில் சில கிராமங்களில் காணிக் கச்சேரி நடத்துவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கான அனுமதியை வடக்கு - கிழக்கு மாகாண காணி ஆணையாளர் இ.இரவீந்திரன் சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களுக்கு வழங்கியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மூளாய் கிராம அலுவலர் பிரிவிலுள்ள பொன்னாலை கிராமத்தில் 05 வீட்டுத்திட்டம், 10 வீட்டுத் திட்டம், 20 வீட்டுத்திட்டம், 30 வீட்டுத் திட்டம் ஆகிய வீட்டுத் திட்டங்களுக்கும் -

அராலி தெற்கு, அராலி கிழக்கு வீடமைப்புத்திட்டங்களுக்கும் -

அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் கற்கோவளம், தும்பளை, பொலிகண்டி, துன்னாலை ஆகிய கிராமங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சில பிரதேச செயலகங்கள் ஏற்கனவே காணிக் கச்சேரி நடத்துவதற்கான அனுமதிக்கான விவரங்களை வடக்கு - கிழக்கு மாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பிவைத்துள்ளன.

(3-76)

**உதயவாக்கு**

பேறில் எதிரி எவ்வளவுக்கு எவ்வளவு மோசமானவனாக இருக்கிறானோ அந்தளவுக்கு நாம் செய்வதெல்லாவற்றையும் நியாயப்படுத்திக்கொள்வோம்...

# பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெறுவதற்கு இந்தியாவின் முயற்சி; முஷாரப்பின் முட்டுக்கட்டை?

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் கட்டமைப்பு சீர்ப்படுத்தப்படவேண்டும் என்பதை பல நாடுகள் வலியுறுத்திவரும் அதேவேளை, அச் சபையின் நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடுகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என்பதிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையின் செயற்பாடுகள் பெரும்பாலும் மேற்கு நாடுகளினாலேயே கட்டுப்படுத்தப்பட்டு வருவதாகக் குறை கூறப்படுகின்றது. குறிப்பாக அமெரிக்கா சில பல சமயங்களில் பாதுகாப்புச் சபையென்ற ஒன்று இருப்பதாகவே காட்டிக் கொள்வதில்லை - கண்டுகொள் வதில்லையென்ற குற்றச்சாட்டும் உண்டு. ஈராக் மீதான படையெடுப்பின்போது




பாதுகாப்புச் சபை வெகுவாகப் புறக்கணிக்கப்பட்டு விட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்போது அதில் இந்தியாவுக்கு ஓரிடத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதில் இந்தியா பகீரத பிரயத்தனங்கள் செய்து வருகின்றது. ஆசியாவிலுள்ள பல நாடுகள் இந்தியா பாதுகாப்பு சபையில் உறுப்புரிமை பெறுவதை ஆதரிக்கத் தயாராய் உள்ளன.

### ரஷ்யா ஆதரவு

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினும் இந்தியாவுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளார். ரஷ்யாவின் ஆதரவு கிடைக்குமானால் ரஷ்யசார்பு நாடுகள் அனைத்துமே இந்தியாவுக்கு பக்கபலமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், இந்த விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு என்னவாய் இருக்கும் என்பது இன்னமும் வெளிப்படையாகவில்லை. சர்வதேச விவகாரங்களில் இந்தியா பெரும்பாலும் நடுநிலை வகிக்கவே முயன்று வந்துள்ளது. ஈராக், ஈரான், இஸ்ரேல், பலஸ்தீனம் போன்ற அமெரிக்காவுக்கு அக்கறையுள்ள விடயங்களில் இந்தியாவின் போக்கு அமெரிக்காவினால் குற்றஞ் சாட்டமுடியாத விதத்தில் அமைந்திருந்தாலும், இந்தியா, முழுமையாக தன் பக்கம் சார்ந்து விடவேண்டும் என்று அது எதிர்பார்க்கின்றது. அதே சமயம், இந்தியா சர்வதேச மட்டத்தில் உயர்ந்து விடுவதை பாகிஸதானின் அதிபர் பர்வேஸ் முஷாரப் கிஞ்சிற்றும் விரும்ப மாட்டார்.

### முஷாரப் முட்டுக்கட்டை



எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் அவர் முட்டுக்கட்டைகளைப் போடுவதற குத் தயாராய் இருக்கின்றார். ரஷ்ய அதிபர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த அதே சமயம் முஷாரப் வாஷிங்டனில் அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை சந்தித்துப் பேசி இருக்கிறார்.

அமெரிக்க எ.்.ப் 16 ரக போர் விமானங்களை கொள்வனவு செய்வது பற்றியே இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினார்கள் என்று செய்திகள் வெளிவந்துள்ளன.

அதிபர் புஷ்ஷை வெள்ளைமாளிகையில் சந்தித்து விட்டு வெளியில் வந்த பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிடம் என்ன பேசினீர்கள் என்று செய்தியாளர்கள் கேட்டபோது "நாங்கள் எ.்.ப் 16 விமானக் கொள்வனவு பற்றித்தான் பேசினோம் அவ்வளவுதான் நான் சொல்ல விரும்புவது, நன்றி" என்று கூறி முடித்துக் கொண்டார். போர் விமானக்கொள்வனவு பற்றி மட்டுமல்ல வேறு விடயங்களும் விவாதிக்கப்பட் டிருக்கவேண்டும் என்பது விமர்சகர்களின் ஊகம், பெரும்பாலும் இந்தியாவின் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்புரிமை பெறுவதற்கானவிடயமும் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். நிச்சயமாக இந்தியாவை அமெரிக்கா ஆதரிப்பதாயின் காஷ்மீர் விடயத்தில் பாகிஸ்தானுக்கு சாதகமாக இந்தியா, சலுகைகளை செய்ய வேண்டும். அதற்கு அமெரிக்கா நெருக்குதல் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் பாக். அதிபர் கேட்டிருப்பார் என்று விமர்சகர்கள் ஊகிப்பதில் நியாயமுண்டு.

பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்குமிடையில் உள்ள சிக்கலான பிரச்சினைகள் பற்றிய பேச்சுக்கள் மிக சுமூகமாக முன்னேறிவரும் கால 'கட்டத்தில் அதிபர் முஷாரப் அவசரமாக ஓடிப்போய் அதிபர் புஷ்ஷுடன் விமானக் கொள்வனவு பற்றி மட்டும் பேசவேண்டிய அவசியம் இருப்பதாக அவர்கள் கருதவில்லை.

பாக்-இந்தியா பேச்சுக்களின் போது அமெரிக்காவின் நெருக்குதல் இருப்பின் அதனை பாகிஸ்தான் சாதுர்யமாகப் பயன்படுத திக் கொள்ளலாம் என்று அதிபர் முஷாரப் நினைப்பாரானால் அதில் வியப்பில்லை.

காஷ்மீர் விவகாரத்தில் பலம்மிக்க வெளிநாடுகளின் தலையீடு அல்லது தரகு நிலைப்பாடு இருப்பதை பாகிஸ்தான் எப்போதுமே விரும்பி வந்துள்ளது. அண்மையில் இந்த விவகாரத்தில் பிரிட்டனின் தலையீட்டை தாம் விரும்புவதாக முஷாரப் கருத்து வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இரு தரப்புப் பேச்சுக்கள் ஓரளவு சுமுக நிலையில் முன்னேறி இருக்கும் இச்சந்தர்ப்பத்தில், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் நெருக்குதலுடன் நல்ல ஒரு தீர்வு - தமக்கு சாதகமாக அமைந்து விடுமானால் முஷாரப்புக்கு உள்நாட்டில் எழுந்துள்ள நெருக்கடிகளை சாதுர்யமாக சமாளித்துவிடலாம் அதன்மூலம் தனது அரசியல் நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்திக்கொள்ளலாம். பாகிஸ் தான் மக்கள் மனங்களில் நிரந்தரமான இடத்தைப் பிடித்துவிடலாம் என்றெல்லாம் அவர் கனவு காணக்கூடும்.

எதுவானாலும்,அதிபர் புஷ்ஷிடம் அவர் விடுத்த கோரிக்கைக்கு உடனடியாகப் பயன் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சுமார் 25 எ.்.ப் ரக விமானங்களை பாகிஸ்தான் அமெரிக்காவிடம் கொள்வனவு செய்யவிரும்புவதாகக் கூறப்படுகின்றது. இவை ஒவ்வொன்றும் சுமார் 25 மில்லியன் டொலர் பெறுமதியானவை.

இந்திய-பாகிஸ்தான் சமரசப் பேச்சுக்கள் முன்னேறிவரும் வேளையில் பாகிஸ்தானுக்கு எ.்.ப்16 ரக போர்விமானங்கள் இப்போது அவசியப்படுவதாக அமெரிக்கா கருதுவதாகத் தெரியவில்லை அதனால் தான் முஷாரப் வெறுங்கையுடன்-இப்போதைக்கு-திரும்பியுள்ளார் என்று கருதஇடமுண்டு.

ஆப்கான் எல்லைப்பகுதியில் செயற்படும் பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்கே இந்த விமானங்கள் இப்போது தேவைப்படுவதாக பாகிஸ் தான் தரப்பில் முன்வைக்கப்பட்ட நிலைப்பாடு பிசுபிசுத்து விட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும், அமெரிக்காவின் பேட்றியட் ஏவுகணை அமைப்பொன்றை கொள்வனவு செய்ய இந்தியா ஏற்கனவே கோரிக்கை வைத்திருப்பதனாலும் பாகிஸ்தானின் எ.்.16 ரக விமான கொள வனவு கோரிக்கை விடயத்தில் உடனடியாக புஷ் நிர்வாகம் முடிவுக்குவரவில்லை யென்று கருதப்படுகின்றது.

அமெரிக்காவின் பேட்றியட் ஏவுகணை அமைப்பானது, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள், கப்பல்கள், விமானங்களிலிருந்து செலுத்தப்படும் ஏவுகணைகளின் தாக்கு தல்களிலிருந்து பாதுகாப்பளிக்கவல்லது.

### ஏவுகணை சோதனைகள்

அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துக்கொண்டுள்ள இந்த இரு நாடுகளும் அணு குண்டுகளை சுமந்து செல்லக்கூடிய ஏவுகணைகளை அண்மைக்காலத்தில் அடிக்கடி விண்ணில் செலுத்தி பரிசோதித்திருப்பது தென்னாசி நாடுகளில் கலக்கத்தை அதிகரித்துள்ளது.

அமைதிப் பேச்சுக்கள் முன்னேறிக்கொண்டிருக்கும் வேளையில் இந்தப் பரிசோதனை

## அந்நியப் படைகளின் ஆக்கிரமிப்பில் பொதுத் தேர்தல் சாத்தியமா?

அவசியம்தானா என்றும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

இந்தியாவைப் பொறுத்தவரை பக்கத்திலுள்ள பாகிஸ்தான் விடயத்தில் மட்டுமின்றி சீனாவின் விடயத்திலும் கவனமாக இருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இந்த நாடுகளுடன் கடந்த காலங்களில் நடந்துள்ள போர்களின் அடிப்படையில் இந்தியா விழிப்புடன் இருக்க முயல்வதில் ஆச்சரியமில்லை.

இதேவேளை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் இந்தியாவுக்கு விஜயம் செய்துவிட்டுத் திரும்பியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது அதிபர் கர்ஸாய் பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொண்டு விட்டு நாடு திரும்பும் வழியில் ரம்ஸ்பீல்ட் இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

இந்தச் சந்திப்பின்போது பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்கத் தீமானித்திருப்பதை இந்தியத் தலைவர்கள் கடுமையாக ஆட்சேபித்திருப்பதாகத் தெரிகின்றது.

### கர்ஸாய் பதவி ஏற்பு

ஆப்கானிஸ்தானில் முதலாவது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது அதிபரான ஹமிட் கர்ஸாய் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப் படி பதவிப்பிரமாணம் செய்து



அதிகாரங்களைப் பொறுப் பேற்றுக் கொண் டார்.

காபூல் நகரிலுள்ள அதிபர் மாளிகையில் நடந்த பதவியேற்பு வைபவத்தில் புனித குர்-ஆன் நூலின் மீது கைவைத்து அவர் சத்தியப் பிரமாணம் செய்தார்.

போரினால் சின்னா பின்னமாகியுள்ள நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதாகவும் போதைபடபொருளில் தங்கியுள்ள நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய் வதாகவும் அவர் உறுதியளித்தார். இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர்களில் அமெரிக்க உதவி ஜனாதிபதி டிச் செனேயும் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்டும்

## பேச்சுக்கள் சுமுகமாக முன்னேறும்போது அணு ஏவுகணை சோதனை எதற்கு?

குறிப் பிடத்தக்கவர்கள்

பதவி நீக்கம் செய்யப்பட்ட தலிபான் கிளர்ச்சியாளர்கள் கர்ஸாய் பதவி ஏற்பதை குழப்பி முறியடிக்கப்போவதாக முன்பு அச்சுறுத்தியிருந்தனர். ஆனால் அசம்பாவிதம் எதுவுமின்றி வைபவம் நிகழ்ந்தேறியது.

அமெரிக்காவின் இராணுவத்தாக்குதல் மூலம் தலிபான்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட நிலையில் பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்குவந்துள்ள கர்ஸாய் நாட்டு மக்களுக்கு விடுத்தசெய்தி நேரடியாக ஒலி பரப்பப்பட்டது.

'சர்வதேச ஆதரவுடன் ஆப்கானிஸ்தானிலிருந்து பயங்கரவாதத்தை எம்மால் வேரோடு களைந்தெறிய முடியும்' என்று கூறிய அதிபர் கர்ஸாய் மேலும் பேசுகையில்,

'எவ்வாறாயினும், பயங்கரவாதத்திற்கும் போதைப் பொருள்களுக்குமுள்ள தொடர்புகள் இந்தப் பிரதேசத்தில் ஓர் அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றது' - என்றார்.

எதுவானாலும் எதிர்வரும் 5ஆண்டு காலத்துக்கு அதிபர் கர்ஸாய் மிகக் கடினமான சவால்களை எதிர்நோக்கவே செய்வார் என்று நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள், ஆயுதம் தரித்த தனிப்பட்ட தீவிரவாதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைவது, போதைப்பொருள் வியாபாரத்தை துடைத்தெறிவது, பல்வேறு இனக்குழுக்கள், ஆதிவாசிகளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதுபோன்ற மிகச் சிக்கலான சவால்களை அவர் எதிர்கொள்ளநேரிடும்.

2001-செப்ரெம்பர் 11ஆம் திகதிய அல் கெய்டா தாக்குதலையடுத்து ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சியைத்தூக்கியெறிந்த போரின் வெற்றிக்கு பின்னணியாக விளங்கிய அமெரிக்கா, கர்ஸாயை இடைக்கால அதிபராக நியமித்திருந்தது. ஆனால், பல்வேறு இனக் குழுமங்களையும் பூர்வீகக் குடிகளையும் கொண்ட ஆப்கானில் இவரால் அமைதியாக ஆட்சியைக் கொண்டு நடத்த முடியுமா என்ற சந்தேகம் இருக்கவே செய்தது. ஆனால் பின்னர் நடந்த பொதுத்தேர்தலில் அந்நாட்டு மக்கள் கர்ஸாய்தான் உலக நாடுகளின் ஆதரவுடன் நாட்டைக்கட்டி எழுப்பக்கூடியவர் என்ற முடிவுக்குவந்தார்கள்.

30 ஆண்டுகளுக்குமேலாக பிணக்குகளால் சிதறிப்போய்க் கிடக்கும் பொருளாதாரத்தை சீர் அமைக்க சர்வதேச உதவியை கர்ஸாயினால் தான் பெற்றுக்கொள்ளமுடியும், என்று ஆப்கான் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

### ஈராக்கில் தேர்தல் சாத்தியமா?



ஈராக்கில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தல் சாத்தியமாகுமா? என்று கேள்வி எழுப்பி யுள்ளார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின்.

கடந்தவாரம் ரஷ்யாவுக்கு விஜயம் செய்து கிரெம்ளின் மாளிகையில் அதிபர் புட்டினை, ஈராக்கிய இடைக்கால பிரதமர் இயாத் அலாவி சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பின் போது மேற்கண்டவாறு ஒரு கேள்வியை எழுப்பி அமெரிக்காவை மறைமுகமாக சாடியிருக்கிறார் அதிபர் புட்டின்.

'ஈராக் முழுமையாக அந்நிய படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நிலையில் பொதுத் தேர்தலை எப்படி நடத்தமுடியும் என்று எனக்கு தோன்றவில்லை'-என்று புட்டின் இடைக்காலப் பிரதமரிடம் கூறியுள்ளார்.

முழுமையாக அந்நிய படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஒரு நாட்டில் பொதுத் தேர்தலை நடத்துவது கேலிக்கூத்தாகும் என்பதை மறைமுகமாகச் சுட்டிக்காட்டிய போதிலும் ஈராக்கை ஸ்திரப்படுத்துவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ரஷ்யா ஆதரவு எிக்கும் என்று உறுதியளித்தார்.

ஈராக்கின் புனரமைப்புப் பணிகளில் ரஷ்ய நிறுவனங்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் என்று நம்புவதாகவும் அதிபர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இதே சமயம் அமெரிக்க உளவுஸ்தாபனமான சி.ஐ.ஏ.தயாரித்துள்ள ஓர் அறிக்கையின்படி ஈராக்கியத் தேர்தலை நடத்துவது மிகவும் இக்காட்டாகவே இருக்கப்போகிறது என்று தெரியவந்துள்ளது. சி.ஐ.ஏயின் இந்த ரகசிய அறிக்கையின் சில தகவல்கள் பத்திரிகைகளுக்கு கசிந்துள்ளன. நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியுள்ள இத் தகவலில் ஈராக்கில் தலையெடுத்துள்ள வன்செயல்களின் காரணமாக அரசினால் நாடுமுழுவதும் தனது அதிகாரத்தைக்கொண்டு செலுத்த முடியாமல் இருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் இடைக்கால பிரதமர் இயத் அலாவி பின்னர் ஜெனீவாவில் நிருபர்களிடம் பேசியபோது ஜனவரிக் கடைசியில் தேர்தல் நடத்தப்படும் என்றார்.

ஈராக்கிலுள்ள சகல இனப்பிரிவுகளும் சமய பிரிவுகளும் பாதுகாப்பாகக் கலந்துகொள்ளும் வகையில் தேர்தல் நடத்தப்படும் என்றார் அவர். மாகாணங்களுக்கேற்ற வகையில் வெவ்வேறு தினங்களில் தேர்தல் நடக்கும். குறைந்தது 15அல்லது 20 நாள்கள் பிடிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

### அல்கெய்டா தாக்குதல்

கடந்த வாரம் சவூதி அரேபியாவிலுள்ள அமெரிக்க துணைத்தூதரகம் மீது தாக்குதல் நடத்தியது தாங்களே என்று அல்கெய்டா அமைப்பின் சவூதி நாட்டின் பிரிவு அறிவித்துள்ளது.

பட்டப்பகலில் நடத்தப்பட்ட இத்தாக்குதல் மூலம் உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாட்டிற்கு இன்னமும் அல்கெய்டா விடமிருந்து அச்சுறுத்தல் குறைந்துவிட வில்லையென்பது புலனாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இத் தாககுதலில் குறைந்தது 9பேர் பலியானார்கள்.

சவூதியிலுள்ள வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவென்று கருதப்படும் அதேவேளை, ஆட்சியில் இருக்கும் மன்னர் குடும்பத்தைக் கவிழ்ப்பதற்கும் இஸ்லாம் பிறந்த மண்ணிலிருந்து மேற்கு நாட்டவர்களைத் துரத்துவதற்குமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் பிறந்தவரான ஒஸாமா பின்லேடனின் பயங்கரவாத அமைப்பான அல்கெய்டாவுக்கு எதிராக சவூதி அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருந்த போதிலும் அல்கெய்டாவின் செயற்பாடுகள் அங்கு இன்னமும் ஓயவில்லையென்பதையே இச்சம்பவம் எடுத்துக்காட்டியுள்ளது.

### உளவுத்துறையை சீரமைக்கும் திட்டம்

அமெரிக்க உளவுத்துறையை சீரமைக்கும் சட்டமொன்றை அமெரிக்க பிரதிநிதிகள் சபை நிறைவேற்றியிருக்கிறது.

செப்ரெம்பர் 11ஆம் திகதிய சம்பவம் போன்ற ஒன்று மீண்டும் நிகழாமல் இருப்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க அதிபர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தச்சட்டத்தைத் தயாரிப்பதற்கு மிகவும் பாடுபட்டவரான செனேட்டர் சுசான் கொளின்ஸ கருத்து வெளியிடுகையில் அரை நூற்றாண்டு காலமாக இருந்துவரும் அமெரிக்காவின் பாதுகாப்பு யந்திரத்திற்குத் தேவையான திருத்தங்களை இந்தச் சட்டம் கொடுக்கும் என்றார்.

எமது படைகளுக்கு வழங்கப்படும் உளவுத் தகவல்களின் தரத்தை இது மேம்படுத்தும், எமது மக்கள் பாதுகாப்புடன் இருக்க உதவும் என்று அவர் மேலும் கூறினார்.

# யாழ்.பல்கலை. அணியுடனான போட்டியில் லண்டன் சோபிதன் அணிக்கு வெற்றி

வலி.வடக்கு,டிசெ.12

லண்டனில் இருந்து வருகைதந்த தாயகத்தைச் சேர்ந்த சோபிதன் உதைபந்தாட்ட அணிக்கும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணிக்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் சோபிதன் அணி வெற்றிபெற்றுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இப்போட்டி இடம்பெற்றது.

போட்டியானது ரசிகர்களைக் கவரக்கூடியதாக அமைந்திருந்தது.

இரு அணி வீரர்களும் முதல்பாதி ஆட்டத்தில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்றவாறு விளையாடினார்கள். ஆரம்பத்தில் பல்கலைக்கழக அணியினருக்கு கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்பட்ட போதிலும் அவ்வாய்ப்புக்களைப் பல்கலைக்கழக அணியினர் தொடர்ந்து தவறவிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

குறிப்பாக, முதல் பாதி ஆட்டம் யாழ் பல்கலைக்கழக அணியினருக்கானதாகவே காணபட்டது. இதனைத் தடுத்தாடுவதிலேயே சோபிதன் அணியினர் ஈடுபட்டுக்கொண்டு இருந்தனர்.

முதல் பாதி ஆட்டம், கோல்கள் எதனையும இரு அணிகளும் பெறாத நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளுககும் உரியதாக மாறிக் கொண்டது. இரு அணிகளுமே கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டன.

ஆட்டம் முடிவடைவதற்கு 8 நிமிடங்கள் இருக்கும் போது லண்டன் சோபிதன் அணியின் வீரர் கண்ணன் தனக்குக் கிடைத்த பந்தைச் சரியான முறையில் கோல் கம்பத்தினுள் செலுத்தி ஒரு கோலைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து இரு அணிகளும் விடா முயற்சியுடன் விளையாடிக் கொண்ட போதிலும், கோல்கள் பெறும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. போட்டி முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் லண்டன் சோபிதன் அணியினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியினரை வெற்றி கொண்டனர். (10-86)

# லண்டன் அணியினரால் பதக்கங்கள் வழங்கப்பட்டன

வலி.வடக்கு,டிசெ.12

லண்டன் நகரில் இருந்து வருகைதந்துள்ள தாயகத்தைச் சேர்ந்த சோபிதன் உதைபந்தாட்ட அணிக்கும் யாழ்ப்பாணம் பல்கலைகழக உதைபந்தாட்ட அணிக்கும் இடையேயான உதைபந்தாட்டப் போட்டி கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணிக்கும் லண்டன் சோபிதன் அணிக்கும் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் க.செம்மணன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவு இணைப்பாளர் க.இளம்பிறையன் ஆகியோர் அறிமுகம் செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணி வீரர்களுக்கு சோபிதன் அணியினரால் வழங்கப்பட்ட பதக்கங்களை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செயலாளர் க.வரதராஜன் ஆகியோர் அணிவித்துக் கௌரவித்தனர்.

லண்டன் சோபிதன் அணியினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியினருக்கு ஒரு தொகைப் பணமும், உதைபந்துகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

லண்டன் சோபிதன் அணியின் முகாமையாளர் ரகுநாதன் கஜன், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உடற்கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் க.இளம்பிறையன் ஆகியோர் உரையாற்றினார்கள். (10-86)



அண்மையில் யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய யாழ்.மத்திய கல்லூரி 19 வயதிற்குக் கீழ்ப்பட்ட அணியினரைப் படத்தில் காணலாம்.

கல்லூரி அதிபர் இ.இராசதுரை, கூடைப்பந்தாட்டப் பொறுப்பாசிரியர் குருபரன், யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழில்அன்பன், தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் எஸ்.மாதுளன், மத்திய கல்லூரி உதவி அதிபர் பத்மநாதன், பயிற்றுநர் பிரசன்னா மற்றும் மாணவ முதல்வர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம். (10-12)

## பளுதூக்கும் போட்டியில் யாழ்.பல்கலை மாணவன் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

இலங்கையில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையே கொழும்பில் நடைபெற்ற 8 ஆவது மினி ஒலிம்பிக் போட்டியின் பளுதூக்கும் போட்டியில் 77கிலோ நிறைப பிரிவில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் எம்.பகீரதன் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். கடந்த முதலாம் திகதிய பத்திரிகையில் இவர் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார் என்று வெளியான செய்தி தவறாகும். (10)

## பல்கலைக்கழக விளையாட்டு அவைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையின் கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வித்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அணிகளின் தலைவர், உப தலைவர், பீடப் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு உடற்கல்வித்துறை இணைப்பாளர் க.இளம்பிறையன் கேட்டுக்கொண்டுள்ளார். (10-190)

# வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் புதிய நிர்வாகிகள் தெரிவு இன்று

வலி.தெற்கு,டிசெ.12

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தக் கூட்டம், புதிய நிர்வாகசபைத் தெரிவு என்பன இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் பத்து மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் லீக்கின் தலைவர் சு.புண்ணிய சீலன் தலைமையில் நடைபெறவுள்ளன.

லீக்கின் நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும பதிவுசெய்யப்பட்ட உதைபந்தாட்டக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் தவறாது சமுகந்தரவேண்டுமென்றும் - சமுகமளிக்காத கழகங்கள் தொடர்ந்து லீக்கில் அங்கம் வகிக்க அனுமதிக்கப்படமாட்டா எனவும் -

உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் மு.நடராசா தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் எஸ்.மாதுளன் கலந்துகொண்டு, எல்லைப்படை மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார். (10-152)

## பூப்பந்தாட்டப் போட்டிகள்

வலி.தெற்கு,டிசெ.12

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவினர்களுக்கான பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரி மைதானங்களில் நடைபெற்று வரும் இப்பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பதினொரு பாடசாலை அணியினர் பங்குபற்றிவருகின்றனர். (10-152)

# வெள்ளைக் காற்சட்டை, சேர்ட்டுடன் சாதாரண சிறைக்கைதியாக எஸ்.பி.

## விசேட கவனிப்பு, சலுகை ஏதுமில்லை

உயர்நீதிமன்றத்தினால் இரண்டு வருடம் கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவுக்கு சிறையில் எந்தவித விசேட கவனிப்புக்களோ, சலுகைகளோ வழங்கப் படவில்லையென்றும் - ஏனைய சிறைக்கைதிகளுக்குள்ள சாதாரண வசதிகளே அவருக்கும் வழக்கப்படுவதாகவும் - சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் 'எம்' வார்ட்டில் அவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

பல்வேறு குற்றங்களுக்காகச் சிறைத் தண்டனை பெற்ற இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகள் முப்பதுக்கும் மேற்பட்டோர் இந்தச் சிறைக்கூடத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலை வட்டாரங்கள் கூறின.

வழமையான சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படும் வெள்ளை நிறக் காற்சட்டையும், சேர்ட்டும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன. தரையில் படுப்பதற்கு சின்னதாகப் பாய் வழங்கப்பட்டாலும், பின்னர் மருத்துவர்களின் ஆலோசனைப்படி நேற்றுமுன்தினம் முதல் மெத்தையொனறு வழங்கப்பட்டுள்ளது. வெளியிலிருந்து உணவு வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது. சிறைக்கைதிகளுக்கான உணவே அவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

சிறைச்சாலையில் எஸ்.பி. அதிகாலை நானகு மணிக்கே எழுந்து தமது கடமைகளில் ஈடுபடுகிறார். கைதிகளுடன் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் அவர் ஈடுபடுகின்றார். சிறைச்சாலையில் அவரது கூடத்திற்குள் இருப்பவர்கள் அவருடன் நன்கு பழகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

திஸநாயக்க சிறைச்சாலையில் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துகிறார் என சில முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதையடுத்து சிறைச்சாலை அதிகாரிகள் சிறைக்குள் தேடுதல் நடத்தினர் என்றும் கூறப்பட்டது.

அவரிடமிருந்து கையடக்கத் தொலைபேசிகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. ஆனாலும, ஏனைய சிறைக்கைதிகளிடமிருந்து ஐந்து தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-8)

# சிறை ஆணையாளரிடம் எஸ்.பி. கடிதம் ஏதும் தரவில்லையாம்!

கொழும்பு,டிசெ.12

தம்மை நாடாளுமன்றம் செல்ல அனுமதிக்குமாறு கோரி சபாநாயகருக்கு விலாசமிட்ட கடிதம் எதனையும் எஸ்.பி. திஸநாயக்க தம்மிடம் ஒப்படைக்கவில்லையென்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் றூமி மர்சூர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் வர அனுமதிக்குமாறு சபாநாயகருக்கு திஸநாயக்க கடிதம் ஒன்றை எழுதினார் என்றும் -

சிறைச்சாலை ஆணையாளர் ஊடாக அனுப்பப்பட்டிருந்த அந்தக் கடிதம் சபாநாயகருக்கு இன்னும் கிடைக்காத காரணத்தினால் அதனைச் சிறை ஆணையாளர் இடையில் மறைததிருக்கலாம் எனவும் - ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சர்ச்சை எழுப்பியிருந்தனர்.

ஆனாலும், நேற்றுமுன்தினம் மாலை 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவித்த சிறைச்சாலைகள் ஆணையாளர், எஸ்.பி.திஸநாயக்க அவ்வாறான எந்தக் கடிதத்தினையும் தமக்குத் தரவில்லையெனக் கூறினார்.

திஸநாயக்க அத்தகைய கடிதம் எதனையும் தம்மிடம் சமர்ப்பிக்காதபோது அவ்வாறான ஒன்றைச் சபாநாயகருக்கு ஏன் அனுப்பவில்லையெனத் தம்மைக் கேட்பது எப்படி நியாயமானது என்றும் ஆணையாளர் கேள்வி எழுப்பினார். (க-8)

புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் 'அவுட்' விவகாரம்:

# சாய்ந்தமருதில் அதிபர், ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில்

சாய்ந்தமருது பிரதேசத்தில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியான சமபவம் தொடர்பாகப் பாடசாலை அதிபர் ஒருவரும் ஆசிரியர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி நடைபெற்ற மேற்படி பரீட்சையின் போது வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானமை குறித்து கடந்த மூன்று ஆண்டுகளாகப் பொலீஸார் புலன்விசாரணை மேற்கொண்டுவந்தனர்.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் சாய்ந்தமருது அப்துல் ஜலால் வித்தியாலய அதிபர் அப்துல் அகத், அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியரான எம்.வி.ஜாபீர், தொண்டர் ஆசிரியை நுகைரூள் ஆகிய மூவரும் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மூவரையும் நேற்றுமுன்தினம் கல்முனை மாஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது நீதிவான் எம்.பி. முஹைறதீன் இவர்களில் இருவரை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். தொண்டர் ஆசிரியை நுகைரூள் விடுவிக்கப்பட்டார்.

மற்றைய ஆசிரிய மற்றும் அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அவர்கள் இருவரையும் பிணையில் விடக்கோரியபோதும் அது மறுக்கப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-8)

## வெள்ள வாய்க்கால் சிரமதானம் மூலம் துப்புரவு

யாழ்ப்பாணம்,டிசெ.12

நவாலி வேலக்கை வெள்ள வாய்க்கால் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. நவாலி தெற்கு - வடக்கு பகுதியில் உள்ள குளத்திற்குச் செல்லும் கழிவுநீர் வாய்க்கால் நீண்ட காலமாக அடைபட்டிருந்தது. இதனையடுத்து, ஆனைக்கோட்டை உப அலுவலக வருமான மேற்பார்வையதிகாரி எஸ்.ஸ்ரீரங்கன் தலைமையில் பாரிய கழிவுநீர் வாய்க்கால் கடந்த மூன்றுநாள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு கழிவுநீர் வழிந்தோட ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இதனால், அப்பகுதியைச் சேர்ந்த 400 குடும்பங்கள் வெள்ள அபாயத்தில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளர். (8-185)

# விரைவில் அமைச்சரவை மாற்றம்

கொழும்பு,டிசெ.12

நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வு இடம் பெறுவதற்குள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அமைச்சரவை மறுசீரமைக்கப்படவுள்ளது.

தைப்பொங்கலுக்கு முன்னதாக இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் அமைச்சராகப் பொறுப்பேற்கும் கையோடு இந்த அமைச்சரவை மாற்றமும் நடைமுறைக்கு வரவிருக்கிறது. இதுவரை தினேஷ் குணவர்த்தன வசமிருந்த நகர அபிவிருத்தி, தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சுப் பொறுப்பை ஆறுமுகன் தொண்டமான் ஏற்கவுள்ளார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மின் சக்தி, எரிபொருள் துறை அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார். இப்போது அந்த அமைச்சுப் பொறுப்பை வகிக்கும் சுசில் பிரேமஜயந்த பொதுநிர்வாக அமைச்சராகப் பொறுப்பேற்கவுள்ளார். தற்போது பொதுநிர்வாக அமைச்சராகக் கடமையாற்றும் அமரசிறி தொடங்கொடவிற்குத் தொழிற்பயிற்சி என்ற பெயரில் புதிய அமைச்சுப் பொறுப்பொன்று வழங்கப்படவுள்ளது.

அமைச்சுப் பொறுப்புகள் தொடர்பில் இ.தொ.காங்கிரஸ் நடத்திவந்த பேரப் பேச்சுகள் வெற்றியளித்துள்ளன எனவும், நகர அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சராகக் கண்டி மாவட்ட இ.தொ.காங்கிரஸ் எம்.பி. பைசல் முஸ்தபா பொறுப்பேற்பாரென்று இ.தொ.கா. வட்டாரங்கள் தெரிவித்தன. (க-8)

# Online Classes

- MS Office xp
- I.C.D.L.
- D.T.P.
- Hardware & Networking
- Kids programes

**Commencement: 15-12-2004**

Spoken English Classes for O/L, A/L & School Leavers are Starting on 15th December 2004

அநேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க மேற்படி பாடநெறிகள் மாலைநேர வகுப்புகளாக (4.30 - 7.30) ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விவரங்களிற்கு:

SPECTRUM HUMAN CAPITAL DEVELOPMENT

**SPECTRUM Institute of Science & Technology**
**711, K.K.S. Road, Jaffna.**
**T.P.: 021 - 2226188.**

(39499)(26-14-19)


# சைக்கிள்கள் மோதின; இருவர் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

இரண்டு சைக்கிள்கள் எதிரெதிரே மோதி விபததுக்குள்ளான சம்பவத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்து நேற்றுமுன்தினமிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் உடுவில் மல்வம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்தவர்களான செல்வராஜா அருள்தாஸ் (வயது 18), சூசைநாதன் நிக்சன் (வயது 19) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். கடும் இருட்டுக் காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.(3-12)

# கண்ணீர் அஞ்சலி


## நடராசா பாலகுமாரன்

(Retired Signal Inspector Dept. of Railway)

பாசமிகு அங்கிள் லண்டனில் காலமாகிய செய்திகேட்டு நாம் மிக்க துயரமடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயரமுறும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சாயி பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாயி ராம்

SAIRAM TRADING CO
101, palaly Rd.,
Jaffna. (39523)(26-14-19)

குமாரசாமி நித்தியானந்தன் குடும்பம்.



# ஆசிரியர்கள் பதவி வெற்றிடம்
## சத்தியசாயி வித்தியாலயம், மானிப்பாய்

மானிப்பாயில் இயங்கும் மேற்படி வித்தியாலயத்தில் பின்வரும் வகுப்புகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

01. தரம் – 3 02. முன்பள்ளி ஆசிரியை

தகைமை: க.பொ.த.உயர்தரம்

வயது: 23–40 இடைப்பட்டவர்கள்

குறிப்பு: ஆசிரிய அனுபவம், விசேட தகைமைகள் அனைத்தையும் குறிப்பிடவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். தகுதி உடையோர் கீழ்க்காணும் முகவரிக்கு 18.12.2004 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
பாடசாலை நிர்வாகக் குழு,
இல.03, ஆஸ்பத்திரி வீதி,மானிப்பாய்.

(39466)(39-26-14-19)



# பயிற்சி தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சிநெறி நான்காம் வருடம் சித்தியடைந்த மாணவர்களுக்கும், நான்காம் வருடம் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கும் நீட்டா நிறுவனம் அளிக்கவுள்ள பயிற்சி தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது. எனவே, இது தொடர்பான மாணவர்களைச் சமுகமளிக்குமாறு நிறுவன இயக்குநர் த.இராஜரத்தினம் கேட்டுக்கொள்கின்றார். (3)


# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 30 – 06 – 1946



உதிர்வு 13 – 11 – 2004

அமரர் **மாணிக்கவாசகம் கணேசமூர்த்தி**

**செல்லத்துரை**

[சைக்கிள் கடை – வேம்படி,
மீதுர்ஷன் மிதிவண்டி விற்பனை நிலையம்]

மனிதர்குல மாணிக்கமாய்த் திகழ்ந்த அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்O கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியையில் நேரில்வந்து கலந்துகொண்டும் வேறு சகல வழிகளிலும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன். நாளை (13-12-2004) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாவத்தை,
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை. (39522)(39-26-14-19)

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# பரந்தாமன் ஆச்சிரம அடிக்கல் நடும் விழா

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் கிழக்குப்புறம் அமைந்துள்ள பரந்தாமன் ஆச்சிரமத்தைப் புனரமைப்புச் செய்வதற்கான அடிக்கலீ நடும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் அறங்காவலர் சபைத் தலைவர் இ.அன்னலிங்கம், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், செ.கஜேந்திரன், கே.சிவனேசன் ஆகியோரும் -

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளரும் விசேட ஆணையாளருமாகிய சி.பசுபதி, கிராம சேவையாளர் பதில் உத்தியோகத்தர் மு.சிவசண்முகம் ஆகியோரும் கலந்துகொள்வர். (ஐ-204-202-73)


# இதோ!

*புதுவருடத்தை முன்னிட்டு விசேட சலுகை வழங்கப்படும்*

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து தரமான கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும் -
- இழந்த பற்களுக்கு நிகரான சாங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும் -
- மிதந்த பற்களுக்கு கிளிப் பொருத்திக்கொள்ளவும் -
- பிளாஸ்டிக் லென்ஸ், போட்டோக்கிறே லென்ஸ்

என்பனவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும் -

நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**எரிக்கனோஸ்**

கிளைகள்:

இல.91, K.K.S. Road, கொக்குவில், T.P.2225233

இல.80, K.K.S.Road, சுன்னாகம்.

(சி-39778)(39-26-14-19)


# ஆறுமுகநாவலரின் உருவச்சிலை திறப்பு

வலி.தெற்கு,டிசெ.12

கோப்பாய் ஆசிரிய கலாசாலை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நல்லைநகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் உருவச்சிலை உத்தயோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற ஆறுமுக நாவலர் குருபூசை நன்னாளில் அருட்கவி சீ.விநாசித்தம்பி உருவச்சிலையைத் திறந்து வைத்தார்.

ஆசிரிய கலாசாலையின் அதிபர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், உடுவில் இந்து இளைஞர் மன்ற உறுப்பினரும் பல சமூகசேவை நிறுவனங்களில் பணியாற்றி வருபவருமான மகேசன் தயாகரன் சிறப்புரையாற்றினார்.

கலாசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் விழாவில் இடம்பெற்றன.

(8-152)


# YOGI HOME SCIENCE ACADEMY

X MAS DEMONSTRTION CLASSES

பண்டிகைக் கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புகள் 3 நாள்கள் மட்டும்

2004 DECEMBER 18, 19, 20ஆம் திகதிகளில் காலை 10 மணி முதல் 4.00மணிவரை இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யும் 6 கேக் கலவைகள்

6 பேஸ்ரி வகைகள் (Pastries)

6 Sweets வகைகள்

சேர விரும்புவோர் உடன்தொடர்புகொண்டு பதிவுசெய்துகொள்ளவும்

75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக).

(சி-39712)(39-26-14-19)


# ஆஸ்திரேலியா சிட்னி முருகன் கோயில்
# சிவாச்சாரியார் தேவை


**சிவாச்சாரியார் குலத்தில் பிறந்து, வேத, சிவாகமங்கள் கற்றுத் தேர்ந்த, ஆலய நித்திய பூசை, அபிஷேகங்கள் மகோற்சவ கொடியேற்றம், விஷேச பூசைகள், திருமணச் சடங்குகள், சமய விளக்கங்கள், சுவாமிக்குச் சாத்துப்படி, அலங்காரம், பிராயச்சித்த சாந்தி, ஹோமம் நடத்தத் தெரிந்தவரும், திருமுறை பாடுவதில் அனுபவம் உள்ள சிவாச்சாரியார் தேவை. ஆங்கிலம் பேசவும், எழுதவும் கூடியவராக இருத்தல் வேண்டும்.**

**விண்ணப்பதாரர் குறைந்தது பத்து வருடங்களாவது மகோற்சவங்களில் பிரதம குருக்களாக இருந்து கொடியேற்றம் மற்றும் மகோற்சவ கிரியைகள் செய்தவராகவும் இருக்கவேண்டும்.**

**வருடாந்தம் முப்பதினாயிரம் (Aus$ 30,000) ஆஸ்திரேலியா டொலர்கள் வேதனமாக வழங்கப்படும். நல்ல சூழலில் கடமை செய்ய வாய்ப்பு உண்டு. நற்சாட்சிப் பத்திரங்கள், கல்வித்தகைமைகள், புகைப்படம், அனுபவங்கள் சுயவிவரங்கள் என்பவற்றுடன் 31/01/2005 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

தகுதி காண் காலம் (Probationary Period - Three months) மூன்று மாதங்கள், வேலை ஒப்பந்தகாலம் இரண்டு வருடங்கள் (Employment Contract - Two Years).

மேலதிக விவரங்களுக்கு

*திரு. நா. கணபதிப்பிள்ளையுடன்*

*தொலைபேசி 61 2 9649 6311 இல் தொடர்புகொள்ளவும்.*

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

**The Secretary**
**The Saiva Mantram Inc,**
**217, Great Western Highway**
**Mays Hill NSW 2145, Australia.**

(சி-39317)(39-26-14-19)


# கலைவிழா

சுழிபுரம்,டிசெ.12

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் சிறார்களின் கலைவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ், தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(8-202-28)


ஈரவிழிகளுடன்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

12.12.2004

மண்ணில் 06 – 02 – 1924



விண்ணில் 11 – 11 – 2004

திருமதி

**அந்தோனிப்பிள்ளை அக்கினேஸ்**

[பொன்னம்மா]

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

*அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சும்...*

"யோகல்ஸ்",
தவசிக்குளம்,
இருகவில்.

அன்பு மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(சி-39505)(39-26-14-19)



உ
சிவமயம்

## சைவ அபிமானிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

# அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பியுங்கள்!

## ஸ்காபரோ (கனடா) பெரிய சிவன் ஆலயத்திலிருந்து உங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும்


ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாக விளங்கும் முழுமுதற் கடவுளான சிவபெருமானுக்கு கனடாவில் சிறப்பாக ஓர் ஆலயம் அமைத்து "பெரிய சிவன் ஆலயம்" என்ற பெயரோடு வெகு சிறப்பாக இயங்கிவருகிறது.



மாணவர்களுக்கு ஆலயத்தில் அந்தர்யோகப் பயிற்சி நடைபெறுகிறது.



மன்றத்தால் நடத்தப்படும் முழு நாள் அந்தர்யோகப் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்கள்.



நீர்வேலி அறநெறிப் பாடசாலையில் ஸ்தாபகர் அடியார் விபுலாநந்தா உரைநிகழ்த்துகையில்....

பதினொரு ஆண்டுகளாகக் கனடாவில் சமய சேவையாற்றி வரும் "கனடா வேதாந்த ஞானமன்றம்", ஒன்ரோரியோ மாகாணத்தில் ஸ்காபரோ, ரொரன்ரோ, மார்க்கம், ப்ரம்ரன், வூட்பிறிஜ், ஈஸ்ற்யோர்க் ஆகிய பகுதிகளில் தமிழ்ப்பிள்ளைகளுக்கு சைவஅறநெறி வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

சைவ சமய பாடம், வெறும்படிப் போடும் பரீட்சையில் சித்திபெறுவதற்காக மட்டும் படிப்பதாக இருந்து வருகின்றது. இந்த நிலையை மாற்றிப் பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே அறநெறி ஒழுக்கங்களை நடைமுறைப் பயிற்சியாகத் தினமும் அவர்களது அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப் பழக்கிவிட வேண்டும். அதுவே சிறந்த வழி!

நற்பண்பு, ஒழுக்கம், மனஅடக்கம், பெற்றோரை வணங்குதல் முதலாய குணங்கள் இருப்பவர்களின் வாழ்வு மேன்மையடையும். இப்படியான மேன்மையான குணங்களை அறநெறிப் போதனை மூலமே பெற்றுக் கொள்ளமுடியும். தினமும் அன்னை-தந்தையை வணங்கிவரும் பிள்ளைகளின் எதிர்காலம் மேன்மையடையும். கனடாவில் எம்மிடம் பயிலும் சைவச் சிறார்கள் தங்களுடைய அன்னை, தந்தையை வணங்கிவருகின்றார்கள்.

★ சிறுவயதிலிருந்தே தியானம் செய்து வரும் பிள்ளைகள் சிறப்பான மன ஆற்றலைப் பெற்று கல்வியிலும் பொது அறிவிலும் அதீத மேன்மை பெற்று விளங்குவார்கள்.

★ அன்னை, தந்தை, குரு ஆகிய மூவரையும் வணங்கிவருவதால் தெய்வ அருள் பெருகும்; குடும்பத்திலும் ஆனந்தம் பெருகும்.

★ யோகாசனப் பயிற்சி பெறுவதால் உடல் ஆரோக்கியம் மேன்மையடையும்.

அறநெறிகளைச் சிறுவயதிலிருந்து நடைமுறை வாழ்வில் ஒன்று கலக்கச் செய்யும் சிறப்பான போதனைகளைக் கொடுக்கும் அறநெறிவகுப்புகளை எமது தாயகத்தில் ஆரம்பிக்கும் நோக்கோடு முதன் முதலாக-

நீர்வேலிக் கந்தசுவாமி கோயிலடியில் 14.02.2004 அன்று ஆரம்பிக்கப்பட்டு இப்போது மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

கடந்த (06.12.2004) திங்கட்கிழமை (கனடா) வேதாந்த ஞானமன்ற ஸ்தாபகர் கலாநிதி அடியார் விபுலானந்தா அவர்கள் கனடாவிலிருந்து வருகை தந்து நீர்வேலி அறநெறிப் பாடசாலைக்குச் சென்று- அறநெறியின் முக்கியத்துவம் பற்றி உரையாற்றி 150 இற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்குப் பரிசில்கள் வழங்கி, பாட சாலைக்கு நிதியுதவியும் வழங்கினார். ★★★



கனடா ஒன்ரோரியோ மாகாண அரசு பெரிய சிவன் ஆலய தொண்டர்களுக்கு 22.11.2004இல் விருது வழங்கியுள்ளது.



ரொரன்ரோவில் நடைபெறும் வகுப்புகளில் ஒன்று.



நீர்வேலி அறநெறிப் பாடசாலை மாணவர்களும் பெற்றோரும்.

அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பிக்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரிகளில் தொடர்புகொள்ளவும்.

கனடாவில் :
DR. ADIYAR VIPULANANDA,
VETHANTHA GNANA MANTRAM (CANADA)
1960, ELLESMERE ROAD, UNIT #10
SCAR BOROUGH, ONTARIO, MIH 2V9, CANADA.
TEL: (416) 769-7747/907-7434 FAX: (416) 751-8268
WEBSITE: www.sivatempletoronto.org



யாழ்ப்பாணத்தில் :
சிவநெறிக் கலாநிதி, மரபுக் கலைச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்,
291, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
- நிர்வாகம்- ஸ்காபரோ பெரிய சிவன் ஆலயம்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யாழ் . இந்து ஆரம்ப பாடசாலையின்

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2004 இல் 102 மாணவர்களை ச் சித்தியடையச் செய்து, 46.8 சதவீதச் சித்தி மூலம் யாழ்மாவட்டத்திலும், வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், அகில இலங்கையிலும் முன்னணி வகிப்பதற்கு உயர்த்தி நிற்கும் அதிபர்,உப அதிபர் , பகுதித்தலைவர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியப்பெருந்தகைகள் அனைவரையும் மனம் நிறைந்து நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதிலே பெருமகிழ்வெய்துகின்றோம்.

**இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலை நடை பெறும் 2004 இற்கான பரிசளிப்பு விழாவில் தங்கப்பதக்கங்களை பெறும் மாணவர்கள்.**



இ.பிரணவன் மாவட்ட நிலை 1 அகில இலங்கையில் தமிழ்மொழி மாணவர்களில் 1ஆம் இடம் 182 | வி.ரமணன் மாவட்ட நிலை 3 170 | வி.நிருகன் மாவட்ட நிலை 4 169 | க.துவாரகன் மாவட்ட நிலை 4 169 | ந.லவலோஜன் மாவட்ட நிலை 4 169



சி.இனோஷா 166 | இ.பார்த்தீபன் 165 | ந.அமிழ்தினி 165 | இ.விநு 164 | சோ.வெண்ணிலவன் 163 | பு.லதுசா 161 | மு.விதுன் 160

**பரிசில்களையும் பதக்கங்களையும் பெற்றுக்கொள்ளும் மாணவர்கள்.**



ச.குருபரன் 159 | க.லக்ஷசயன் 159 | பே.கபில் ராஜ் 159 | பா.லிசி 156 | லி.நந்தவர்மன் 155 | ப.சாஸ்வதன் 154 | வெ.ஹரிஹரன் 154 | க.குருபரன் 152 | க.நிசாந்தினி 150 | ஆ.கஜேந்திரன் 147



ந. பிருந்தா 146 | ப. சதீஸ்குமார் 146 | சி.சிறீவிந்துஜன் 146 | சி.நிவேதிகா 146 | சி.ஷம்யா 145 | யோ.நிரோஷன்யூட் 145 | தி.விக்னேஸ்வரன் 145 | ர.பிரியதர்சன் 144 | சி.சிவராஜி 144 | ப.ஆதிரை 143



வைத்தீஸ்வரசர்மா 143 | ஜெ.ஜனுசன் 143 | ந.காயத்திரி 143 | ஆ.கஜனி 143 | ஜெ.பிருந்தாவன் 142 | த.மதீஷன் 141 | ப.கஜமாலன் 141 | த.பூங்குழலி 141 | ச.நிகிந்தா 141 | சி.சயானி 141



உ.கேதுஷன் 140 | பா.திலக்சன் 140 | தி.கோகுலன் 140 | கு.ஐங்கரன் 140 | ஜெ.டிலானி 140 | சி.அபிராமி 140 | ச.அபிரா 139 | ஸ்ரீ.விஜிதரன் 138 | க.யதுசன் 138 | வ. மைதிலி 138



ச.விதுசன் 137 | பு.ரஷ்மி 137 | இ.யவானிசன் 136 | ப.தீபிகா 136 | ர.செந்தூரன் 135 | கு.தேனுசா 135 | க.பிரசாந் 135 | ப.நேர்த்திகா 135 | உ.ரிசிகேசினி 134 | த.தனுசியந்தி 134



கார்த்திகா 134 | வெ.பிருந்தான் 134 | சரவணன் 134 | ச.காருண்யா 134 | கெள.யாதனா 134 | சு.கெளசி 133 | வ.புருஷோர்த் 132 | கனிஸ்ரன் 132 | ந.செந்தூரன் 131 | தி.கிரிசாந் 131



சி.சஜீவன் 131 | ம.தர்மிகா 131 | இ.சஞ்சிகா 131 | சி.கெளரிசங்கர் 130 | ம.கிரிஜன் 130 | யோ.சர்வதன் 130 | சி.திவ்வியபிரசாத் 130 | ர.ரணீஷன் 130 | ஜெ.ஜெனுஷன் 129 | இ.செங்கோடன் 128



கு.காயத்திரி 128 | இ.ஜெயசுமங்களா 128 | ர.ரவிக்குமார் 128 | சி.துசாந் 128 | கோ.குகரூபன் 128 | ஜெ.சங்கீர்த்தனன் 128 | இ.குகன்ராஜ் 128 | கோ.கிருஷாணிகா 127 | கி.நிவேதிகா 127 | சி.மயூரன் 127



ச.திவேதிகா 127 | ம.நிரோசன் 126 | வி.அபிராமி 126 | வி.கஜநிதன் 126 | ர.மதுராந்தன் 125 | தி.சிவஜீவன் 125 | சி.விஜிதரன் 125 | சி.விதுரன் 125 | பா.முரளிதரன் 124 | ம.தமிழினி 124

இவர்களையும் இவர்களோடு கல்விகற்ற ஏனைய மாணவர்களையும் சகல கலைகளையும் பெற்று கல்வியில் சிறப்புற வாழ்த்துவதோடு. தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் கருத்தூன்ற வைத்து உன்னத நிலைக்கு வித்திட்ட பாடசாலைக்குக் கற்றல் கற்பித்தல் சாதனங்களை வழங்குவதோடு. சகல ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் நன்றி கலந்த கெளரவிப்புகளையும் பாராட்டுகளையும் இன்று பி.ப. 2.00 மணிக்கு பெருவிழா எடுத்து சிறப்பிப்பதையிட்டு பெருமையும் பேருவகையும் அடைகின்றோம். பாடசாலை தொடர்ந்து பல முன்னேற்றகரமான சாதனைகளைப் படைத்து வெற்றிவாகைகளைச் சூடவும் அதிபர், ஆசிரியர் நலமும் வளமும் பெருக வாழ்வாங்கு வாழவும் வாழ்த்துகின்றோம்.

**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.**

**புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய தரம் 5 மாணவர்களின் பெற்றோர்கள்.**

விளம்பர அனுசரணை :-

C.S.K.K. க.கனகசுந்தரம் பல்பொருள் வாணியம்

இல. 348,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/39530) UTHAYAN Graphics

# என் இனிய யாழ். தமிழர்களே...!

**அண்மையில் இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த திரைப்பட இயக்குநர் பாரதிராஜா தமிழகத்தில் வெளியாகும் நக்கீரன் வார இதழுக்கு அளித்த பேட்டி இது.**

இலங்கையின் யாழ்ப்பாணத்திற்குச் சென்று பல்வேறு நிகழ்வுகளைப் பார்த்துவிட்டு சென்னை திரும்பியுள்ளார் தமிழ்த்திரைப்பட இயக்குநர் பாரதிராஜா. இவரது இலங்கைப் பயணம் அறிந்து தமிழர்கள் மத்தியில் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் எதிரொலிக்கிறது.

இந்தச்சூழலில், இயக்குநர் பாரதிராஜாவை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். உணர்வுபூர்வமாகவும் உணர்ச்சிபூர்வமாகவும் இருந்தது அவரது பேச்சு.

❖ **நக்கீரன்:** திடீரென்று யாழ்ப்பாணம் போய்விட்டு வந்திருக்கிறீர்களே. ஏதேனும் விசேட காரணங்கள் இருக்கிறதா?

✦ **பாரதிராஜா:** இலங்கைக்குச் சென்று வருவது எனக்குப் புதிதுமல்ல; புதிரானதுமல்ல. பலமுறை சென்று வந்திருக்கிறேன். "கல்லுக்குள் ஈரம்" படத்தின் படப்பிடிப்பு இலங்கையில்தான் நடந்தது. அதேபோல சமீபத்தில் நான் எடுத்த "கண்களால் கைது செய்" படத்தின் முழுப் படப்பிடிப்பும் இலங்கையைச் சுற்றியுள்ள பகுதிகளில்தான் எடுக்கப்பட்டது.

இலங்கையின் கடற்பரப்புகளும் பசுமைகளும் கிராமியம் சூழ்ந்த வயல் வெளிகளும் பரந்து விரிந்து கிடக்கும் மலைக் குன்றுகளும் என்னை வியப்பில் ஆழ்த்தும் விடயங்கள். விரைவில் இயக்குநர் சேரனை நடிக்கவைத்து முழுமையான கிராமியக் கதை ஒன்றைப் படமாக எடுக்கிறேன். அதற்கான இடங்களைத் தேர்வுசெய்வதற்காகத்தான் எனது இலங்கைப் பயணம்.

❖ **நக்கீரன்:** இலங்கை மக்களின் வாழ்நிலையை எப்படி உணர்கிறீர்கள்? உங்களைப் பாதித்த சம்பவங்கள்.

✦ **பாரதிராஜா:** கொழும்பு, யாழ்ப்பாணம், நுவரெலியா உள்ளிட்ட பகுதிகள் மற்றும் அதனையொட்டிய மிகச் சிறுசிறு கிராமங்கள் எனப் பல்வேறு இடங்களைச் சுற்றிப் பார்த்தேன். தமிழர்கள் இன்னமும் வீரம் செறிந்த தமிழர்களாக இருக்கிறார்கள். வரலாறுகள் மிக்க பல கட்டடங்கள், நினைவுத் தூண்கள் எல்லாம் ஆயிரக்கணக்கான துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டு, சிதிலமடைந்து கிடக்கின்றன. தமிழர் தந்தையான செல்வாவின் நினைவுகளைப் போற்றும் விதத்தில் அமைக்கப்பட்ட விடுதலைத் தூண்களில் 1000 தோட்டாக்கள் தாக்கிய அடையாளம் இருக்கின்றது. இதையெல்லாம் பார்க்கும்போது மனது கனத்துவிடுகிறது.

அதேபோல், எங்கு திரும்பினாலும் ஏதேனும் ஓர் உடல் உறுப்பை இழந்த தமிழர்களையும் தமிழிச்சிகளையும் பார்க்கும் போது - இதயம் விம்முகிறது. வார்த்தைகளால் எப்படிச் சொல்வது அந்தச் சோகத்தை உடல் ஊனமுற்று உலாவுகின்ற அந்தத் தமிழர்கள், தங்களின் உறுப்புக்களை இழந்து தவிக்கிறோமே என்று சோகவயப்படவில்லை. மாறாக, தமிழர் தமிழின மீட்சிக்காகத்தானே உடல் உறுப்புக்களைத் தியாகம் செய்திருக்கின்றோம் என்கின்ற மனநிறைவு அவர்களிடம் தெரிகின்றது.




உறுப்புக்களை இழந்து நின்றாலும், அவர்கள் ஏதேனும் ஒரு துறையில் வல்லுநர்களாகவே இருக்கின்றார்கள்.

நான் அங்கு சென்றபோது மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டது. தாய் மண்ணை மீட்க நடந்த போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்கள். அவர்களுக்கான நினைவஞ்சலி இன்று என்று அறிந்தபோது மிகவும் நெகிழ்ந்துவிட்டேன்.

ஒரு சின்னச் சம்பவம். கடற்கரை ஓரமாகக் காரில் போய்க்கொண்டிருந்தேன். 14வயதுச்சிறுவன் ஒருவன் லிப்ட் கேட்டான். அவனது ஒருபக்க முகம் சேதமடைந்திருந்தது. ஒரு கண்ணில் பார்வையில்லை. எப்படி நிகழ்ந்தது என்று அந்தச் சிறுவனிடம் விசாரித்தபோது. அப்போது நான் நான்கு மாதக் குழந்தை. ஏற்கனவே இராணுவத்தை எதிர்த்து எனது தந்தை இறந்து போய்விட்டார். அம்மா மட்டும்தான் அப்போ. பலாலியில் நடந்த யுத்தத்தில் எனது அம்மா இராணுவத்தை எதிர்த்தபோது துப்பாக்கியால் எனது அம்மாவைச் சுட்டார்கள். அந்தக் குண்டு என்னையும் சேதமடைய வைத்தது. நாட்டுக்காக என் அம்மா உயிர்த்தியாகம் செய்தாள். என் கண்கள் நன்றாக இருந்திருந்தால் இராணுவத்தை எதிர்க்கும் ஒரு போராளியாக மாறியிருப்பேன். அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. அதுதான் எனக்கு இப்போதும் சோகம் என்ற அந்தச் சிறுவனை வாரி அணைத்துக் கொண்டேன். இப்படிப் பல நெகிழ்வான சம்பவங்கள் என்னைப் பாதித்தன.



❖ **நக்கீரன்:** தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே உறவுகள் எப்படி இருப்பதாக உணருகிறீர்கள்?

✦ **பாரதிராஜா:** இருவருக்கும் சகோதர உறவுகளே பின்னிப்பிணைந்து இருப்பதை நான் பார்த்தேன். ஆனால், இவர்களிடையே அரசியல் விளையாடுவதால் சகோதர உறவு துண்டிக்கப்பட்டுக் கிடக்கின்றன.

❖ **நக்கீரன்:** யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குப் போனீர்களா?

✦ **பாரதிராஜா:** இலங்கை செல்லும் ஒவ்வொரு தமிழனும் இந்தப் பல்கலைக்கழகத்திற்குப் போய்வருவது பெருமை. அந்த அளவிற்கு உலகப் புகழ்பெற்ற கலாசாலை அது. என்னை அடையாளம் கண்டு கொண்ட மாணவ, மாணவிகள் என்னை அங்கு அழைத்துச் சென்றனர். அங்கு பயிலும் மாணவ - மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள் என்னை வரவேற்றார்கள். ஒரு ஐந்து நிமிடம் பேசுங்களே என்றார்கள். திடீரென்று தோன்றும் மின்னல் போல உங்களைச் சந்தித்தது பெரும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. என் இனிய யாழ். தமிழர்களே - 20 ஆண்டு காலமாகத் துப்பாக்கிச் சத்தங்களினூடே வாழ்ந்திருக்கும் தாய்மண் மீட்சிக்காக, அயராது போராடும் தமிழர்கள் இருக்கிற பூமியில் இருந்து உங்களோடு பேசுவதைப் பெருமையாக உணருகிறேன்.

எத்தனையோ தமிழ் அறிஞர்களை உருவாக்கிய இந்தக் கலாசாலை உங்களையும் அறிஞர்களாக மாற்றும்; நீங்கள் மாறுவீர்கள் என்று பேசினேன். ஒரு மணிநேரம் என்னோடு செலவழித்துப் பல்வேறு சம்பவங்களைப் பகிர்ந்து கொண்டார்கள் அவர்கள்.

❖ **நக்கீரன்:** மாவீரர் நாள் நிகழ்வில் பிரபாகரன் பேசிய பேச்சுக்களின் தாக்கம் எப்படியிருக்கின்றது? மீண்டும் யுத்தம் வரும் என்று அச்சப்படுகிறார்களா?

✦ **பாரதிராஜா:** ஏழாயிரம் கோடி ரூபா செலவிட்டு இலங்கை இராணுவம் யுத்தம் நடத்தியபோதே எங்களுக்குப் பயமில்லை; இப்போது யுத்தநிறுத்த வேளையிலா எங்களுக்குப் பயம்? என்கிறார்கள். அதேசமயம், எந்தச் சூழலிலும் யுத்தம் வெடித்தாலும் அதை எதிர்கொள்கின்ற மனத் தைரியம் தமிழர்களிடம் இருக்கின்றது. பிரபாகரனின் பேச்சுக்களே அவர்களுக்கு வேதமாக இருக்கின்றது.

❖ **நக்கீரன்:** பிரபாகரனைச் சந்தித்தீர்களா?

✦ **பாரதிராஜா:** சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதற்கான முயற்சியும் நான் எடுக்கவில்லை. என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதில் மட்டுமே கவனம் செலுத்தினேன்.

❖ **நக்கீரன்:** யாழ்ப்பாணம் சென்று திரும்பியிருக்கிறீர்கள். தமிழக ஆட்சியாளர்களால் ஏதேனும் பிரச்சினைகள் வரும் என்கிற பயம் இல்லையா?

✦ **பாரதிராஜா:** எதற்குப் பயப்பட வேண்டும்? நான் எந்தத் தவறும் செய்யாதபோது எதற்குப் பயம்? உப்புத் தின்றவன் தண்ணீர் குடிக்கவேண்டும்; தப்புச் செய்தவன் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்பது எனது கொள்கை. ஒரு கலைஞனாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கைப் பகுதிகள் பலவற்றிற்குச் சென்று வந்திருப்பது குற்றமா? நான் அங்கு போனபோது எனது கண்களை அகலத் திறந்துவைத்தேன். அங்கு எந்தவொரு கதவும் அடைக்கப்படாததால் நிறையக் காட்சிகள் என் கண்களில் வந்து விழுந்தன. அதனால், பாரதிராஜாவுக்கு எந்தப் பயமும் இல்லை. தமிழனுக்குத் தைரியம் அதிகம். ❖

## உதயன் பதிவில் பொதிந்தவை

**கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.**

**உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.**

### 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்...

சிறிமாவுக்குக் குடியுரிமை:
இந்தியா நெருக்கியதால் கிடைத்தது
09.01.1986

மலையகத் தமிழருக்கு குடியுரிமை:
ராஜீவின் நிலையை தமிழகம் வரவேற்கிறது
ஆளுநர் அறிவிப்பு
06.01.1986

துப்பாக்கி ரவைகள் ஒன்றன் பின் ஒன்றாக வர
அவலக் குரல்களுக்கு மத்தியில் வானை வேகமாக ஓட்டினேன்
இதனால் ஏனையோரைக் காப்பாற்ற முடிந்தது என்கிறார் வான் சாரதி
08.01.1986

வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ் மொழி மாநிலம் அமைக்கப்பட வேண்டும்
இதைவிட வேறு தீர்வுகாண முடியாது என்கிறார் அமிர்
08.01.1986

09.01.1986
தமிழ் பகுதியில் பாகிஸ்தான் விமானிகள்
துப்பாக்கி ஹெலிக்கொப்டர்களை செலுத்துவதாகக் குற்றச்சாட்டு

ராஜீவ் தமது நிபந்தனையை வலியுறுத்துகிறார்
08.01.1986

09.01.1986
பொங்கலோடு அடகு நகை கைக்கு வரும்
ரூ. 50 கோடி பெறுமதியானவை; பலாலியில் வைத்து விநியோகம்

08.01.1986
இலங்கை தேயிலையில் நஞ்சா?
அமெரிக்கா பதற்றம்; கண்காணிப்புக் குழு வரும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

வலி.தெற்கு,டிசெ.12

வலிகாமம் தெற்குப் பிரதேச. செயலகத்துக்குட்பட்ட திணைக்களங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறும்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து விவசாயக் குழுக் கூட்டம் இடம்பெறும். (8-152)

## ஆன்மீக விழிப்புணர்வுப் பேருரைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையும், ஆன்மீக விழிப்புணர்வு வட்டமும் இணைந்து நடத்தும் ஆன்மீகப் பேருரைகள் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் மாலை 5 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ரிஷிகேசத்து ஞான பீட சுவாமி யோகேஸ்வரானந்தா 'கர்ம யோகம்', 'தியான விழிப்புணர்வு' என்னும் தலைப்புகளில் ஆன்மீகப் பேருரைகள் நிகழ்த்துவார். (8-202)


# Foundation Degree Programme
## for Higher Education / Career

உடனடித் தொழில் வாய்ப்பொன்றை பெற வேண்டும் ஆனால் போதிய தகைமையில்லை.

பல்கலைக்கழக வாய்ப்பினை இழந்த நீங்கள் கணனி, வணிகம் போன்ற துறைகளில் உள்நாட்டில் பட்டப்படிப்பினை தொடர வேண்டும்.
ஆனால் அடிப்படை ஆங்கில, கணனி பற்றிய அறிவு போதுமானதாக இல்லை.

UK, Canada, Australia, Newzealand போன்ற நாடுகளில் உயர் கல்வியை தொடர வேண்டும். ஆனால் இந்நாடுகளுக்கான Student Visa க்களை பெற்றுக்கொள்ள போதிய தகுதியில்லை.

நிச்சயமாக நீங்கள் இவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுப்பீர்கள். கவலை வேண்டாம். Foundation Degree Programme for Higher Education / Career எனும் 3 மாத கால பாட நெறியை பயில்வதன் மூலம் உங்களை ஒரு தகைமை வாய்ந்தவராக மாற்றிக்கொள்ள முடியும்.

கற்கை நெறிக்கான அடிப்படை தகைமை: **G.C.E. O/L**

பாடப்பரப்பு: ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணனி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் மிக விரிவான கற்கை நெறி முறை.

பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழ்கள்

வெளிநாட்டு உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெற்றுக் கொள்ள அடிப்படை முதல் Visa க்களைப் பெறும் வரையிலான பூரண வழிகாட்டுதல்கள்.

LONDON INSTITUTE OF FURTHER EDUCATION

27, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk



## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 11.12.2004 - 16.12.2004
முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!

* சக்தி குறைவு * ஞாபக மறதி * பயம் * நடுக்கம் * நித்திரைக்குறைவு * ஆண்மைக் குறைவு * நீரிழிவுநோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்திக்குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப்பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(C/39760) (42-11-46)



## ஆங்கிலம் கற்க வேண்டுமா?

**இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி**
**E.L.I. யின் இலவச தபால் மூலம் பாடநெறிகள்**

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் பயிற்சி

தமிழ் விளக்கத்தில் கூடிய பாடத் தொகுதிகள்

**இலவச Dialog G.S.M. தொடர்பை வெல்லுங்கள்**

* 2005ம் ஆண்டுக்கான இலவச தினக்குறிப்பேடு (Diary)
* தொலைபேசி பதிவை உள்ளடக்கிய கீடெக்

இலவச 30 day's Easy Way English புத்தகம்
என்பன அனைத்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்




மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE** P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002, 802849



## உங்களுக்குத் தெரியுமா?



**இலங்கையில் அதிநவீன கணனிக் கற்கையை முதன் முதலாக அறிமுகப்படுத்துகிறது NIIT யாழ் மண்ணிலும் பயில்வதற்கான ஏற்பாடு**

இதன் மூலம்............

- *Microsoft* இனால் அங்கீகரிக்கப்பட்ட (MCSD) நிபுணர்களாவதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெறுவதற்கான நேரடி அனுமதி
- வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்கும்

**Futurz Classic Curriculum**

C# / Java / C++ — Semester 1
HIT Enterprise Java SQL 2000 — Semester 2
VB.NET ASP.NET XML — Semester 3
VC# Mobile Technologies — Semester 4
DNIIT — B.Sc Degrees From International Universities (USA, UK, Australia, Canada & New Zealand)

**NIIT enabled** by cyberSKILLS

**The World Largest Computer Educator**
**347, Kasthuriyar Road, Jaffna**
TP 021 222 7250 / 4590 567

அனுமதிகளுக்கு முந்துங்கள்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## செல்லத்துரை தனலட்சுமி



புங்குடுதீவைப பிறப்பிடமாகவும் கொட்டடியில் வசித்தவரும தற்பொழுது கொக்குவிலை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை தனலட்சுமி அவர்கள் கடந்த 08.12.2004 புதன்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான இளையதம்பி -வள்ளியம்மையின் அன்பு மகளும் காலஞ் செனறவர்களான நாகநாதர் - சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, பாலசிங்கம், நல்லையா, ராசதுரை மற்றும் பார்வதிப்பிள்ளை, சதாசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற கற்பகம், நாகேஸ் ஆகியோரின் மைத்துனியும் தங்கரத்தினம்(கனடா), தர்மபாலன், தேவராசா, கலாநிதி, தனபாலன் (இத்தாலி), கமலாம்பிகை, காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கணேசானந்தம் மற்றும் மனோன்மணி, கமலாதேவி, ஜெயசேனன் (வெள்ளை), கலாநிதி, ராசதுரை (நாகேஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் துரைநாதன் (ஜேர்மனி), உமா (ஜேர்மனி), தேவஞானி (கனடா), ரவீந்திரன் (கனடா), பாஸ்கரன் (கனடா), கிஷா (சுவிஸ்), தயாகரன் (சுவிஸ்), சசிரேகா (ஜேர்மனி), சிவகுமார் (ஜேர்மனி), கல்பனா, மதுமதி, ஜேப்பிரதாப், லக்ஷன், குருப்பிரசாத், ஜச்சுதன், கோசலியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரிசி, ஓவியா, தர்ஷன், ரிஷிக்கா, சாருணி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*46, பொற்பதி வீதி,*
*கொக்குவில்.*

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39469) (29-19-46)

## நடராசா பாலகுமாரன்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் உசனை வதிவிடமாகவும் கொண்ட நடராசா பாலகுமாரன் (ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு பொறியியலாளர், புகையிரதத் திணைக்களம்) 08.12.2004 புதன் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - சிவயோகம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் உசன் காலஞ்சென்ற பொன்னம்பலம் (ஓவசியர்) - புனிதவதி தம்பதிகளின் மருமகனும் தயாநிதியின் அன்புக் கணவரும் டாக்டர் பாலினி (கொழும்பு தேசிய வைத்தியசாலை), தயன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்கோவன் (**Manager Tradesman International, Moratuwa**), தமிழினி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் நந்தினி, செந்தில்மதி (கனடா), வடிவாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் சுப்பிரமணியம் (மாவட்ட உத்தியோகத்தர் கூட்டுறவுத் திணைக்களம், கிளிநொச்சி), சனாத்தனா (கனடா) ஆகியோரின் சகலனும் தக்ஷாயினி, சுபானந் (கனடா), தக்ஷானந், சுபாஷினி, கஜானந் (கொழும்பு), சுகன் (அமெரிக்கா), சுமிதா (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் திவ்வியா (லண்டன்) அவர்களின் பாசமிகு பேரனும் ஜெயலட்சுமி ரட்ணசபாபதி (நோர்வே), தனலட்சுமி குலசிங்கம் (கொக்குவில்), காலஞ்சென்ற சிவலட்சுமி பொன்னம்பலம், ராசலக்ஷ்மி மாணிக்கவாசகர் (கனடா), அன்னலட்சுமி ஆனந் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற ராஜகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கமலேந்திரன் (ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர், தொழிற்திணைக்களம்), பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பரமசிவம் - கமலா (பிரான்ஸ்) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***No.3, BANK HURST ROAD,***
***CAT FORD,***
***LONDON.***

0044-2086900872
0044-7958294185

தகவல்:
தயன் பாலகுமாரன்
(மகன் - லண்டன்).

(39531) (24-46-19)

## கனகரத்தினம் பாலசிங்கம்



சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கனகரத்தினம் பாலசிங்கம் அவர்கள் 10.12.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - அம்மாப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நிர்மலாதேவியின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் மகாதேவா (இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர்) அவர்களின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் சோமசுந்தரம், தம்பிராசா, சின்னத்துரை, மாணிக்கவாசகர், ராஜேஸ்வரி மற்றும் கனடாவில் வசிக்கும் பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர்களான தங்கம்மா, பாக்கியம், ராசமலர், பொன்னையா, செல்லமுத்து, முத்தையா ஆகியோரின் மைத்துனரும் மதிவதனன் - தர்மலட்சுமி, மதியழன் (U.K), மைதிலி - துஷ்யந்தன் (U.K), மதுரா ஆகியோரின் அன்புப் பேரனும் துலாஞ்சலி, அபிதாஞ்சலி ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வளவத்தை கொக்குவில் கிழக்கில் உள்ள கோவிந்தர் றஞ்சி அவர்களின் இல்லத்தில் இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் 11 மணிக்குத் தீயுடன் சங்கமமாகும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வளவத்தை லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
ம.மதிவதனன் - (மதி),
ம.மதியழகன் - (மதன்)
(பேரப்பிள்ளைகள்).

(39555) (24-46-19)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.12

தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் தரம் 8, தரம் 9 மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் மு.ஜெயக்குமார், பாடசாலையின் ஆசிரியர் நலன்புரிச் சங்கத் தலைவர் க.குகதாசன், ஆசிரியர் யோ.நேரா ஆகியோர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதன்முறையாக இவ்வருடமே இந்த ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (8-204)

## தாச்சிப் போட்டியில் சம்பியன்

யாழ்ப்பாணம்,டிசெ.12

வடமராட்சி கல்வி வலயப்பாடசாலைகளின் 11 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப்போட்டியில் இமையாணன் அ.த.க.பாடசாலை அணி சம்பியனானது.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணிக்கும், இமையாணன் அ.த.க. பாடசாலை அணிக்கும் இடையே நடைபெற்ற இறுதிப் போட்டியில் வெற்றியீட்டி இமையாணன் அ.த.க. பாடசாலை அணி சம்பியனானது. (10-13)

## மலசலகூட
## கதவுகள் திருத்தம்

நெடுந்தீவு,டிசெ.12

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை நோயாளர் விடுதிகளில் நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருந்த மலசலகூடக் கதவுகள் கடந்த வாரமளவில் நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவையினால் திருத்தியமைக்கப்பட்டன.

கடந்த மாதம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க இத்திருத்த வேலைகள் தம்மால் மேற்கொள்ளப்பட்டதாக நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சு. கணேசலிங்கம் தெரிவித்தார். (எ-112)


**மரவேலைகள்**

சமையலறை பான்றி கபேட் (Kitchen Pantry Cupbord), யன்னல், சீலிங்கூரை மற்றும் அனைத்துவித மரவேலைகளும் செய்துதரப் படும். தொடர்பு: இ.பகீரதன்
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
T.P.: (கண்ணன்) 0776655931
(39559)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு ஒன்றில் இருந்து O/L வரை
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆங்கிலம் - விக்னேஸ், தமிழ - தயாநிதி,
விஞ்ஞானம் - றதீஸ், கணிதம் - பிரதீபன்
426(302), K.K.S. Road, Jaffna.

தரம் 6 முதல் O/L வரையான சகல வகுப்புகளுக்குமான English Language, English Literature வகுப்புகள்
ஆரம்பம் - 15.12.2004
தொடர்பு: கோ.சுப்பிரமணியம்
62, பழம் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(39541) (24)
அனுமதிக்குப் பெற்றோர் வருகை தருவது அவசியம்

**BODY TONE**
ஆரோக்கியவில்லை



களைப்பையும், சோம்பல் தன்மையை போக்கி, மேலதிக சக்தியையும், சுறுசுறுப்பையும் கொடுக்க கூடியது
நாளொன்றுக்கு தேவைக்கு எற்ப 1 -3
யாழ் நகரில் விநியோகஸ்தர்கள் தேவை
K.S.P. International Pharmacy Tel : 2449766

அதிக சக்தியைத் தந்து
வயிற்றுப் போக்கை நிறுத்தும்
Brownson Arrowroot Powder
பிரவுண்சன் அரறூட் மாவு
உண்மையானது. நம்பிக்கையானது என்று பரீட்சிக்கப்பட்டது. பாரம்பரியமாக வைத்தியர்கள் அறிவுறுத்தும் அரறூட் கஞ்சி குழந்தைகள், வயதானவர்கள் அனைவருக்கும் போசாக்குமிக்க ஓர் உணவு
யாழ் நகரில் கிடைக்குமிடம்
ஸ்ரீ காந்த் எசன்ஸ் அன் குறோசரீஸ்
161,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021-2219
BROWNSON INDUSTRIES
139,பாங்ஷால் வீதி, கொழும்பு - 11
Tel : 2327197, Fax : 2458507




**விண்ணப்பித்து விட்டீர்களா?**

IIS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2005
விண்ணப்ப முடிவு திகதி: 15.12.2004

டிசெம்பரில் O/L பரீட்சையும்
ஏப்ரலில் A/L பரீட்சையும்
எடுக்கவிருக்கும் மாணவர்களே!
உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையுள்ள காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு, IIS இன் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் கணனி உலகில் இணைந்து கொள்ளுங்கள்.
பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டியாக அமைவதற்கு இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
"உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி IIS"
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.
IIS IIS IIS IIS IIS IIS IIS
(C/39537) (24-19-46)


## அஞ்சலி செய்து துயர் பகிர்கின்றோம்



அமரர்
**சுப்பிரமணியம் சரவணபவன்**

*(உரிமையாளர், குவிக் போட்டோ புகைப்பட நிலையம்)*

மறைந்த அமரருக்கு
எமது அஞ்சலிகள்!

*குவிக் போட்டோ,*
*இல. 27, பஸ் நிலையம்,*
*வவுனியா.*

குவிக் போட்டோ,
கனகசபாபதி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(39568) (24-19-46)

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மானுட வாழ்வில்
1946 - 03 - 05



மலரவன் அடியில்
1996 - 12 - 11

அமரர் **இராமலிங்கம் நவரட்ணம்**

*இமைப் பொழுதில் எமை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்ட*
*அன்புத் தெய்வமே! உங்களை நாம் பிரிந்தாலும்*
*தங்கள் நினைவு எம் நெஞ்சங்களில் கல்மேல்*
*எழுத்துப்போல் என்றும் நிலைத்திருக்கும்!*

*12/2, கச்சேரி ஒழுங்கை,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

- மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(39553) (24-19-46)


**டோஹா கட்டார்**

உடனடியாக வரவும்

| வேலைவாய்ப்பு | தொகை | சம்பளம் |
|---|---|---|
| சிவில் போமன் | 04 | QR 750 (21375/=) |
| மேசன்மார்கள் | 40 | QR 600 (17100/=) |
| தச்சன் (செடலிம்) | 40 | QR 600 (17100/=) |
| பார் வலைஞர் (Steel Fixcer) | 40 | QR 600 (17100/=) |

✓ வங்கி கடன் வசதியுண்டு
✓ கொந்தராத்து இரண்டு வருடங்கள்
✓ உணவு, தங்குமிடம், வைத்திய வசதிகள் இலவசம்.
✓ 8 மணித்தியாலங்கள் படி 6 நாட்களுக்கு வேலை.
✓ சென்று வருவதற்கான விமான டிக்கட்.
✓ மேலதிக வேலை நேரத்திற்கும் சம்பளம்.

முழுவதற்குமான கட்டணம் ரூ 50,000/= மட்டுமே

இன்றும் திறந்திருக்கும்
ஏனைய சட்ட திட்டங்கள் டோஹா கட்டார் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும்.
பாஸ்போட்,பாஸ்போட் அளவிலான புகைப்படங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

ஹேவாஸ் அசோஸியேட்ஸ் (பிரைவட்)லிமிட்
# 05, பிகரிங்ஸ் றோட்,கொழும்பு-13. (எட்டியாவத்தை சந்தி அருகாமையில்) தொலைபேசி : 011 4610240
License. No : 750
App: NO: AL/750/Advt/03/001/04
LOTUS

இதோ புதிய அறிமுகம்
K.U BAND DISK ANTENNA
* EUROSTAR Disk 90cm (3")
* EUROSTAR L.N.B.F
* ARI SAT Recever
Rs 18,000 மட்டுமே
CATV Amplifire, Recevers, Modulaters, L.N.B.F, Compiner, DiscEqSwtch, F.Socats, 10"Disk க்களும் உண்டு
KINGS Electronics
64.Stanly Road, Jaffna. T.P: 2223857
KINGS ELECTRONICS

## கண்ணீர்க் காணிக்கை

### அமரர் சுப்பிரமணியம் சரவணபவன்

(ஆசிரியர், குயிக் போட்டோ உரிமையாளர், தெல்லிப்பழை)
எமது உழைப்பின் உயர்விற்கு உறுதுணையாய் நின்ற உத்தமனை இழந்து தவிக்கின்றேன்.
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை உளமாரப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி!

**கஜபதி**
வெளிக்களப் படப்பிடிப்பாளர்.

இல.59,4 ஆவது ஒழுங்கை, குருமண்காடு, வவுனியா. (39571)(42-17-14)
இல.17/4, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1978 — 06 — 25
மறைவு 2003 — 11 — 25



### அமரர் இரத்தினேஸ்வரன் சுகுமார் (ரஞ்சன்)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உமது நினைவுடனே இப்பூவுலகில் வாழ்கிறோம்
மீண்டு ஒருக்கால் வந்து திருமுகத்தைக் காட்டிரோ?
ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்
ஓம்சாந்தி!

பிரிவால் துயருறும்:
இரத்தினேஸ்வரன் (தந்தை),
கலைவாணி (தாய்),
நிமலன், சுமன், இராசன் (சகோதரர்),
காஞ்சனா (மச்சாள்),
நிரஞ்சனா (சிறியமகள்).

8ஆம் வட்டாரம், மண்டைதீவு. (39577)(42-17-14)

## பயிற்சி முடித்த பயிலுநர்களின் முழுநாள் ஒன்றுகூடல்

பட்டதாரிகள் பயிற்சி நெறியை நிறைவு செய்யும் முதலாது தொகுதி அரச தொழில் பயிலுநர்கள் சேர்ந்து ஒன்றுகூடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

வலி.தென் மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் பயிற்சி பெறும் பட்டதாரி அரச தொழில் பயிலுநர்களே எதிர்வரும் 16ஆம் திகதி 'முழு நாள்' ஒன்று கூடலை ஒழுங்கு செய்துள்ளனர்.

மானிப்பாய்ப் பிரதேச சபை முதலாவது தொகுதி பட்டதாரிகள் சங்கத் தலைவர் ம.சதீஷ் குமார் தலைமையில் காலை 9 மணிக்கு ஒன்று கூடல் ஆரம்பமாகும். (ஐ-185)

## இலங்கை ஆசிரியர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடமாகாணக் கிளையின் 75ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் சா.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக சா.தியாகலிங்கமும் உப தலைவராக எஸ்.ராஜ்குமாரும் செயலாளராக வயாலச் சந்திரனும் பொருளாளராக என்.இரவிசந்திரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-6)

**வகுப்புகள் ஆரம்பம்**
ஆங்கிலம், சிங்களம் மற்றும் 4,5,6,7 ஆம் தர மாணவர்களுக்கான ஆங்கிலமொழி மூல (English Meadium) வகுப்புகள் 01.01.2005இல் ஆரம்பமாகவுள்ளன. 20.12.2004இற்கு முன் பதிவுசெய்யவும்.
தொடர்பு: கைலாசபிள்ளையார் பாலர் பாடசாலை,
278, நாவலர் வீதி,
(நாவலர் கலாசார மண்டபம் அருகில்), யாழ்ப்பாணம்.(39450)

## சித்திரப் பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.12

ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் சித்திரப் பயிற்சி நிறுவனத்தினால் புதிய கல்வியாண்டில் ஒரு மாதகால இலவச சித்திரப் பயிற்சிகான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (10-202)

## மானிப்பாய் இந்து கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இம் மாதம் நடைபெறவிருந்த களியாட்ட நிகழ்வும், கண்காட்சியும் பிற்போடப்பட்டுள்ளன.

பழைய மாணவர் சங்கச் செயலாளர் பேராசிரியர் சு. லீலாகிருஷ்ணன் இந்த தகவலைத தெரிவித்துள்ளார்.

காலநிலை சீரின்மையாலேயே இந்த நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளன என்றும் - அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இவற்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஐ-185)

## கண்ணீர்அஞ்சலி



**இலக்கிய கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)** அவர்கள்
தமிழ்வடிவமே தன்னிகரில்லாத் தமிழே
ஆசானுக்கும் ஆசானே ஆசிரியத் திலகமே
நின்பிரிவால் தமிழ் உலகம்
சற்றுத் திடுக்குற்றது காணீர்!

பிரிவுத்துயரில் நாமும் பங்குகொண்டு கண்ணீர்க் காணிக்கையை உமது பாதார விந்தங்களில் சமர்ப்பித்து உமைக்காத்து தமிழ், இலக்கிய, சமய நெறிமுறைகளைப் பேண வைத்த குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**
235,காங்கேசன்துறை வீதி,யாழ்ப்பாணம். (39552)(42-14-17)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சுப்பிரமணியம் சரவணபவன்

(ஆசிரியர்) - (குயிக் போட்டோ சேவிஸ், யாழ்ப்பாணம் - வவுனியா)
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம், இணுவில்.(39576)(42-14-17)
**சிவம் போட்டோ உரிமையாளரும், ஊழியர்களும்.**

## மரண அறிவித்தல்கள்

### கலாநிதி கந்தசாமிச் செட்டி சொக்கலிங்கம் (சொக்கன்)



நாயன்மார்கட்டைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் கலாநிதி கந்தசாமிச் செட்டி சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் 10.12.2004 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2004) திங்கட்கிழமை இல.593, பருத்தித்துறை வீதி, நல்லூரிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருவள்ளுவர் அச்சகம், 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (சி-39553)(42-14-17)
தகவல்: சொ.விமலன் (மகன்)

### வைத்திலிங்கம் துரைராசா

புன்னாலைக் கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் துரைராசா நேற்று (11.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆவரங்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் மேற்கு, புத்தூர். (39532)(42-14-17)
தகவல்: பிள்ளைகள்.

### செல்லையா குணம்



கொத்துக்கட்டி லேன், நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த செல்லையா குணம் நேற்று (2004.12.11) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2004.12.12) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்துக்கட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கொத்துக்கட்டி லேன், நவாலி தெற்கு, மானிப்பாய். (39575)(42-14-17)
தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி சூசை மனுவல் மெற்ரலின் மதலேனா (செல்லம்)



இல.19/1, கடற்கரைவீதி, ஈச்சமோட்டையைச் சேர்ந்த திருமதி சூசை மனுவல் மெற்ரலின் மதலேனா (செல்லம்) அவர்கள் நேற்று (11.12.2004) சனிககிழமை கர்த்தருக்குள் நித்தியமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசை மனுவலின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மரிசலிம் - ராசம் ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மரியாச்சி மற்றும் தங்கமணி, பூமணி, நேசமணி, சிங்கநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் நவரெட்ணம், குணம் (ஜேர்மனி), அழகு, பத்திமா, யோகராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் மாகிறேற், லூர்த்தம்மா, மனோரஞ்சிதம் (ஜேர்மனி), மகேஸ், பற்றிக், அன்ரன் (போதகர்) ஆகியோரின் அருமை மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணியளவில்19/1, கடற்கரை வீதி, ஈச்சமோட்டையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நல்லடக்கத்துக்காகக் கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1, கடற்கரைவீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (39561)(42-14-17-26)
தகவல்: டோ.அன்ரன் (போதகர்).

**பண்டிகைக்கால சிறப்பு விற்பனை**
ரிச்கேக் RICH CAKE
175 ரிச் கேக் தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்கள்

| | |
|---|---|
| 500g ரவை | 1 போ.கோல்டன் சிரப் |
| 500g பட்டர் | 200 கிராம் கெண்டீட் பீல் |
| 500g பிளம்ஸ் | 1 வனிலா எசன்ஸ் |
| 500g றெய்சின்ஸ் | 1 ஆமண்ட் சென்ஸ் |
| 500g செரீஸ் | 1/2 ரோஸ் எசன்ஸ் |
| 500g பம்கின் பிரசர்வ் | 1 வைன் கிளாஸ் தேன் |
| 600g கஜு | 2 வைன் கிளாஸ் பிரண்டி |
| 200g கறன்ஸ் | 1/4 தேக்கரண்டி உப்பு |
| 500g சவ்சவ் | 27முட்டைகள் |
| 500g ஜின்ஜர் பிரசர்வ் | (27மஞ்சள் கரு, |
| 1 போ.ஸ்ட்ரோபரி ஜேம் | 14 வெள்ளைக்கரு) |
| 600g சொவ்ட் சுகர் | (1/4 தேக்கரண்டி சாதிக்காய்) |

இவை அனைத்தையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள

செய்யும் முறை
முட்டை, சீனி, வறுத்த ரவை, பட்டர் முதலியவற்றைத் தவிர மற்றப் பொருள்களைச் சிறு துண்டுகளாக வெட்டி 5 நாள்களுக்கு வைக்கவும். வெள்ளைக்கருவைச் சீனியில் சேர்த்து நன்றாக அடித்து, வறுத்த ரவையைச் சேர்க்கவும். அத்துடன் மஞ்சள் கரு, பட்டர், வெட்டிய பொருள்கள், சிறிதளவு பேக்கிங் பவுடரையும் சேர்க்கவும். பிறகு கேக் டிரேயில் போட்டு பேக் செய்யவும்.

குறிப்பு 15", 18", 24" அளவுகளில் மின்சார மங்கள வாத்தியங்களும் (Electrics Drums) விற்பனைக்கு உண்டு
**பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்**
104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2386

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் வரதராஜா

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் வரதராஜா அவர்கள் 08.12.2004 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - யோகம்மாவின் அன்பு மகனும் சுமதியின் அன்புக் கணவரும் வதனா, செந்தூரன, சோனியா, லவன்னியா ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகாம்பிகை (யாழ்.), தங்கமலர் (பிரான்ஸ்), நஞ்சினிதேவி (பிரான்ஸ்), தர்மராணி (யாழ்), சறோஜினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் விநாயக மூர்த்தி (யாழ்.), இராசேந்திரம் (பிரான்ஸ்), பரமலிங்கம் (பிரான்ஸ்), கந்தசாமி (யாழ்.), கெங்காதரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2004) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*T.P. : 0776160343* (39593)(29-15-18) தகவல்: குடும்பத்தினர்.

## தம்பு பொன்னையா

(மாவடிக்கடை வர்த்தகர், சுழிபுரம்)

சுழிபுரம் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பு பொன்னையா நேற்று (11.12.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - வள்ளியம்மையின் மகனும் காலஞ்சென்ற செல்வத்தின் பேரனும் முத்துக்குமார் அன்னப்பிள்ளையின் மருமகனும் சரஸ்வதியின் கணவரும் காலஞ்சென்ற சிற்றம்பலம், பாக்கியம், பறுவதம், துரையப்பா மற்றும் கனகசபை, தருமலிங்கம் ஆகியோரின் சகோதரனும் குமார் (லண்டன்), இராஜகுமாரி (பிரான்ஸ்), இராஜகுமார் (பிரான்ஸ்), உதயகுமார், ஜெயக்குமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் விஜிதா (லண்டன்), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), இராஜகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகாஷ், ரஜியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சுழிபுரம் வடக்கு,* தம்பு தருமலிங்கம்,
*சுழிபுரம்.* (சி-39566)(38-29-14-16) மனைவி, பிள்ளைகள்.

## கந்தசாமி துரைஜயா (சரசமணி)

(ஸ்ரீ வாலசரஸ்வதி தேவஸ்தான அர்ச்சகரும், சித்த ஆயுள்வேத வைத்தியரும்)



தோப்புக்காடு, காரைநகரைச் சேர்ந்த கந்தசாமி துரைஜயா (சரசமணி) நேற்று (11-12-2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற கனகசுந்தரத்தின் அன்புக் கணவரும் தியானேஸ்வரன் (வைத்தியர்) அவர்களின் அன்புத் தந்தையும் சிவபுவனேஸ்வரியின் அன்பு மாமனாரும் சீலன், செல்வன், பாலன், சுகந்தினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-12-2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வலந்தலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தோப்புக்காடு,*
*காரைநகர்.* (39579)(26-14-16-29) பாலன் (பேரன்).

## திருமதி தவமணிதேவி சோமசேகரம்

கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும இல.23 5/3, அறித்துஸ்லா லேன், வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய திருமதி தவமணிதேவி சோமசேகரம் 06-12-2004 திங்கட்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் பேர்ள் மருத்துவமனை டாக்டர் சோமசேகரத்தின் அன்பு மனைவியும் கொக்குவில் மேற்கு காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் அன்னரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும் பராசக்தி, கமலநாதன், சிவயோகநாதன், சறோஜினிதேவி, பத்மலோஜினி, குகநாதன், சாவித்திரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஸ்ரீதர்சினி (ஜேர்மனி), ஸ்ரீபரன் (பிரான்ஸ்), ஸ்ரீவித்தியா (பிரான்ஸ்), ஸ்ரீபிரியா (கனடா), ஸ்ரீரம்மியா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் கிருபாநந்தன், ஜெயசீலன், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் கீர்த்தனா, பிரணவன், நர்த்தனா, மயூரிகா, பிரியந்திகா, அபிஷேக், ஆகாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நேற்று (11-12-2004) சனிக்கிழமை வைக்கப்பட்டு, இன்று (12-12-2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக கனத்தை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
*நாகபூசணி வீதி,* சு.கமலநாதன் (சகோதரன்).
*கோண்டாவில் கிழக்கு,* யாழ். 021 - 4590802
*கோண்டாவில்.* (39581)(26-14-16-29) கொழும்பு 011 - 2362158


## விற்பனைக்கு

ஓடு, கதவு, நிலை, ஜன்னல் என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
இல.180, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (39590)

## C.C.A.
### சுன்னாகம்

தரம் 6 முதல் O/L வரை
புதிய வகுப்புகள்
ஆரம்பம்:
12.12.2004 9.30 a.m.
(39534)


# மரண அறிவித்தல்

## திருமதி வேலாயுதர் செல்லம்மா

கிளான், துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் கரம்பைக் குறிச்சி, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதர் செல்லம்மா நேற்று (11.12.2004) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதரின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் நாகதேவன் (கிராம அலுவலர்), இந்திராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவவதனி (ஆசிரியை, வரணி மகா வித்தியாலயம்), புஸ்பநாதன் (தேசிய வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் வசந்த், துளசிகா, நிசாந்த், தாட்சாயினி, மயூரி, சாம்பவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.12.2004) சனிக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.நாகதேவன்
(மகன் -கிராம அலுவலர்).

*பருத்தித்துறை வீதி,*
*வரணி.*
*T.P. : 077 6198269* (சி-39562)(29-14-16)


நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

அஜித் (இருவேடம்), பூஜா நடித்த
அட்டகாசம்



(C-37740)
தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே.)

அடுத்த வெளியீடாக மிகவிரைவில் இந்தியாவிலும் இலங்கையிலும் அர்ஜுன், லைலா, வடிவேல் நடித்த



ஜெய் சூர்யா

ராஜா யாழ்ப்பாணம்

சில தினங்கள் மட்டும் இந்தியாவில் 200 நாள்கள் ஓடிய வெற்றிச்சித்திரம்
சேரன், சிநேகா, கோபிகா நடித்த
ஆட்டோகிராப்



காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது. (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
காலை 10.30, 2.30 (பு.நே.)
இளையதளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீலீஸ்)
தினசரி இரவு: 6.30, 9.00 (பு.நே.)
ஆங்கிலப்படம் The Lord of The Rings

நிர்மலகோபால் சங்கானை

சரத்குமார், லாரா நடித்த
சித்திரப்பதி (ரீலீஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.) SPIDER MAN-2



## கும்பாபிசேகம் பிற்போடல்

மாவை கொல்லங்கலட்டி
ஸ்ரீமத்சிதம்பரம் ஆனந்தநடராஜப் பெருமான்
நூதனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிசேகம்

நாளை (13.12.2004) திங்கட்கிழமை நடைபெறவிருந்த மகாகும்பாபிசேகம் தவிர்க்க முடியாத காரணத்தால் 15.12.2004 புதன்கிழமை காலை 8-9 மணிவரையுள்ள சுபவேளைக்கு மாற்றப்பட்டுள்ளது.

(39534)(38-14-16-29) -அறங்காவலர்.


# மரண அறிவித்தல்கள்

## நாகநாதி திருநாவுக்கரசு



புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 9 ஆம் யூனிற், பாவறகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதி திருநாவுக்கரசு அவர்கள் நேற்று (11.12.2004) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வேலாயுதம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சற்குணத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சிவகுரு, கனகம்மா நாகேந்திரம் மற்றும் இலட்சுமி, தம்பிராசா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மகுலசிங்கம், கனகரத்தினசிங்கம், நிர்மலராசன், ரவீந்திரன், கேதாரகௌரி, பக்தகௌரி, சிறீகௌரி கருணாகரன், அற்புதகௌரி, ஜெயகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் மஞ்சுளாம்பிகை, புவனேஸ்வரி, கமலாதேவி, கிருஸ்ணகுமாரி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் தியாகராசா, நாகேஸ்வரன், யாழினி, பாலகிருஷ்ணன், சசிகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொக்குவிலில் நடைபெற்று, பூதவுடல கோம்பையன்மணல் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*73/1, கே.கே.எஸ். வீதி,* மனைவி, பிள்ளைகள்,
*கொக்குவில்.* மருமக்கள்.
(39589)(29-14-16)

## இராமலிங்கம் இராமகிருஷ்ணன்



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த இராமலிங்கம் இராமகிருஷ்ணன் நேற்று (11.12.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் -பஞ்சவர்ணம் தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற இராசையா - சேதுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சீதாலட்சுமியின் அன்புச் சகோதரனும் கண்மணியின் அன்புக் கணவரும் சுகுமாரி, பாலச்சந்திரன் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம், யாழ்.), காலஞ்சென்ற மனோகரன், காலஞ்சென்ற உதயலட்சுமி, இராசேந்திரன் (ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி), நேசமலர், தீனதயாளன் (லண்டன்), சிறீதரன் (நிசாந்தன் - போராளி),கிருஷ்ணகுமார் (சிவகாமி ஸ்ரோர்), காலஞ்சென்ற கிரிதரன், இதயராசா (போராளி - கீரோ, வீரச்சாவு), பூமகள் ஆகியோரின் அன்புத் தந்தையும் பவளகேசரி (பவளம் - வினோ நகைப்பூங்கா), ஜெயநிதி (ஆசிரியை, யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி), திலகம், மகாலிங்கம், லோஜனா (லண்டன்), குமுதினி, தனஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் யாழினி நித்தியகரன் (ஹொலண்ட்), தமிழினி, சிவநேசன், மகிழினி, வேழினி, சுவாதினி, சோபிகா, நிஷாந்தன், தபோதரன், தயானி, தயாகரன், தயாரூபி, தயாராஜி, தயாபரன், மதிவதனன், பிரதீபன், தேனுஜா, ஷோதுஜன், கரிஷன் (லண்டன்), ஷேஷினி ஆகியோரின் அன்புப் பேரனும் நிவேதிகா (ஹொலண்ட்), சிவதர்மினி, சிவதருண் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (11.12.2004) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நீர்வேலி வடக்கு, நீர்வேலி.* (39588)(29-14-16) குடும்பத்தினர்.

## ஆறுமுகம் மார்க்கண்டு

கிழவிதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மார்க்கண்டு அவர்கள் நேற்று (11.12.2004) சனிக்கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் ஆறுமுகம் அவர்களின் அன்புப் புதல்வனும் பாக்கியம் அவர்களின் அன்புக் கணவரும் சிவக்கொழுந்து (சுவிஸ்), வாமதேவன் (லண்டன்), தெய்வேந்திரன் (பிரான்ஸ்), லோகநாதன் (ஆசிரியர், யாழ்.தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்), கலையரசி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கருணானந்தன், வாகினி, தயாளினி (ஆசிரியர், வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கிழவிதோட்டம்,* மா.லோகநாதன் (மகன்)
*கரவெட்டி கிழக்கு,* (ஆசிரியர், தொண்டமானாறு
*கரவெட்டி.* (சி-39561)(29-14-16) வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்).

## முருகேசு எழில்அரசி

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, V.M றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு எழில்அரசி 09.12.2004 வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் முருகேசு புனிதரத்தினத்தின் கனிஷ்ட மகளும் இளவரசி, உதயணன் (சுவிஸ்), குமணன் (சுவிஸ்), இளவதனி, இலட்சுமணன் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் பா.ஐங்கரதாஸ், உ.சுந்தரி (சுவிஸ்), ஞா.குணசேகரம், கு.பிறேமினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*V.M. றோட்,*
*பருத்தித்துறை.* (சி-39555)(29-14-16) குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சுப்பிரமணியம் சரவணபவன்

(ஆசிரியர், மகாஜனக் கல்லூரி)

நண்பர்க்கோ உயிரும் ஆவாய்!
நன்மையில் தெய்வம் ஆவாய்!
பண்புடன் பழகிக் கொள்வாய்!
பாசத்தைப் பொழிந்து கொள்வாய்!
நண்பரும் சுற்றத்தோரும்!
நல்ல ஊர் மக்கள் தாமும்!
கண்ணில் நீர் சிந்தி நின்று
கதறிடச் சென்றிட்டாயே!

பிரிவால் வாடும் நண்பர்கள்:
வேல்சிவானந்தன்,
செல்வரத்தினம் குடும்பத்தினர்.

(39586)(29-14-16)

# ராஜீவ் காந்தி கொலையில் சந்திர சுவாமிக்குத் தொடர்பு

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படு கொலையில் சர்ச்சைக்குரிய சுவாமிகளான சந்திர சுவாமிக்கும் தொடர்பு இருப்பதாகப் பரபரப்புத் தகவல் ஒன்றை இந்திய மத்திய புலனாய்வுத்துறை வெளியிட்டுள்ளது.

அந்நியச் செலவாணி மோசடி தொடர்பாக சந்திரசுவாமிக்கு எதிராக டில்லி நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட சமயம் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் உள்ள பக்தர்கள் சொற்பொழிவுகளை நடத்தத் தமக்கு அழைப்பு விடுத்து வருகின்றனர் என்றும் -

அதற்காக வெளிநாடு செல்ல அனுமதி வேண்டும் என்றும் - கோரி மனு ஒன்றை சந்திர சுவாமி தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை ஏற்கக்கூடாது என்று மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரி வி.என். மிஸ்ரா நீதிமன்றத்திடம் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திய ஜெயின் கமிசனின் சிபார்சுப்படி அமைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை கண்காணிப்பு ஏஜென்ஸியின் புலனாய்வு அதிகாரியாகக் கடமையாற்றும் மிஸ்ரா நீதிமன்றில் தெரிவித்ததாவது-

ராஜீவ்காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலிகளுக்கும் சந்திரசுவாமிக்கும் தொடர்பு இருந்தமைக்கான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளுக்கு அவர் நிதியுதவி வழங்கியுள்ளார் எனக் கருத இடமுண்டு. இவருடன் பல்வேறு நபர்கள் பணப்பரிமாற்றம் செய்துள்ளனர். இதுவிடயமாக 23 நாடுகளுக்குக் கடிதம் எழுதியுள்ளோம். 5 நாடுகளே பதில் அனுப்பியுள்ளன. ஏனைய நாடுகள் பதில் அனுப்பியபின்பே விசாரணைகள் பூர்த்தியாகும் - என்று தெரிவித்தார். (ஐ-3)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வண.கங்கொடவில தேரரின் ஓராண்டு நினைவு தினமே நேற்று ஆகும். அந்த நாளில் களியாட்ட நிகழ்ச்சியை நடத்த வேண்டாம் அதனை ரத்துச்செய்யுங் கள் என்று தென்னிலங்கையின் கடும் போக்கு பௌத்த தேரர்கள் கோரியிருந்தனர். இந்த நிகழ்ச்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மூன்று தினங்களாக குதிரைப்பந்தய சதுககத்துக்கு வெளியே பௌத்த தேரர்கள் உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்த எதிர்ப்பை அடுத்து களியாட்ட நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் நேற்றுப் பிற்பகல் உண்ணாவிரதிகளுடன் பேச்சு நடத்தினர்.

ஆறு மாதங்களுக்கு முன்னரே நாள் குறித்து ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்குத் தெரிவுசெய்த தினம் காலஞ்சென்ற தேரரின் நினைவு நாள் என்பது தமக்குத் தெரியாமற் போனதற்காக ஏற்பாட்டாளர்கள் வருத்தம் தெரிவித்தனர். களியாட்ட நிகழ்ச்சி ஆரம்பமாகும் போது காலஞ்சென்ற தேரரின் நினைவாக இரு நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்க அவர்கள் இணங்கினர். இதனையடுத்து, பௌத்த தேரர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். எனினும், தேரர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் குதிரைப்பந்தய சதுக்கத்தை நோக்கிப் பேரணியாகச் சென்றனர். அந்தப் பேரணியைப் பொலீஸார் தடுக்க முற்பட்டபோது அங்கு மோதல் வெடித்தது. பொலீஸார் தடியடிப் பிரயோகம் நடத்தி கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவி அவர்களைக் கலைத்தனர். இந்தக் களேபரத்தில் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. இச்சம்பவத்தில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒமல்பே சோபித தேரர் காயமடைந்தார்.

சாருக்ஹானின் கேளிக்கை நிகழ்ச்சி உல்லாசப் பயணத்துறை அமைச்சின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ-3-12-13)

## பாடசாலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் மூடப்பட்டன.

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை மண்டபங்களாகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் எதிர்வரும் 2005 ஜனவரி 10ஆம் திகதியும், ஏனைய பாடசாலைகள் 2005 ஆண்டு ஜனவரி 3ஆம் திகதியும் மீண்டும் திறக்கப்படவுள்ளன. (ஐ-51)

## கருணா குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வம் மக்கள் மத்தியில் திணிக்க முற்படுகிறது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களைப் பொறுத்தவரை தொப்பிகல, தரவை உட்பட அனைத்துப் பிரதேசங்களும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ்தான் உள்ளன.

சில முஸ்லிம் சகோதரர்கள் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக மக்கள் மத்தியில் பேசப்படுகிறது.

அப்படியிருக்குமானால் அவர்கள் அதனை தவிர்த்துக் கொள்வதன் மூலம் தமிழ் - முஸ்லிம் உறவை மேலும் வலுப்பெறச் செய்யமுடியும்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்கனவே இடம்பெற்று வந்த சந்திப்புகள் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்புகள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அண்மையில் மாவீரர் தினத்தின் போது கிழக்கில் அந்த நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் 'கருணா குழு' பெயரில் உளவியல் போர் தொடுக்கப்பட்டது தென்னிலங்கை ஊடகங்கள் கிழக்கு நிலைவரத்தை திரிபு படுத்தும் செய்திகளை வெளியிட்டன.

கிழக்கின் உண்மையான நிலைவரத்தை தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் நேரில் அறிந்துகொள்ள வாய்ப்பளிக்க இருக்கிறோம். விரைவில் அவர்களை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்ல இருக்கிறோம் - என்றும் கௌசல்யன் தெரிவித்தார். (ஐ-3)

## தமிழறிஞர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை நண்பகல் 12 மணிக்கு இறுதிச் சடங் குகள் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

கொழும்பில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் எழுத்தாளர்கள், தமிழறிஞர்கள் மற்றும் பிரமுகர்கள் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வருகைதரவுள்ளனர். (ஐ-3)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், பின்னர் கூட்டம் திகதி குறிப்பிடப் படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அரசின் சமாதானச் செயலகம் சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு அறிவித்துள்ளது.

கூட்டம் ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இந்தக் கவுன்ஸிலின் கூட்டங்களை ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன புறக்கணித்துவருவது தெரிந்ததே. (ஐ-3)

## சின்னக்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாக நடத்திவரும் மறியல் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது. இதனால், சின்னக்கடைப் பொதுச் சந்தை மேற்பார்வையாளர்களால் நேற்றுமுன்தினம் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்ட சின்னக்கடைப் பொதுச்சந்தையின் திறப்புக்களை சந்தை மேற்பார்வையாளர்களால் நேற்றையதினம் மீளவும் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

(ஐ-51)

## உடுப்பிட்டி இளைஞன் பிரான்ஸில் மரணம்!

வடமராட்சி,டிசெ.12

பிரான்ஸ் நாட்டில் சில தினங்களுக்கு முன்னர் மரணமான உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த இளைஞனின் சடலம் நேற்று சொந்த இடத்துக்கு எடுத்துவரப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னப்பு ரமேஸ் ( வயது 29) என்ற இளைஞனின் சடலமே எடுத்து வரப்பட்டது.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட இந்த இளைஞர் பிரான்ஸில் சித்த சுவாதீனத்துக்குள்ளாகித் தற்கொலை செய்துகொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-173)

## கலை,இலக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை' என்ற இவரின் பிரபலமான கட்டுரை மூலம் தன் உள்ளக்கிடக்கையை உலகிற்கு உணர்த்தியிருந்தார்.

வீரசிங்கம் என்ற புனைபெயரில் எழுதிய சிறுகதைகள் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை உணர்த்தியிருந்தார்.

அரங்குகளில் கூட தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு தன் ஆதரவைத் தெளிவுபடுத்தினார்.

தூயதமிழ்ப்பழக்கத்தை மீண்டும் வழக்கிற்கு கொண்டுவரும் எத்தனிப்பிற்கும் கருத்து உருவாக்கத்திற்கும் இவர் காட்டிய உற்சாகம் எமக்கு உறுதுணையாக விளங்கியது.

இவர் தளர்ந்திருந்த வேளையில் கூட எமது அழைப்பை ஏற்று கலை இலக்கிய அரங்குகளில் கலந்துகொண்டு காத்திரமான பங்களிப்பை நல்கினார்.

எம் மண்ணில் கலை இலக்கியத்துறையிலும் தமிழைச் செம்மையாகக் கற்றறிந்து தெளியும் அறிவுப் புலத்திலும் புதிய தலைமுறை ஒன்று இலகுவதற்கு இவர் ஆற்றிய பெரும்பணி காலத்தால் அழியாததாகும்.

கலை, இலக்கியம் மொழி என்பவற்றுடன் எம் மண்ணையும் நேசித்த நாட்டுப்பற்றாளராகவும் சொக்கன் ஐயா எம்முடன் வாழ்ந்து போனார்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருடனும் கலை, இலக்கியப் படைப்பாளிகளுடனும் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகமும் இணைந்துகொள்கின்றது.

எம் தேசத்தின் மூதறிஞர் ஒருவரின் பிரிவால் எமது விடுதலை அமைப்பு துயருற்றிருக்கிறது. வந்தபோதும் எம்முடன் இருந்தபோதும் இவர் பதித்த தடங்கள் இவரின் மறைவுக்குப் பின்னும் எம்முடன் இருக்கும். (ஐ-12)


★ நாற்பது மணித்தியாலங்கள் மட்டும்
★ A/L தமிழ் வழிகாட்டல்
★ முழுமையான வினாவிடை வகுப்பு

★ ஆறு அலகுப் பரீட்சைகள்
★ கையேடுகள் புத்தகங்கள்
★ வினா விடை அட்டவணைகள்

கட்டணம் 200/= மட்டுமே
முதல் வகுப்பு திங்கள் 10.00
ஈழத்து தமிழிலக்கிய வரலாறு (39476)(16-18-29)

Note: இறுதிக் கருத்தரங்கிற்கான இலவச அனுமதி (15.12.2004 வரை)
திரு.நாக.தமிழிந்திரன்
BEACON யாழ்.நகர்.

முக்கிய அறிவித்தல்
ஆசிரியர் அன்பழகனின் இரசாயனவியல் வகுப்புகள் இன்றிலிருந்து (12.12.2004) வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.
NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்.
(ஏ.39565)(16-18-29)

புதிய பிரிவுகள்
ஆரம்பம் : 12.12.2004
பகல் 10.00 மணி

| Diploma Courses | Duration |
|---|---|
| Diploma in Microsoft Office | - 3 Months |
| Diploma in Internet Technology | - 3 Months |
| Diploma in Desk Top Publishing | - 3 Months |
| Diploma in Hardware Engineering | - 4 Months |
| Diploma in Visual Basic Programming | - 3 Months |
| Diploma in Java Programming | - 3 Months |

இவ்வாண்டின் இறுதிச் சந்தர்ப்பம்
புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் இப்பிரிவில் இணைந்து கொள்ளலாம்
தலைமை அலுவலகம் : IBMS, # 410, K.K.S. Road, Jaffna.
கிளை நிறுவனங்கள் :
• NMMV Road, Nelliady
• Sangaththanai, Chavakachcheri

ஏலைற் கல்வி நிறுவனம்
147, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு 2005
தரம் 6 முதல் O/L வரை.
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
15.12.2004 புதன் பி.ப.3.00 (ப.நே.)
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- நிர்வாகி.
(39498)(22-16-18-29)

CATWAS.COM
Computer Academy
No: 26, Somasundram Avenue, Chundukuli. T.P.: 021 2223805
1. Online Diploma in Microsoft Office
Duration:- 01 Month - 100 Hours
2. Diploma in Desktop Publishing
Duration:- 01 Month - 40 Hours
3. Diploma in Hardware Diploma Course
50 Hours

| | |
|---|---|
| MS- Office | 1750/= |
| DTP | 2000/= |
| Hardware | 1500/= |
| Web Page | 3000/= |
| Video Mixing | 2500/= |

புதிய பிரிவு ஆரம்பம்: (அனுமதிகள் 15.12.2004 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.
Certificate Courses
Word 2003 Excel 2003 Access 2003 Power Point 2003 Cool 3D Corel Draw Photo shop PageMaker Studio Premiere


## மரண அறிவித்தல்

### திருமதி அருணாசலம் முத்துப்பிள்ளை

நாவற்காடு, வரணியைச் சேர்ந்த திருமதி அருணாசலம் முத்துப்பிள்ளை அவர்கள் நேற்று (11.12.2004) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் அமரர் அருணாசலத்தின் அன்புக் கணவரும் சரஸ்வதி, அமரர் மகேஸ்வரி மற்றும் நடராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாலிங்கம், வீரகத்தி, சறோஜினிதேவி ஆகியோரின் மாமியாரும் தேவராணி, தேவதாஸ், தேவகுமாரி, தேவரதி, தேவகுமார், வீரகுமார், வீரமணி, மகேந்திரகுமார், மஞ்சுளா, நளாயினி, சிவகுமார், சிவநிதி, மதுராகரன், வசந்தரூபன், இராசரூபன், இன்பரூபன், சிவரூபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நாவற்காடு, வரணி. (39595)(29-16-18) அ.நடராசா (மகன்).

## மரண அறிவித்தல்

### தம்பிராசா முத்துராசா

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா முத்துராசா நேற்று(11.12.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - இராசம்மாவின் மகனும் கமலேஸ்வரியின் பாசமிகு கணவரும் தமிழ்ராணி, ராஜி, ரஜீவன், ரதீபன், ராதீகா ஆகியோரின் அன்புத் தந்தையும் அரியராசா, கமலாதேவி, விமலாதேவி, இராசமணி (சுவிஸ்), நாகராசா, புஸ்பம், காலஞ்சென்ற ஆனந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் துரைராசா, தருமலிங்கம், நித்தியானந்தம், சிதம்பரவரதன் (சுவிஸ்), சிரோண்மணி, இராசமலர், சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் இளங்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (39596)(29-16-18)

தகவல்:
கமலா (மனைவி),
பிள்ளைகள், சகோதரர்கள்.






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வடபகுதி மக்களுக்கு சிறந்தசேவை வழங்க ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் திட்டம்

வடமாகாண மக்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் தங்களைக் காப்புறுதி செய்ய வேண்டும். நாட்டின் ஏனைய பாகங்களிலுள்ள மக்களை விடவும் வடபகுதி மக்களுக்கே காப்புறுதி மிக முக்கியம்.

— இவ்வாறு தெரிவித்தார் Janasakthi Insurance Co. Ltd நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சந்திரா சாப்டர்.

'உதயன்' செய்திக்காக காப்புறுதி தொடர்பான விளக்கங்களை அளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில் தெரிவித்ததாவது:—

பல வருடங்களாகத் தொடர்ந்த யுத்தம் காரணமாக வடபகுதி மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மக்களைவிடவும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிர்ச் சேதங்கள் மட்டுமன்றி பொருட்சேதங்களும் பெருமளவில் ஏற்பட்டுள்ளன. இவர்கள் காப்புறுதி செய்துகொள்ளுதல் மிக அவசியம்.

இப்பகுதிவாழ் மக்களுக்கு சேவைசெய்யும் நோக்கிலேயே நாம் இப்பொழுது எமது காப்புறுதிச்சேவையை வடபகுதிக்கும் விஸ்தரித்துள்ளோம்.

யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டவுடனேயே நாம் 2002 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் முதலாவது கிளையை நிறுவினோம். அதனையடுத்து வவுனியாவில் மற்றுமொரு கிளையை நிறுவினோம். இந்த இரண்டு கிளைகளும் வட மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்குக் காப்புறுதிச் சேவையை வழங்கிவருகின்றன.

நாடு முழுவதிலும் நாம் 70 கிளைகளைக் கொண்டு இயங்கினாலும் காப்புறுதிச் சேவையை வழங்குவதில் யாழ்ப்பாணக் கிளையே முதலாம் இடத்திலுள்ளது. அக்கிளை வழங்கிவரும் சிறந்த சேவையே இதற்குக் காரணம். வடபகுதியில் மாத்திரம் ஐயாயிரத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

ஏனைய மக்களை விடவும் வடபகுதி மக்களே காப்புறுதிக் கட்டணங்ளை ஒழுங்காகச் செலுத்துகின்றனர். நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள எமது வாடிக்கையாளர்களில் அநேகர் மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு தடவையே கட்டணத்தைச் செலுத்துகின்றனர். ஆனால், வடபகுதி மக்கள் மாததோறும் தவறாமல் செலுத்துகின்றனர். இவர்கள் காப்புறுதியின் முக்கியத்துவம்பற்றி நன்கு உணர்ந்துள்ளனர்.

நாம் பலவகையான காப்புறுதிகளை வழங்கி வருகின்றபோதிலும் வடபகுதி உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஆயுள் காப்புறுதியே பிரபல்யமாகவுள்ளது.

Janasakthi Insurance Co. Ltd. 1994 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. அப்போது ஆயுள் காப்புறுதி தவிர்ந்த ஏனைய காப்புறுதிகளை வழங்கும் நிறுவனமாகவே இது ஆரம்பிக்கப்பட்டது. பின்பு ஆயுள் காப்புறுதியையும் தன்னோடு இணைத்துக் கொண்டது. இப்போது ஆயுள், தீ, வாகன மற்றும் குழந்தைக் காப்புறுதிகளை வழங்கி வருகின்றது.

இது நாடு பூராகவும் 70 கிளைகளைக் கொண்டு இயங்குகின்றது. போதுமான கிளைகள் உள்ளதனால் மேலும் கிளைகளை அதிகப்படுத்தும் திட்டம் ஏதும் எம்மிடமில்லை.

இலங்கையின் எந்தப் பாகத்திலும் மூன்று மொழிகளிலும் காப்புறுதிச் சேவையை வழங்குகின்ற ஒரேயொரு காப்புறுதி நிறுவனம் Janasakthi Insurance Co. Ltd மட்டுமே. இது இலங்கையில் உள்ள காப்புறுதி நிறுவனங்களில் மூன்றாம் இடத்தில் உள்ளது. சர்வதேச காப்புறுதி நிறுவனங்களின் தொடர்புகள் ஏதுமில்லை.

நாம் சமூக சேவைகளிலும் ஈடுபட்டு வருகின்றோம். உதாரணமாக அநுராதபுரத்தில் உள்ள சில அநாதை இல்லங்களுக்கு உதவி வருகின்றோம். வடபகுதி மக்களும் எம்மிடம் உதவிகேட்டு வந்தால் உதவிசெய்யத் தயாராய் உள்ளோம் எனக் கூறினார்.













# குழந்தைகளுக்கான காப்புறுதித்திட்டத்தை அறிமுகம் செய்கிறது ஶ்ரீலங்கா இன்சூரன்ஸ்

Sri Lanka Insurance நிறுவனம் 'மினிமுத்து' எனும் குழந்தைகளுக்கான புதிய காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

'மினிமுத்து' இலங்கையில் முதன்முதலாக தாய், தந்தை இருவரையும் தனியொரு கட்டுப்பணத்தின்மூலம் காப்பீடுசெய்யும் 'குழந்தைக் காப்புறுதி'த் திட்டமாகும். தாய், தந்தை இருவரில் ஒருவரின் மரணத்தின் போதோ அல்லது உயிர்வாழ்வின்போதோ பிள்ளையின் வாழ்க்கையில் நிச்சயித்த ஓர் நோக்கத்தைப் பூர்த்திசெய்யும் பொருட்டு உறுதியான நிதியமொன்றைப் பெற்றுக் கொடுக்கும் விதத்தில் இக்காப்புறுதித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதிர்வடையும் போது அதாவது தேர்வுசெய்த ஒரு காலப்பகுதிக்கு தவணைக்கொடுப்பனவுகள் பூர்த்தியடையந்ததும் நான்குவருட காலப்பகுதிக்குள் காப்புறுதித் தொகையின் நூற்று நாற்பது சதவீதத்துடன் இலாபப் பங்கும் பிள்ளைக்கு பெற்றுக்கொடுக்க ஏதுவாகும். இக்காப்புறுதித் திட்டத்தின் பிரதான பண்புகள் பின்வருவனவாகும்.

**காப்புறுதிக் காலத்தில்....**

*தாய், தந்தையரில் ஒருவரின் மரணத்தின்போது (விபத்து அல்லது இயற்கை




மரணம்) காப்புறுதித்தொகை இரு மடங்காகப் பிள்ளைக்குவழங்கப்படும். தொடர்ந்து செலுத்தவேண்டிய கட்டுப்பணக் கொடுப்பனவிலிருந்து விடுவிப்பு அளிக்கப்படும்.

*இவ்வாறு நஷ்டஈடு வழங்கப்பட்டாலும் முதிர்வின்போது செலுத்தப்படவேண்டிய காப்புறுதித் தொகையின் நூற்று நாற்பது சதவீதம் நிச்சயமாக அவருக்கு/அவளுக்கு வழங்கப்படும்.

*குழந்தையின் வயதிற்கேற்ப காப்புறுதிக் காலத்தை 5 முதல் 20 வருடங்கள் வரை பெற்றோர் தெரிவுசெய்யமுடியும். சந்தையில் கிடைக்கின்ற குழந்தைக் காப்புறுதித் திட்டங்களுடன் ஒப்பிடும்போது இது மிகச்சிறந்த நெகிழ்வுத்தன்மையுடன் கூடிய காப்புறுதித்திட்டமாகும். ஆகையால்ஒருமாதக் குழந்தையிலிருந்து 15 வயது வரையான பிள்ளையைக் கொண்டுள்ள பெற்றோர் இத்திட்டத்தில் காப்பீடு பெறலாம். அதனால் பிள்ளையின் வயது பத்தாக இருப்பினும் பிள்ளைக்கு அனுகூலம் கிடைக்கும் விதத்தில் இதனைத் திட்டமிடலாம்.

*பெற்றோர் ஒருவர் காப்புறுதிசெய்யப்பட முடியாத போதும் பெற்றாரில் ஒருவருக்கு மட்டுமோ அல்லது பெற்றாரில் இருவரும் இல்லாத சமயத்தில் சட்டரீதியான பாதுகாவலரைக் காப்பீடு செய்யும் விதத்திலோ மினிமுத்து காப்புறுதித் திட்டத்தைப்பெற்றுக்கொள்ளலாம்.

*பெற்றாருக்குப் பொருத்தமான விதத்தில் பிள்ளையின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தேவையான அனைத்து (சாருரை) மேலதிகக் காப்பீடுகளையும் இத்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளலாம். இதன் சிறப்பு என்னவெனில், பெற்றோரில் யாரேனும் ஒருவர் தீராத நோய்க் காப்பீடு அல்லது வைத்தியசாலைச் செலவுக் காப்பீடுகளின்கீழ் நஷ்டஈடு பெற்றிருப்பினும் அடுத்தவர் இவ்விரு அனுகூலங்களுக்கும் உரிய தவணைக் கட்டணத்தைத் தொடர்ந்து செலுத்துவதன் மூலம் அக்காப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

*பிள்ளையின் பாதுகாப்புக்காக 'ஜீவக' தீராத நோய்க் காப்புறுதியையும், 'ஆரோக்யா' வைத்தியசாலை செலவுக் காப்புறுதியையும் இத்திட்டத்தில் உள்ளடக்க முடியும். பிள்ளையின் வயது 20 ஆகும் வரை இக்காப்பீடுகள் நடைமுறையில் இருக்கும்.


*பெற்றார் இருவரினதும் அவதானம், பாதுகாப்பு மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றின் கீழ் வளரும் குழந்தையின் வாழ்க்கைக்குப் பல்வேறு இலக்குகள் இருக்க முடியும். தாம் வயதுக்கு வந்ததும் நல்ல தொழிலொன்றைப் புரிவது, பாரிய வியாபாரமொன்றின் உரிமையாளராவது, உதாரண புருஷனாவது மற்றும் சிறந்த பிரஜையாவது போன்ற எதிர்பாப்புகளை அடைவதற்கான கால்கோளாக மினிமுத்து காப்புறுதித் திட்டம் செயற்படும்.

இது நிச்சயமாக கல்வியொன்றை மட்டும் இலக்காக்க நிதி வழங்கும் காப்புறுதித் திட்டமாக அமையாதது இவ்வாறான காரணங்களினாலேயேயாகும்.

ஆயுள் காப்புறுதித்துறையில் புதிய பாதையின் மீது அடி வைத்திருக்கும் ஶ்ரீலங்கா இன்சூரன்ஸ், நபர்களின் தேவைகளுக்கேற்றபடி அவரது அல்லது அவளது வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் பொருந்தக்கூடிய விதத்தில் தீர்வுகளை முன்வைக்க முடியுமான நெகிழ்வுத் தன்மை வாய்ந்த காப்புறுதித்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

வாடிக்கையாளரின் தேவைக்குப் பொருந்தக் கூடிய விதமாக மாற்றக்கூடியவையாக இத்திட்டங்கள் அனைத்தும் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு தமது வாடிக்கையாளருக்கு இலகுவான மற்றும் விரைவான சேவையை வழங்கும் பொருட்டு 75 கிளைகளைக்கொண்ட வலையமைப்பை கணினி மயப்படுத்தியுள்ளதோடு நாட்டின் எந்தவொரு கிளையிலும் உறுதிப்பத்திர விவரங்களயும் மற்றும் சேவைகளையும் ஒன்றுபோலவே பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. தமது காப்புறுதிக் கட்டுப் பணத்தை வைப்பிலிடுவதற்கான புதிய திட்டங்கள் பலவற்றை ஶ்ரீ லங்கா இன்ஷூரன்ஸ் அறிமுகப்படுத்தவுள்ளது. வாடிக்கையாளர் ஒருவருக்கு சம்பத் வங்கியுனூடாக 6 ஏற்பாடுகள் மூலமும், கொமர்ஷல் வங்கியினூடாக பல்வேறு முறைகள் மூலமும் கட்டுப்பணம் செலுத்தமுடியும்.

சிறந்த சேவையை வழங்கும் முன்னோடி என்ற வகையில் தமது தலைமைக் காரியாலயம் உட்பட கிளைகள் பலவும் 24 மணிநேர சேவையை வழங்கும் நிலையங்களாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. மேலும் வாடிக்கையாளருக்கு 24 மணிநேரமும் ஆயுள் காப்புறுதி சம்பந்தமான விவரங்களை பெற்றுத் தரும் நோக்கில் 0112 357000 என்ற தொலைபேசி இலக்கம் பாவனையிலுள்ளது.




இன்பத்திலும் துன்பத்திலும், வறுமையிலும் செல்வத்திலும், அமைதியிலும் குழப்பத்திலும், மழையிலும் வெய்யிலிலும் நிதமும் உங்களுடன் இருந்ததனாலேயே நீங்கள் எங்கள்மீது நம்பிக்கை கொண்டுள்ளீர்கள்.

அதி தீவிர யுத்த காலத்திலும் கூட இலங்கை வங்கியின் 16 கிளைகள் வடக்கில் முழுமையாக இயங்கின. முக்கியமாக யாழ்ப்பாணத்தில் மட்டும் 11 கிளைகள் இயங்கின என்றால் குறிப்பிடவும் வேண்டுமா? எந்தவொரு வங்கியுடனும் ஒப்பிடமுடியாத நம்பகத்தன்மையையும் உறுதிப்பாட்டையும் இது நிரூபிக்கின்றதல்லவா?

BOC
லංකා බැංකුව இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

FIRST & FORWARD

# இந்திய எண்ணெய்க் கம்பனி பங்குகளை விற்பனைக்கு விடுகிறது

IOC இந்திய எண்ணெய்க் கம்பனி அதன் நூறு கோடி ரூபா பெறுமதியான பங்குகளை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது.

ஒவ்வொருபங்கும் பத்து ரூபா பெறுமதி வாய்ந்ததாகும். இவை இருபத்து மூன்று ரூபா முதல் இருபத்துஏழு ரூபா வரைக்கு விற்கப்படும். விற்பனைப்படிவங்கள் இப்போதிருந்தே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இப்பங்கு விற்பனைமூலம் 300 கோடி தொடக்கம் 360 கோடி ரூபா வருமானம் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இவ்வருமானத்தைக் கொண்டு திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் சில்லறை விற்பனை நிலையங்கள், ஏனைய எண்ணெய்க் குதங்கள் போன்றவற்றைச் செப்பனிடுதல் மற்றும் புதிதாக எண்ணெய்க் கலவை நிலையம் ஒன்றை நிர்மாணித்தல் போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இப்பங்கு விற்பனைமூலம் இருபது முதல் இருபத்தைந்து வீதம் வரையிலான உரிமைகள் பொதுமக்கள் வசம் சென்றுவிடும்.

இத்திட்டம் வெற்றியளிக்குமாயின் இதனைத் தொடர்ந்து மீண்டும் கணிசமான தொகுதி பங்குகள் விற்கப்படும்.

IOC நிறுவனம் 2002ஆம் ஆண்டில் இலங்கையில் எண்ணெய் வர்த்தகத்தில் நுழைந்தது. திருகோணமலை எண்ணெய்க் குதத்தை மையமாகக்கொண்டு இது சிறப்பாக இயங்கிவருகின்றது.

திருகோணமலை எண்ணெய்க்குதம் 35 வருடக் குத்தகைக்கு IOCயினால் பெறப்பட்டுள்ளது. இதில் 99 குதங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் 1.2 கிலோலீற்றர் கொள்ளளவைக் கொண்டுள்ளது. இருப்பினும் தற்பொழுது 15 குதங்கள் மாத்திரமே சேவையில் உள்ளன. அடுத்த இரண்டு வருடத்துக்குள் இவற்றுள் 35 முதல் 40 வரையிலான குதங்கள் புனரமைக்கப்படும்.

இதுதவிர LPG (திரவ பெற்றோலிய வாயு) தொடர்பான அபிவிருத்தித்திட்டங்களும் அடுத்தடுத்து இடம்பெறும். உலகில் 17ஆவது எண்ணெய்க் கம்பனியான IOC இந்தியாவில் முன்னணிக் கம்பனியாகும். இக்கம்பனியின் கடந்த வருட வருமானம் 30 கோடியாகும். இதில் லாபம் ஒரு கோடி 60 லட்சம் அமெரிக்க டொலராகும்.

சூரியகாந்தி

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
12-12-2004

# அரசியல் சூனியத்துள் எழும் போர்ப்பிணி!

டன்ஸ்ரன் லூயிஸ்

நோர்வேயின் 'நாடோடி மன்னன்' வன்னி வருகிறார். 'இறுதிக் கடமையின்' நிமித்தம் அவர் வருகிறார். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளைப் பற்றி மட்டும் முதலில் பேசுவது என்றும் அவ்வாறு பேசும்போது சர்ச்சையான விடங்களைப் பேச்சு மேசையில் ஆராயமுடியும் என்றும் விடுதலைப் புலிகளின் தலைமை திட்டவட்டமாக அறிவித்திருந்தது.

'அரசியல் சூனியம்' நிறைந்த இந்நாள்களில் (விடுதலைப் புலிகளின் தலைமை 'அரசியல் வெறுமை' எனும் சொற்றொடரைப் பிரயோகித்திருந்தது) 'நாடோடி மன்னன்' எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து ஏதாவது புதிய 'ஓலை' கொண்டுவரும் சாத்தியப்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. மீண்டும் சொல்ஹெய்ம் 'பழைய உக்கிய ஓலையுடன்' வரக்கூடும். அதில் 'இடைக்காலத் தீர்வுடன் நிரந்தரமான அரசியல் தீர்வு பற்றியும் பேசியாகவேண்டும்' என்று அம்மையாரின் அரசு வலியுறுத்துவதாக இருக்கக்கூடும். பழைய உக்கிய ஓலைக்கு விடுதலைப் புலிகளின் தலைமை என்ன பதிலை நாடோடி மன்னிடம் கொடுத்தனுப்பக்கூடும்?

கடந்த வாரம் கொழும்பு - 7 இல் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தும் சமாதான அமைப்பு ஒன்று இரண்டு நாள்கள் பயிற்சிப் பட்டறையுடன் கூடிய கருத்தரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட இலங்கையின் அனைத்து மாகாணங்களினதும் மாவட்டங்களிலிருந்தும் பொது அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் வந்து கலந்துகொண்டனர். இப்பிரதிநிதிகள் மத்தியில் ஏராளமானோர் இளைஞர், யுவதிகளாக இருந்தனர். வடக்கு - கிழக்கின் பிரதிநிதிகள் மீண்டும் போர் வெடிக்கும் அபாயம் பற்றித் தமக்கிடையே கலந்துரையாடியது மட்டுமன்றி அரங்கிலும் தெளிவாக எடுத்துரைத்தனர். போர் மூளும் எல்லைக்கு நிலைமை வந்துவிட்டது என்றும் உடனடியாகப் போர் மூளுவதைத் தடுத்துநிறுத்தும் வகையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சிவில் பிரதிநிதிகளுடன் இணைந்த வகையில் குறிப்பிட்ட சமாதான அமைப்பு ஒரு கொள்கை அறிக்கையை வெளியிடவேண்டும் என்றும் சிலர் வலியுறுத்தினர்.

அந்த சமாதான அமைப்பின் அரங்க ஒழுங்கில் தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் முதலில் உரையாற்றியிருந்தனர். இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். இடதுசாரிக்கட்சியொன்றின் மூத்த அரசியல்வாதியொருவர் 'பாதி புரட்சியும் பாதி மக்களின் சட்டபூர்வ ஆதரவும்' கொண்டதான வகையில் கொழும்பு அரசை முழுவதுமாகக் கைப்பற்றுவதற்கு ஜே.வி.பி. முயலுகிறது என்றும் அவ்வாறு ஓர் ஆட்சிக்கவிழ்ப்பை ஜே.வி.பி. வெற்றிகரமாகச் செய்து முடிக்குமெனில், இலங்கையின் நவீன வரலாற்றில் இருண்ட பக்கங்களாக அவை இருக்கும் என்றும் 'உதயன்' பத்திரிகையாளருக்குக் கூறினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதியொருவரிடம் - அங்கு முதல் நாள் உரையாற்றியிருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் 'சமாதானத்தைச் சிதைக்கும் வேலையைத் தமிழர் பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுவோரே செய்கின்றனர்' என்றும் 'போர் நிறுத்தக் காலத்தில் சமாதானத்துக்காக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி பலபேரைத் தியாகம் செய்துள்ளது' என்றும் பேசியிருக்கிறாரே என்று கேட்டபோது -

'இவ்வாறான நிலைமையில்தான் நாங்கள் கருத்துப் போராட்டத்தைச் செய்கிறோம். எவ்வளவு கஷ்டமான காரியம் இது. நாங்கள் ஒன்றைச் சொல்ல அவங்கள் இன்னொன்றைச் சொல்லிக் குழப்புறாங்கள்' என்று தெரிவித்தார். போர் நிறுத்தத்தின் அடுத்த கட்டம் பற்றி மிகக் கவலையுடன் கருத்துத்தெரிவித்த அந்த அரசியல்வாதி, 'போர்தான் போரேதான்' என்று அழுத்திக் கூறினார். 'அப்பாவிப் பொதுச் சனங்களின் நிலைமை என்ன?' என்று கேட்டபோது, 'புலிகளுக்கும் வேறு மாற்று வழி இல்லையே! எல்லோரும் ஒன்றை விளங்கிக்கொள்ளவேண்டும். இனியொரு போர் நடந்தால் இலங்கை முழுக்கலும்தான் போர் நடக்கும். யாழ்ப்பாணத்திலேயோ, திருகோணமலையிலேயோ, மட்டக்களப்பிலேயோ மட்டுமல்ல' என்று இறுகிய முகத்துடன் பதில் அளித்தார். இவ்வாறான அவலமான எதிர்பார்ப்புகள் அனைவரையும் கவ்வியுள்ள அரசியல் சூனிய காலத்தில் நோர்வேயின் 'நாடோடி மன்னர்', விசேட சமாதானத் தூதர் எரிக்சொல்ஹெய்ம் வன்னி வருகிறார். விடுதலைப் புலிகளின் போக்கு எவ்வகையில் செல்லுமோ என்பது பற்றிய எதிர்பார்ப்புடன் செய்தியாளர்கள் பலர் வன்னி போய்ச் சேர்ந்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா அவர்கள், விடுதலைப் புலிகள் மீண்டும் போரைத் தொடங்கிவிடுவார்களா என்று கேட்டு வருமாறு எரிக்சொல்ஹெய்மிடம் விநயமாகக் கேட்டுத் தொலைபேசியில் கதைத்துள்ளார் என்று செய்தி வெளியாகிய அதேவேளை, நோர்வே சமாதான முயற்சிகளிலிருந்து விலகி விடவேண்டும் என்று கோரும் கடிதத்தை ஜே.வி.பி. நோர்வே அரசுக்கு அனுப்பி வைத்திருந்தது. 'பொருளியல் காரணங்களின் அடிப்படையில் போர் ஒன்று மீண்டும் வெடிப்பதை ஜனாதிபதி உளப்பூர்வமாக விரும்பவில்லை. அரசியல் காரணங்களின் அடிப்படையில் போரில் அரசியல் முதலீடு செய்வதில் ஜே.வி.பி. ஆர்வம் கொண்டுள்ளது. இவ்விடயத்தில் இந்திய ஆளும் வர்க்கத்தில் ஒரு சாரார் ஜே.வி.பியை ஆதரிக்கின்றனர்' என்றும் அரசியல் அவதானியொருவர் தென்னிலங்கையில் தெரிவித்தார்.

'போர் யார் யாரையெல்லாம் விழுங்கப்போகிறதோ யாரை யார் காப்பாற்றுவார்களோ...???' போன்ற கேள்விகளுடன் இலங்கையின் சிவில் சமூகங்கள் நடைபிணங்களாக எத்தனை காலம் வாழ்வது?

# யாரோடு நோவோம்...?

'மழைக்காலம் வழிவழுக்கும்' என்று முதியவர்கள், சிறுவர்களுக்கு அறிவுரை கூறுவர். வழி - பாதை - வழுக்குமோ என்னவோ மழையின் பின்னர் நமது தார் போடப்பட்ட வீதிகள், தெருக்கள் ஆபத்தை விளைவிக்குமளவுக்குச் சீரற்றுப் போய்விட்டன. தொடர்ச்சியாக - சோனாவாரியாகப் பெய்த கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் பல இடங்களிலும் வீதிகளை அடித்துச் சென்றுவிட்டது. வன்னிப் பிரதேசத்தில் இத்தாக்கம் அதிகம்.

சமாதானம் வந்து பல மாதமாகிவிட்டது. இன்னமும் நமது வீதிகள் சரிவரப் புனரமைக்கப்படவில்லை. கண்டி வீதி, புரந்தன் - முல்லைத்தீவு வீதி ஆகியனவே ஓரளவுக்கேனும் புனரமைக்கப்பட்ட வீதிகளாகும். அவையும் அண்மைய மழையால் பாதிக்கப்பட்டுள்ளன. மற்றப்படி வன்னியின் உட்பிரதேசங்களில் உள்ள மண் சாலைகள் வெயிற்காலத்தில் புழுதியை வாரியிறைக்கும்; மழைக்காலத்தில் சேற்றை வாரியிறைக்கும் நிலையே உள்ளது. பள்ளமும் திட்டியுமாக சிதைவுற்று இருக்கும் இப்பாதைகள் அவசர நோயாளர்களை விரைவாக எமலோகத்துக்கு அனுப்பும் கைங்கரியத்தை வெகு கச்சிதமாகவே செய்து முடித்துவிடும். யுத்தம் சிதைத்துச் சின்னாபின்னமாக்கிய இப்பிரதேசங்களின் வாழ்நிலையில் எந்த முன்னேற்றமுமில்லை. அதற்கு அவர்கள் பயன்படுத்தும் வீதிகளே தக்க சான்றுகளாகும். எந்தச் 'சக்தி'யும் அவர்களின் அவல வாழ்வைத் தேடிக் கண்டுபிடிக்கவில்லை.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதிகள் கூட அத்துணை மேம்பட்டனவல்ல. குண்டும் குழியுமற்ற வீதிகளை எந்த இடத்திலும் காணமுடியாது. நகரப் பிரதேசத்திலேயே பல வீதிகள் சேதமுற்றிருப்பதை அவதானிக்கலாம். அவ்வாறாயின் கிராமத்துத் தெருக்களின் நிலை சொல்லுந்தரமன்று. 'செல்வாக்கு' மிக்கவர்கள் வாழும் தெருக்கள் மட்டும் பிழைத்துக் கொண்டன.

வீதிகள் மழை நீர் தேங்காத வண்ணம் கவிழ்ந்த பீலி வடிவில் - நடுவே உயரமாக இருக்க, அதிலிருந்து இருகரைகளை நோக்கியும் சாய்வதாக - இருப்பதே பொருத்தமானதாகும். இவ்விடயத்தில் சரியான நுட்பங்கள் பயன்படுத்தாமல் வீதிகளை அமைக்கும்போது, சரியாக நீர் வழிந்தோடாமல் தேங்கி நிற்கவும், இதனால் வீதிகள் பழுதடையவும் நேரிடுகிறது. இங்கே 'ஒப்பந்தகாரர்'களின் தூர நோக்கு என்பது முக்கியமானது.

நமது பிரதேசத்தில் காணப்படும் சுண்ணாம்புக் கற்கள் மழை நீரால் சிதைவடையவும், உடையவும் கூடியன. சிறு தெருக்களுக்கு இல்லாவிடினும், பிரதான வீதிகளை அமைக்கும்போதாவது கருங்கற்களைப் பயன்படுத்துவதோ, பின்பற்றுவதோ சிமெந்துத் தரை அமைப்பு முதலான வழிமுறைகளைப் பின்பற்றுவதோ பயனுள்ளதாக இருக்கும். முன்னர் சிமெந்துத் தரை அமைக்கப்பட்ட இடங்களில் அவை இன்றும் சிதைவடையாதிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரதேச சபை, நகரசபை, மாநகர சபை என அமையும் உள்ளூராட்சி அமைப்புகளால் நிர்வகிக்கப்படும் உள்ளூர் வீதிகள் பல நீண்டகாலமாக - தசாப்தங்களாக - திருத்தப்படாமல் உள்ளன. மக்கள் பிரதிநிதிகள், அதிகாரிகளது கடைக்கண் பார்வைக்கு உட்படாதவை அவை. அதேவேளை, போதிய நிதியுதவிகள் வழங்கப்படுமானால் எல்லாத் தெருக்களையும் புனரமைக்க வேண்டிய கட்டாயம் அல்லது வாய்ப்பு அச்சபைகளுக்குக் கிடைக்கும். அல்லாவிடில் முன்னுரிமைப்படுத்துவதில் தனிப்பட்ட செல்வாக்குகள் மேலோங்குவது தவிர்க்க முடியாததே.

உண்மையில் வீதியொன்று அமைக்கப்பட்டால், உரிய காலங்களில் திருத்தங்களும், தார்போர்வையிடலும் செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்யப்படாத நிலையிலேயே அநேகமான வீதிகள் சேதத்துக்கு உள்ளாகிப் போக்குவரத்துக்குப் பேரிடைஞ்சலை உண்டு பண்ணுகின்றன. பெரும்பாலான விபத்துக்களுக்கும் காரணமாகின்றன.

வீதித் திருத்தங்கள் என்ற பெயரில், தாரும் கற்களும் சேர்த்த கலவையொன்று குழிகளுக்குள் இட்டு நிரப்பப்படும். அது அடுத்த மழைக்கு மேற்கிளம்பி மீண்டும் பழைய குழிகள் தலைகாட்டும். ஆக, இந்தத் திருத்தங்கள் பயனற்ற செயல்முறைகளாகிப் போய்விடும். கொழும்பிலும் ஏனைய புறநகர்களிலும் அதிக கவனத்தோடும் நுட்பத்தோடும் வீதிகள் செப்பனிடப்படுகின்றன. ஆனால், அதே வளங்களும் வசதிகளும் நமக்குக் கிடைப்பதில்லை என்பது உண்மையே.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகின் கலாசார மேம்பாடுகளை நாம் உள்வாங்கும் அளவுக்கு, அங்குள்ள தொழில்நுட்பங்களை 'மூக்கில் விரல் வைத்து' வியக்கும் அளவுக்கு, அத்தொழில்நுட்பங்களை அறிந்து, விளங்கி, நமது சூழலுக்குப் பொருத்தப்பாடான முறையில் பயன்படுத்துவதற்கு நமது தொழில்நுட்ப வல்லுநர்கள் முயல்வதில்லை. இது ஒட்டுமொத்த இலங்கையர்களுக்குமான பணியாகும்.

எனினும், யுத்தம் சீரழித்த நமது போக்குவரத்துப் பாதைகளைப் புனரமைப்பதென்பதில் நாம் அதிக கரிசனையோடும், தூரநோக்கோடும் சிந்திப்பது அவசியமாகும். அவ்வாறே, வன்னியின் கட்டுமானங்களுக்கெல்லாம் முதன்மையானது ஒருங்கிணைந்த திட்டமொன்றின் மூலம் பாரிய வடிகாலமைப்பொன்றினைக் கட்டமைப்பதும், அதனோடு தொடர்பானதாகப் போக்குவரத்துப் பாதைகளைப் புனரமைப்பதுமாகும்.

நமது கவிஞர் மயன் 1990களின் ஆரம்பத்தில் எழுதிய கவிதை ஒன்று :-


அமாவாசை இருட்டு
குன்றுங்குழியுமான தெரு
அவ்வழியே
'லைற்' பொருத்திய சைக்கிளில்
ஒருவன் வந்தான்
அவன் வாழ்க!

இந்த அனுபவப் புலத்தில் ஏதாவது மாற்றத்தை உங்களால் இப்போது இனங்காண முடிகிறதா?

- ஏகலைவன்.

# நவீன உலகம் உன

இந்த உலகே உந்தன் சொந்தமானதே செல்போன் வந்த பின்பு. இந்தத் தொலைபேசித் தொடர்புகள் அனைத்தும் வயர் கொண்ட போன்களை நம்பியிருந்தால் இந்த வயர் சிக்கலைக் கண்கொண்டு சகிக்க இயலாது. முடிச் சிக்கலைவிட அருவெருப்பாக இந்த வயர்ச்சிக்கல் நகரங்களை நரகமாக மாற்றிவிடும். 1890



களிலேயே வயர்களிலிருந்து விடுபட உலகம் துடித்தது. இத்தாலியரான Guglielmo Marconiயின் 1895ஆம் ஆண்டு கண்டுபிடிப்பான கம்பியில்லாத் தந்தி (wireless telegraph) அவரது 1901ஆம் ஆண்டுக் கண்டுபிடிப்பான வானொலி என்பனவே இவற்றுக்கெல்லாம் அடிக்கல் நாட்டின என்றால் மிகையாகாது.

இதற்காக 1896 இல் தொலைபேசியைக் கண்டுபிடித்த Alexander Graham Bell இனையும் மறந்துவிட முடியாது. 1990 வரை தொலைபேசித் தொடர்புகள் பெரும்பாலும்



வயர்களை நம்பியே இருந்தன. இன்றும் கேபிள் இணைப்புகளுக்குக் கிராக்கி தாராளமாகவே இருக்கிறது. சூரியக் கதிர்கள்போல் ரெலிக்கொம் தூண்களிலிருந்து பல திக்கும் புறப்படும் தொலைபேசிக் கம்பிகள் இன்னும் பலகாலம் தாக்குப் பிடித்தாக வேண்டும்.



லைனில் கதைக்கின்ற தெளிவு சிக்னலில் கிடைக்காதா என்று வாதிடுகிறவர்கள் இருக்கிறார்கள். மரம் விழுந்தால் கேபிள் அறுந்துவிடும். சிக்னல் சிக்கல் இல்லாதது என்கிறவர்களும் இருக்கிறார்கள். எதுவானாலும் உலகம் வயரில்லாத தொடர்பைச் சுதந்திரமாக அனுபவிக்கத் தொடங்கிவிட்டது.

கையடக்கத் தொலைபேசிகள் உலகினை ஆக்கிரமிக்கத் தொடங்கிவிட்டன. வீட்டுக்கு ஒரு கேபிள் இணைப்பு இருக்கிறதோ இல்லையோ ஆளுக்கு ஒரு கையடக்கத் தொலைபேசி இருக்கிறது என்பதுதான் இன்றைய நிலைமை. செல்போன்கள் கதைக்க மட்டும் பயன்படுவதில்லை. தகவல்களை எழுத்துருவில் அனுப்பவும் படங்களை வரைந்து அனுப்பவும் இவற்றில் வசதிகள் உண்டு என்பது அனைவருக்கும் தெரிந்த சமாச்சாரம். மேலும் FM வானொலி, ஸ்டில் மற்றும் வீடியோ கமெரா, ஈமெயில், கேம்ஸ், அகராதி என வசதிகள் விரிந்து செல்கின்றன. பரீட்சை முடிவுகள், விளையாட்டு நிகழ்வுகள் எனப் பலவற்றையும் அறிய சுலபமான சாதனமாக இவை மாறிவிட்டன. வங்கிக் கணக்குகளைக் கையாளவும் இவை உதவும்.

கணனியை வைத்துக்கொண்டு இணையத்தள வசதிகளைப் பெற அல்லது ஈமெயிலை அனுப்பத் தொலைபேசியைத் தேடவேண்டிய தேவை இனி இல்லை. செல்போனிலேயே கணனிச் செயற்பாடுகள் அமைந்துவிடும். 2 in1 என்று கசற்றும் ரேடியோவும் இணைந்த சாதனத்தைப் பெருமையுடன் வைத்திருந்த காலம் அதிக தூரம் கடந்துபோய்விடவில்லை. இப்போது Hi - Fi தொழில்நுட்பம் ஓடியோவின் தரத்தை உச்சத்தில் உயர்த்திக்கொண்டிருக்கின்றது. Many in one ஆக உருவாகிவரும் கையடக்கத் தொலைபேசியில் புகுத்தப்படும் wi-fi தொழில்நுட்பம்தான் இனி உலகினை ஆளப் போகிறது. wi-fi எனப்படுவது Wireless Fidelity என்பதன் சுருக்கம் ஆகும்.

இதன் மூலம் தரமான பாரிய பைல்களை வானலையில் உலாவரச் செய்ய இயலும். படங்களைப் பார்க்க மட்டுமல்ல, பாடம் நடத்தவும் இத்தொழில்நுட்பம் வழிவகுக்கும். கண்காணிப்புக் கமெராக்கள் நுண்ணியனவாக உலகின் வேண்டிய மூலைமுடுக்கெல்லாம் பொருத்தப்படலாம். அவை வயரில்லாமல் தகவல்களையும் வீடியோக்களையும் வேண்டிய இடத்திற்கு அனுப்பும். இதனால் கண்காணிப்புக் குற்றத்தடுப்புச் செயற்பாடுகள் சுலபமடையும். வெகுவிரைவில் இத்தகைய சாதனங்கள் தாராளமாகச் சந்தைக்கு வந்துவிடும் என எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் 90 வீதமானவர்களுக்குக் கணனி அறிவு கிடையாது என்கின்ற துயரமான செய்தியை அண்மையில் கருத்துக் கணிப்புக்கள் தெளிவுபடுத்தி இருக்கின்றன. ஏன் கையில் வைத்திருக்கும் சாதாரண கையடக்கத் தொலைபேசியில் உள்ள அனைத்து வசதிகளையும் பயன்படுத்த எத்தனை பேருக்குத் தெரிகிறது? அதில் சிறுசிறு திரை மாற்றங்களைச் செய்வதற்கு எத்தனைபேர் மற்றவர்களிடம் கொண்டு திரிகிறார்கள்.

தென் கொரியாவின் தலைநகரம் சோல் (SEOUL) 13 ஆயிரம் நிலையங்களில் நானகு லட்சத்திற்கும் மேற்பட்ட Wi-Fi சந்தாதாரர்களைக் கொண்டிருக்கிறது. உலகின் மொத்த Wi-Fi பாவனையாளர்களில் இது ஐந்தில் ஒரு பங்கு ஆகும். அத்தகைய மேலும் பத்தாயிரம் நிலையங்களைத் திறக்க வேண்டிய அவசியம் கொரியன் ரெலிக்கொம்மிற்கு ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, தென் கொரியாவின் இணையத்தளப் பாவனையாளர்களில் அரைவாசிப் பேர் வயர் கொண்ட தொலைபேசி இணைப்புகளைப் பயன்படுத்துவதில்லை. இன்னோர் ஆசியநாடு வெகுவேகமாக முன்னேறுகிறது என்பதை இத்தரவுகள் உறுதி செய்கின்றன. லைன் தொலைபேசிப் பாவனையே கட்டுப்படியாகாத நிலையில் இருக்கும் எமது நிலைமையில் இது வயிற்றெரிச்சல் கதைதான். எமது நாட்டில் கொம்யூனிக்கேஷன்கள் இருப்பதைவிட நெருக்கமாக சோலில் Wi-Fi நிலையங்கள் உருவாகிவிட்டன.

Wi-Fi பாவனை உச்சமடைந்திருக்கும் நாடுகளில் முதலிடம் வகிப்பது கொரியாவின் Seoulதான். அடுத்து இரண்டாவதாக அமெரிக்காவின் நியூயோர்க், அடுத்து லண்டன், சான் பிரான்சிஸ்கோ, பரிஸ், சியாடில், டோக்கியோ, ஹொங்ஹொங், சிக்காக்கோ, சிங்கப்பூர் என்று வரிசைப்படுத்தலாம். இந்தப் பட்டியலில் நிறையவே ஆசிய நாடுகள் இடம்பெற்று இருக்கின்றன. இத்தகைய செலவழிப்புப் பட்டியலில் மட்டுமல்ல, அயராத உழைப்புப் பட்டியலிலும் கிழக்கு ஆசிய நாடுகள் அமெரிக்காவுடன் போட்டி போடுகின்றன.

ஆனால், உழைக்காத இளமட்டங்களின் அதிகரித்த Wi-Fi மற்றும் mobile பாவனை எங்கும் பெற்றோரைப் பொருளாதாரச் சிக்கலில் மாட்டாமல் இல்லை. வீட்டில் அடுத்தவேளை சாப்பாட்டுக்கு வழி இருக்கிறதோ இல்லையோ மோட்டார் சைக்கிளில் பிள்ளை பறப்பதற்கும் போன் காட்டிற்கும் (card) ஒரு வழி கண்டாக வேண்டும் என்கின்ற இக்கட்டான நிலையில் பெற்றோர் தவிக்கிறார்கள்.

இது ஒரு போதையா எனப் பெற்றவர்கள் அஞ்சும் அளவிற்கு ஜப்பானிய இளசுகள் செல்போன் பைத்தியங்களாக மாறிவருகின்றன. அந்த நாட்டில் 82 மில்லியன் செல்போன்கள் பாவனையில் இருக்கின்றன. உலகினில் ஒன்றரை பில்லியன் செல்போன்கள் விழித்திருக்கின்றன. இது உலகின் கணனிகளின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு அதிகமாகும். விரைவில் செல்போன்களின் எண்ணிக்கை மூன்று பில்லியன் ஆகிவிடும். இவற்றில் 5 வீதமானவை சகல வசதிகளையும் கொண்டிருக்கும்.

மனிதர்களைவிட எலக்ரோனிக் சாதனைங்களையே மதிக்கும் மனப்பாங்கு வளர்ந்து வருவது ஆபத்தானது என அறிவியலாளர்கள் எச்சரித்து வருகிறார்கள். அந்தளவிற்கு செல்போன்களில் உரையாடலும் தகவல் பரிமாற்றங்களும் இளசுகளிடையே அதிகரித்து வருகிறது. அதனால் தொடர்புகளும் உறவுகளும் உதவிகளும் அதிகரிக்கின்றன என்றால் அதையும் ஏற்கத்தான் வேண்டும். பிள்ளையின் கையில் செல்போன் இருந்துவிட்டால் அது கண்ணுக்கு முன்னால் நிற்காத தவிப்புப் பெற்றோருக்குக் கிடையாது.

கும்மிருட்டில் ஒளியே பாய்ச்சாது துல்லியமாகப் படமெடுக்கவல்ல செல்போன்கள் அப்படங்களை அதேகணத்தில் உலகமெங்கும் பரப்பிவிடும் காலம் உதிக்கிறது. இந்தக் கண்டுபிடிப்புகளால் இனி உலகினில் ஒளிவு மறைவு என்று எதுவும் கிடையாது. பத்திரிகைகள் பாடு கொண்டாட்டம்தான். போன்களை ஆபத்தான கருவிகள் எனக் கருதி உள்ளே அனுமதிக்கப் பல நிறுவனங்கள் மறுத்துவருகின்றன.

இத்தகைய கண்டுபிடிப்புகளைச் சாதகமாகப் பயன்படுத்தவும் பல துறைகள் தயாராகி வருகின்றன. வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்பு, இருளில் பதுங்கும் குற்றவாளிகளின் நடவடிக்கைகள் என்பன அசுகை இல்லாமல் எங்கிருந்தோ கண்காணிக்கப்பட முடியும். போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளின் வங்கிக் கணக்குகளில் கேட்டுக் கேள்வி இல்லாமல் அக்கணமே தண்டப்பணம் கழிக்கப்படும்.

கோயில்கள், பூஜை வழிபாடு நிகழ்வுகள் அனைத்தையும் இணையத் தளங்களில் தரிசிக்கலாம். தட்சிணை, காணிக்கை அனைத்தையும் வீட்டில் இருந்துகொண்டே அந்தந்த வங்கிக் கணக்குகளில் சேர்ப்பித்து அர்ச்சனையைக் கண்டு கொள்ளலாம். பழைமை வாதம் பேசப்படுவதாக விமர்சிக்கப்படும் வத்திக்கான்கூட தனது இணையத் தளங்களைத் திறந்துவிட்டிருக்கிறது. www. vatican.va என்பதே வத்திக்கானின் இணையத் தள முகவரியாகும். இதனைத் தினமும் உலகெங்குமிருந்து இருபது லட்சம்பேர் அணுகுகிறார்கள். மேலும் text message எனப்படும் செல்போனிலான எழுத்து வடிவ தகவல் வடிவில் அருளாசிகளை வத்திக்கானிலிருந்து அவ்வப்போது பெற இதுவரை பத்து லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் தம்மை நிரந்தரமாக இணைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கணனி என்பது கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் தனது செயல் திறனைவிட அதிக இடத்தைப் பிடித்தது. ஒரு main frame கணனியை வைக்க ஒரு மண்டபமோ அல்லது ஒரு அறையோ தேவைப்பட்டது. இன்று அது மேசைக்கும் (desk top) மடிக்கும் (lap top) வந்துவிட்டது. இவற்றின் செயல் திறனோ ஒரு main frame கணனியைவிடப் பலமடங்கு அதிகம். கணனியின் செயல்திறன் அதிகரிக்கும் அதே வேளை, அதன் பருமன் குறைந்து வருகிறது. நாளைய உங்கள் கணனி ஒரு கையடக்கத் தொலைபேசிக்குள் அடங்கிவிடும். இப்போதே கணனிச் செயற்பாட்டு அம்சங்களைக் கொண்ட இத்தகைய தொலைபேசிகள் சந்தைக்கு வருகின்றன. உங்கள் வீட்டில் ஒரு கணனி இருக்கும் என 25 ஆண்டுகளுக்கு முன்பு ஒருவரிடம் சொன்னால் அவர் உம்மை ஒரு பைத்தியம் என்றே கருதி இருப்பார். அதேபோலவே இன்றும் நவீன ஆராய்ச்சிகளைச் சாத்தியமற்ற பைத்தியக்காரத்தனம் எனப் பரிகாசம் பண்ணுகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

கருவிகளின் பருமனைக் கணிசமாகக் குறைக்கும் முயற்சிகளிலும் அவற்றின் செயல்திறனை அதிகரிக்கும் நுட்பங்களிலும் ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார்கள். சாதனங்களில் பற்றரிகளின் பாரமும் அவை நின்றுபிடிக்கும் நேரமும் முன்னேற்றத்திற்குத் தடையான சமாசாரங்கள், பாரம் குறைந்த ஆனால், நீண்டநேரம் தாக்குப் பிடிக்கவல்ல பற்றரிகளை உருவாக்கும் முயற்சிகளில் கணிசமான முன்னேற்றம் இருப்பினும், மேலும் அதிக தூரம் முன்னேற வேண்டி இருக்கிறது.



இலத்திரன்களை ஓட்டம் காட்ட வல்ல மைக்கிரோ சிப்புகள் (Micro Chips) அடுத்த வருடம் அறிமுகமாகின்றன. அது தானே பற்றரிகளின் வேலை.

அணுசக்தியில் இயங்கும் 100 வருடங்கள் சக்தியைச் சீராகத் தர வல்ல சிறிய பற்றரிகளைச் சந்தைக்கு விட முடியும். ஆனால், அதை பொக்கட்டில் எடுத்துச் செல்வது பாதுகாப்பானதா? கற்பனையில் ஆளுக்கு ஒரு பற்றரி சார்ஜ் செய்யாமலே ஆயுட்காலம் முழுவதும் தாக்குப்பிடிக்கும் என்கின்ற செய்தி எவ்வளவு இனிப்பானது. சிங்கப்பூர் தயாரிப்பான சப்பாத்து ஒன்று நடக்கும்போதும் துள்ளும்போதும் பற்றரியைச் சார்ஜ் செய்ய வல்லது. அது ஆளுக்கும் பயிற்சி, பற்றரிக்கும் சார்ஜ் என்கின்ற நிலைமைக்கு வழிவகுக்கும். இத் தகைய சாதனங்கள் இராணுவத்தில் வரவேற்பைப் பெறுகின்றன. இராணுவ வீரர்கள் சுமக்க வேண்டிய சுமை பெரும்பாலும் குறைவடைய நவீன எலக்ரோனிக் தொழில்நுட்பம் வழி கண்டிருக்கிறது.

பேராசிரியர் Epstein என்பவரின் முயற்சி தற்போதைக்கு மிகச்சிறிய ஜெனரேட்டரைத் தந்திருக்கிறது. அநத Turbine மினி ஜெனரேட்டர் ஒரு அங்குலம் அளவுளளது. ஒரு தீப்பெட்டி அளவுள்ளது. 20 watts சக்தியைத் தரவல்லது. அதாவது 2 அடி டியூப் லைட்டிற்குப் போதுமானது. மணிக்கு 15 கிராம் எரிபொருளில் இயங்க வல்லது. இதைப் பொக்கட்டில் கொண்டு செல்லலாமா?

சிறிய கணனிகளுக்குத் தேவைப்படும் சக்தியை வழங்க இத்தகைய ஆய்வுகள் அவசியமாகின்றன. இன்றேல், கணனிகளின் பருமனைவிட பற்றரிகளின் பருமன் பாரியதாக இருக்கும் நிலைமை தொடரும். இணையத்தள வசதிகள் கொண்ட செல்போன்களின் அறிமுகம் கணிசமான அளவில் தெலைபேசிகள், தொலைக்காட்சிகள், வீடியோ, றேடியோ, ஸ்ரீரியோ ~ Hi-Fi, கமெரா மட்டுமல்ல, மேசை மற்றும் மடிக் கணனிகளின் விற்பனையையும் பாதிக்கும் எனக் கருதப்படுகிறது.

எந்தக் காட்டில் தனித்து விடப்பட்டாலும் தனிமை உணர்வு ஏற்படாத வகையில் உலகம் உங்கள் கைகளில் செல்போன் வடிவத்தில் இருக்கும். பயணத்தின் போது தூங்கி வழியாமல் நேரத்தை உருப்படியாக ஆக்கபூர்வமாகக் கழிக்கக் கையிலிருக்கும் செல்போன் வழிவகுக்கும்.

செல் யுகத்தில் அகராதிகளில் இல்லாத பல புதிய பதங்கள பாவனைக்கு வருகின்றன. அர்த்தம் தெரிந்தோ தெரியாமலோ சாதாரண மக்களெல்லாம் இவற்றை இப்போது தாராளமாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். உதாரணத்திற்குச் சில.

GSM, SMS, GPS, 3 G, WINMAX, VOIP, BLUE TOOTH, Wi-Fi. இவற்றின் அர்த்தங்களையும் சற்றுப் பார்த்துக்கொள்வோம். இவையெல்லாம் வயர்களுக்கு விடுதலை தரும் சமாச்சாரங்களே.

GSM எனப்படுவது Global System for mobile Communications ஆகும்.

SMS - Short Message System - சிறிய செய்திகளை எழுத்துருவில் அனுப்புவது. இது ஈமெயிலை ஒத்தது எனலாம். இவை அனுப்பப்படும் கணத்தில் உலகினில் எங்கிருந்தாலும் உரியவரைச் சேர்ந்துவிடும். மறுகணமே பதிலும் கிட்டிவிடும். கடிதம் போட்டுக் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. படங்களையும் பெருமளவு எழுத்துக்களையும் அனுப்பும் வசதிகள் மேலும் மேலும் விரிவடைகின்றன.

GPS - Global Positioning System - Satellite உதவியுடன் வழிநடத்தும் வசதிகள். இவை செல்போன்களில் புகுத்தப்படுகின்றன. தற்போது DIALOG திரையில் சிக்னல் வரும் கோபுரம் அமைந்துள்ள பிரதேசம் தெரிவது போலவே GPS Satellite உதவியுடன் வழிகாட்ட உதவும். இப்போதெல்லாம் ஓடும் ரயிலிலும்

# "...தமிழன் என்றால் அது யாழ்ப்பாணம்தான்..."



## - பாரதிராஜா

சிவாஜிகணேசன் நடித்த 'முதல் மரியாதை', கமலஹாசன் நடித்த 'ஒரு கைதியின் டைரி', ரஜினிகாந் நடித்த 'கொடிபறக்குது', சத்தியராஜ் நடித்த 'வேதம் புதிது' ஆகிய படங்களை இயக்கியவர் 'இயக்குநர் இமயம்' பாரதிராஜா.

45 படங்களை இயக்கிய இவர் 'கல்லுக்குள் ஈரம்', 'தாவணிக் கனவுகள்', 'இதயம்', அண்மையில் வெளியான 'ஆய்த எழுத்து' ஆகிய படங்களில் நடிகராகவும் பரிணமித்திருந்தார்.

இவர் பதினைந்துக்கு மேற்பட்ட நடிக, நடிகைகளைத் திரையுலகில் அறிமுகப்படுத்தியிருந்தார். அத்துடன் இவரிடம் உதவி இயக்குநர்களாக இருந்த பலர் இயக்குநர்களாகி பல வெற்றிப் படங்களை இயக்கியுள்ளனர். அவர்களில் இயக்குநர்களான பாக்கியராஜ், மணிவண்ணன், மனோபாலா, மனோஜ்குமார், ரங்கராஜன், பொன்வண்ணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

*"...ஒரு சின்ன வேட்டுச் சத்தத்துக்கே எல்லாரும் ஓடிப் போயிடுவாங்க.. இவ்வளவு பிரச்சினைக்கு மத்தியில இவங்க வாழ்த்திருக்காங்க என்றால் அது மிகப் பெரிய அதிசயம்..."*

*"... பரவாயில்லை ஒரு வீரம் செறிந்த மண்ணில் வாழ்ந்திருக்கீங்க.. அதற்காகப் பெருமைப்படுங்க.. எங்களுக்கெல்லாம் அந்த வாய்ப்பில்லை..."*

இவ்வாறான பெருமைபெற்ற 'இயக்குநர் இமயம' பாரதிராஜா சில தினங்களுக்கு முன்பு திடீரென யாழ்ப்பாண மண்ணில் கால்பதித்தார். யாழ்ப்பாணத்தில் பல இடங்களையும் சென்று பார்த்த அவர் 'உதயன' பணிமனைக்கு சிறப்பு வருகைதந்தார்.

அப்போது அவர் வழங்கிய செவ்வியின் முதற்பகுதி கடந்தவார சூரியகாந்தியில் வெளியாகியிருந்தது. மிகுதி இன்று வெளியாகின்றது....

● நீங்கள் இயக்கிய படங்களில் உங்களுக்கு முழுத்திருப்தி தந்த படைப்பு எது?

◆ இன்னும் எந்தப் படமுமே எனக்குத் திருப்தியைத் தரவில்லை. அதற்காக ஒரு படம் பண்ணி முடிச்சிட்டு சொல்லுறேன்...

● உங்களது 'கடல் பூக்கள்' நிறைய ஆரவாரமாகப் பேசப்பட்ட படம். ஊடகங்கள் வாயிலாகவும் பிரபலம் பெற்ற படம். அதில் நடித்த நாயகன், நாயகி மற்றும் சகலரிடமும் நீங்கள் நிறையவே எதிர்பார்த்தீர்கள். அதுபோலவே படத்துக்கு விருதும் கிடைத்தது. அதுபற்றி இப்போது எதனை நினைவுகூறுகின்றீர்கள்?

◆ கடல்பு,க்களுக்காக நான் மத்திய அரசின் விருது வாங்கினேன். முரளிக்குத் தமிழக அரசின் விருது கிடைத்தது. மூணுவருசங்களுக்குப் பின்னாடிதான் அதற்குரிய விருது வழங்கப்பட்டது. மக்கள் மிகத் தாமதமாகவே அந்தப் படத்தை ரசித்திருக்காங்க.

இந்தியாவில மிக முக்கிய ஆள்கள் எல்லாருமே ரொம்பப் பிரமாதம் என்று சொல்லியிருக்காங்க. அப்படியிருக்கும் போது நான் வருத்தப்படல. அந்தக் காலகட்டத்தில் மக்கள் அதை ரசிக்கல. அதற்கு நான் என்ன பண்ண முடியும்?

● வியாபார ரீதியில் அப்படம் வெற்றியைத் தந்ததா?

◆ இல்லை. அதுதான் சொல்கிறேன் இங்கே வெற்றி என்பது வியாபார ரீதியில் வெற்றி பெறுவதுதான். அந்தளவுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

● உங்களுடைய மகன் மனோஜ் சில படங்களில் நடித்திருக்கின்றார். 'சமுத்திரம்' படத்தில் கூட சிறப்பாக நடித்திருந்தார். ஆனால், தொடர்ந்து வாய்ப்புகள் அவருக்குப் பிரகாசமாக இல்லையே...?

◆ விக்ரம் 12 வருசமாக நடிச்சிட்டே இருந்தாரு. பதினைந்து. இருபது படம் வந்தது. 'சேது' என்னு ஒரு படம் வந்திச்சு. அதிலதான் அவரை அடையாளம் காணமுடிஞ்சுது. அவன் நடிகன் இல்லையா? புதுசாவா முளைச்சு வந்தான்? ஏதோ காலமும் சூழ்நிலையும் ரசிகர்களுடைய ரசனையை எங்கேயோ திருப்பிடிச்சு. கதையம்சம் சரியாக அமையாம இருந்திருக்கலாம்.

ஒரு படத்தோட கதாநாயகன் தோல்விக்குப் பல காரணங்கள் இருக்கு. கதையம்சம் நல்லாயிருந்தா கழுதைகூட வரலாம். ஏதோ ஒரு அம்சம் குறைவாயிருக்கலாம். பாரதிராஜாவின் இயக்கத்தில ஏதாவது மிஸ்டேக் இருக்க்லாம். ரெக்னிக்கல் இருக்கலாம்.

என்னுடைய மகனைப் பொறுத்தவரையில் கிரேட். ஹி இஸ் எ பெஸ்ட் அக்ரர் ( Great, He is a Best Actor). i thing very so இன்னும் ஓர் ஆண்டில் அவன் பெரிய நடிகனாயிடுவான்.

● நாங்களும் வாழ்த்துகின்றோம். சரி, 'வேதம் புதிது' போன்ற ஒரு படத்தை நீங்கள் மீண்டும் தருவீர்களா?

◆ அதே மாதிரியான படத்தை நான் தரவேமாட்டேன். ஏற்கனவே கொடுத்த ஒரு படத்தை மறுபடியும் கொடுத்தால். ஏன் அதையே கொடுத்தீர்கள் என்று நீங்கள் கேட்டுவிடுவீர்கள்.

● 'வேதம் புதிது' மிகவும் சிறந்த படம் அதனை நாங்கள் ரசித்துப் பார்த்தோம். பொருத்தமான நடிகர்களைப் போட்டுள்ளீர்கள். அதற்கு எமது பாராட்டுக்கள்....

◆ வேறென்ன வேண்டும். அதுவே போதும்.

● உங்களுக்கு மிகவும் புகழைத் தேடித் தந்த படம் எது?

◆ எல்லாப் படங்களும் புகழைத் தேடித் தந்தன. 'முதல் மரியாதை' புகழைத் தேடித் தரலையா?, 'கிழக்குச் சீமையிலே' புகழைத் தேடித்தரலையா?, 'சிவப்பு ரோஜாக்கள்' புகழைத் தேடித் தரலையா?, 'கருத்தம்மா' புகழைத் தேடித் தரலையா? எல்லாப் படமும் புகழைத் தேடித்தந்தனவே.

● நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் பணியாற்றிய அனுபவம் பற்றி...?

◆ 'முதல் மரியாதை'யில சொல்கிறேன். ஒரு தென்றலின் கையைப் பிடித்துக் கொண்டு நந்தவனத்தில் நடந்துசென்ற சுகம் எனக்கிருந்தது. ஒரு தென்றலோட கையைப் பிடித்துச் சென்றால் என்ன சுகம் இருக்குமோ எனக்கு அப்படி ஒரு சுகம் இருந்தது அவர்கூட நடிப்புலகத்தில் பிரவேசித்தபோது. அவர் ஒரு மாமேதை. இந்தியாவின் மிகப்பெரிய மாமேதை. 50 ஆண்டு காலத்தில் நடிப்புலகத்தைப் பற்றிப் பேசவேண்டுமென்றால் சிவாஜியினுடைய பாதிப்பில்லாமல் ஒரு நடிகன் நடிச்சுப் பார்க்கவே முடியாது. ஒரு பெரிய கல்லூரியில் மிகப்பெரிய நூலகத்தில் ஒரு சிறிய புத்தகத்தைப் படிச்சமாதிரி அதாவது சிவாஜி கணேசன் என்ற நூலகத்தில நான் ஒரு சின்னப்புத்தகம்.

● நல்லவர்களை எப்போதும் நல்லவர்களாகவே பார்க்கவேண்டும். 'ஆய்த எழுத்து' திரைப்படத்தில் ஏன் வில்லனாக நடித்தீர்கள்...?

◆ நீங்கள் ஒரு நடிகனைக் கலைஞனாகப் பார்க்க வேண்டுமே தவிர. பாரதிராஜா என்ற ஒரு தனிப்பட்ட மனிதனாகப் பார்க்கக் கூடாது. பாரதிராஜா என்ற ஒரு தனிப்பட்ட மனிதன் சமூகத்தில் வித்தியாசமான மனிதன். அந்தக் கதையில் வரும்போது அதற்கேற்ப நடித்தேனேதவிர அதாவது ஒரு நட்பின் ரீதியில் கூப்பிட்டார்கள். போய் நடித்தேன் அவ்வளவுதான்.



'உதயன்' அலுவலகத்தில் பாரதிராஜாவுக்கு நினைவுப் பரிசளிக்கிறார் பிரதம ஆசிரியர் மா.வ.கானமயில்நாதன்.

● ஜீரணிக்க முடியாத சில கதையம்சங்களுடன் உங்களுடைய சில படங்கள் வெளிவந்துள்ளன. அதுபற்றி...?

◆ மதங்களால் ஏற்றத்தாழ்வு உண்டு; ஜாதியால் ஏற்றத்தாழ்வு உண்டு; பொருளாதாரத்தால் ஏற்றத்தாழ்வு உண்டு. காதல் சிக்கலே இந்த மூன்று காரணங்களில் ஒன்றால்தான். இவற்றை வைத்துத்துத்தான் 'அலைகள் ஓய்வதில்லை', 'வேதம் புதிது' போன்ற படங்கள் பண்ணியாச்சு. பின்னர் இரண்டு பகுதியோட தெலுங்கு கலாசாரம். தமிழ் கலாசாரம் மிக்சிலேதான் 'தாஜ்மஹாலை' பண்ணினேன். ரொம்ப வித்தியாசமான 'பாக்றவுண்ட்'. ஆனால். உங்களால் ஜீரணிக்க முடியல. உங்களால் ஜீரணிக்க முடியாததற்கு உணவைத் தப்புச் சொல்லக்கூடாது. உணவுக்கு நீங்க பழக்கப்படல எண்ணுதான் சொல்லணும்.

தினமும் உருளைக்கிழங்கைத் தூக்கிப்போட்டேன். திடீரென ஒருநாள் இன்னொரு கறியைத் தூக்கிப்போட்டேன். உங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அதேமாதிரி 'கண்களால் கைதுசெய்' படம் பண்ணினேன். பாரதிராஜா எப்போதும் கிராமியப் படங்களையே தயாரிக்கிறார் என்ற அபிப்பிராயத்தை கிளப்பியுள்ளது. இப்ப என்னதான் இருந்தாலும் ஏழுமுறை அவாட் வாங்கியுள்ளேன். நீங்கள் எவ்வளவோ நாவல்கள் படிக்கின்றீர்கள். தமிழ் நாவல் மட்டுமா படிக்கின்றீர்கள். ஆங்கில நாவல்கள் படிப்பதில்லையா? ஆங்கிலத்தில் உங்களுக்கு பேசணும் என்று ஆசையில்லை. அதுமாதிரி பாரதிராஜாவுக்கும் ஆசைவந்து எழுதியிருப்பார். அதை உங்களால் ஏற்றுக்கொள்ளமுடியல என்றால் காலங்களாவது ஏற்றுக்கொள்ளும்.

● இலங்கையில் நீங்கள் தயாரித்த படங்கள் பற்றி கூறுங்களேன்......?

◆ இலங்கையில் நான் ஒருபடம் எடுத்தேன். 'கண்களால் கைதுசெய்' நுவரெலியா. திருகோணமலை போன்ற இடங்களில் எடுக்கப்பட்டது. அந்தப்படம் பிரமாதமா ஓர் ஆங்கிலப்படத்துக்கு இணையாய் ஓடியது. சிலோன்லயும் பிரமாதமாய் ஓடியிருக்கு.

● யாழ் மண்ணுக்கு நீங்கள் திடீரென வந்த நோக்கம் எதுவாயிருக்கும்?

◆ இன்றைக்கு உலகத்தில் பல்வேறு துறைகளில் உள்ள மிகப்பெரிய பேராசிரியர்கள். பெரிய பெரிய அறிஞர்கள் என்று சொல்லி உலகம் பு,ராகவும் புலம்பெயர்ந்த தமிழர்களில் யாரைக்கேட்டாலும் ஜவ்னா ஜுனிவேர்சிட்டியில படிச்சதென்றுதான் சொல்லுவர். அந்தளவிற்கு சிறந்த பல்கலைக்கழகம் உண்டு. அது மட்டுமல்ல... இங்கு மிகப்பெரிய ஒரு நூலகமும் உண்டு. பெரிய ஓர் ஆராய்ச்சி பண்ணுவதற்குரிய அறிவியல் மையமான ஒரு பெரிய நூலகம் எரிக்கப்பட்ட செய்தி ஒரு காலகட்டத்தில உலகம் பு,ராகவும் தெரியும்.

தமிழன் எங்கையின்னா யாழ்ப்பாணத்தில் இருக்கிறான் என்கிற பெருமை இந்த மண்ணுக்குண்டு. இது சீக்கிரத்தில ஒருபெரிய சரித்திரத்தைப் படைக்கும் என்று நினைக்கிறன். ஏற்கனவே சரித்திரத்தைப் படைச்சிட்டீங்க. உலகத்தில அதிசயிக்கத்தக்க மிகப்பெரிய விசயத்தைப் பண்ணிட்டீங்க. இந்த இனம் தமிழினம். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன் வாழ்ந்த மூத்த குடி என்று நாமெல்லாம் சொல்லிக்கிட்டே இருப்போம். பெருமையாய் இருக்கும். புறநானூறு சொல்லுவோம; அகநானூறு சொல்லுவோம; திருக்குறளை உலகமறையாக்கி ஆங்கிலத்தில சொல்லிட்டோம் என்று சொன்னோம். இந்நாட்டு சாஸ்திரங்களைப் புறமொழியில் பெயர்த்திடவேண்டும் என்று பாரதி சொன்னான். அப்படியெல்லாம் செஞ்சும் கூட தமிழகத்தின் பெயர் வெளி உலகத்தில் தெரிஞ்சது கிடையாது. அவையெல்லாம் சாதிக்கமுடியாததை கடந்த 20 ஆண்டு காலப்பகுதியில் ஈழத்தமிழன் சாதிச்சிட்டான். உலகத்தில தமிழ் எண்டு ஒரு இனம் இருக்கின்றது என்பதை நிலைநாட்டிட்டான். உலகின் எந்தப்பகுதியில் போனாலும் தமிழன்னா அவன் தமிழன்தான். நூறாண்டு காலத்தில் பெரிய இலக்கியங்கள். இதிகாசங்கள் செய்ய முடியாததை - பெரிய பெரிய அறிவாளிகளின் கட்டுரைகளும். புத்தகங்களும் கடல் கடந்து செய்யமுடியாததை - மிகப்பெரிய புரட்சியாய் பண்ணிற்றீங்கள் அவ்வளவுதான்.

**செவ்வி: ஸ்ரீ, பகிர்.**

தமிழன்னு சொன்னா அது இலங்கைதான். அந்தப் பெருமை உங்களுக்கு இருக்கு. அதனால இந்தப் பு,மியை ஒரு முறையாவது தரிசிக்க வேண்டும் என்று வந்தேன். ஏனென்றால்

(IVபக்கம் பார்க்க)

# கண்ணதாசனுக்கு பிடித்த அந்த மூன்று பெண்கள்...

**மது**-மாது இரண்டிலுமே மிகவும் பலவீனமானவர் கவியரசு கண்ணதாசன். 'கோப்பையிலே என் குடியிருப்பு கோலமயில் என் துணையிருப்பு' என்றவர் அவர்.

**'ஓர் கையில் மதுவும் ஓர்கையில் மங்கையரும்**
**சேர்ந்திருக்கும் வேளையிலே ஜீவன் பிரிந்தால்தான்**
**நான் வாழ்ந்த வாழ்க்கை நலமாகும் இல்லையெனில்**
**ஏன் வாழ்ந்தாய் என்றே இறைவன் எனைக்கேட்பான'**

என்று அந்தவாறு தாம் வாழ்ந்ததற்கும் இறைவனைச் சாட்சிக்கு வைத்துக்கொண்டு சொன்னவரும் அவரே!

போதை போதாது என்பதற்காக ஒரு காலத்தில் அவர் தமக்குத் தாமே 'பெதடின்' ஊசி போட்டுக்கொண்டவராம்.

சிவப்பு விளக்குப் பகுதிக்கு சென்று வந்த அந்த அனுபவத்தை ஓரிடத்திலே அவர் சொல்லியிருக்கிறார். சென்றவிடத்திலே, நமது ஊடகங்களின் பாணியிலே சொல்வதாயிருந்தால் 'களேபரம்' ஏற்பட்டு எல்லாரும் தலைதெறிக்க ஓடி வந்தார்களாம். அப்பொழுது கூட அவரது இளமைக்கால அந்த 'நண்பன்' அதற்கு அச்சவாரமாகக் கொடுத்த பணத்தைத் திரும்ப வாங்கிக்கொண்டுதான் வந்தாராம்.

அதையெல்லாம் கிளறிக் கவிஞரின் கௌரவத்தையும் மதிப்பையும் குறைத்துக் கொள்வதாக யாரும் கருதிவிடக் கூடாது. இவைகளும் பின்னால் வரப்போகின்ற அவரைப் பற்றிய தகவல்களும் பல்வேறு சமயங்களில் அவரே வெளியிட்டவைகள் தாம்.

கற்பொழுக்கம் களவொழுக்கம் என்பது போல பரத்தையர் பிரிவு என்பதும் பண்டைத் தமிழகத்திலே இருந்தவை தாம். கண்ணகி இருக்கும்போது கோவலன் மாதவிபாற் சென்றதும் அதற்கொரு சான்று. கண்ணகிக்குப் பின்தூங்கி முன் எழுந்து கோவலனுக்குப் பணிவிடைகள் செய்து, புட்டு அவித்துக் கொடுக்கத்தெரிந்த அளவுக்கு அவனின் கலையுணர்வுக்கு மதிப்பளிக்கத் தெரியவில்லை. அதனால் அதெல்லாம் நிரம்பப் பெற்ற ஆடல்பாடல், அழகுக்குரியவளான மாதவியின் பால் அவனின் கவனம் சென்றிருககிறது. கவிஞரும் பழந்தமிழ்ப் பண்பாட்டிலும் இலக்கியங்களிலும் பரிச்சயமானவர்தாமே! கன்னிப் பெண்ணையோ குடும்பப்பெண்ணையோ களங்கப்படுத்துவது தவறுதான். 'அதற் கென்றி'ருப்பவளிடம் போவதில் தப்பில்லை என்று நினைத்தவர் கவிஞர்...

இப்பொழுது 'பெரியஇடத்து' விவகாரங்களில் சின்ன வீட்டுச் சமாசாரங்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கோகிலா மகேந்திரன் எழுதிய நாவல் ஒன்றில் இந்த விவகாரம் வேறொரு முறையில் சொல்லப்படுகிறது. கதாநாயகி கணவன் இருக்கக் கூடியதாக இன்னொரு இளைஞனுடனும் பழகிவருகிறாள். முன்னவருடைய உறவைப் பற்றிக் கூறுமிடத்து **Sex without love** என்றும் பின்னவரைப் பற்றிக் குறிப்பிடுகையில் **Love without sex** என்றும் கூறப்படுகிறது. (சில சொல்லக்கூடாத வார்த்தைகளைத் தமிழில் சொல்வதை விட ஆங்கிலத்தில்சொல்லுவது நாகரிகம் போலிருக்கிறது. அதனால் இதற்கு நானும் தமிழாக்கம் தர விரும்பவில்லை)

கவிஞரது சொந்த வாழ்வை நினைவு படுத்தி அவருக்கு உபதேசம் செய்வதற்கான பக்குவமோ, தகுதியோ கிடையாது என்று அவரை யாரும் ஒதுக்கியதில்லை. அந்தப் 'பட்ட'றிவினால்தான் அவருக்கு அப்படி ஒரு 'பக்குவம்' வந்திருக்குமோ என்றுதான் எண்ண வேண்டியுள்ளது. அதனால் இனியும் அந்த வகையில்யாரும் 'பட்டு'-'அறிய' வேண்டியதில்லை. எல்லாருக்குமாகச் சேர்த்துத்தான் அவர் தம்மளவில் பல தவறுகளைச் செய்து தம்மை ஒறுத்துக் கொள்வது போல நடந்து மக்களை நல் வழிப்படுத்திவிட்டாரே!




கோகுலத்துப் பெண்களுடன் லீலா விநோதங்கள் புரிந்த கண்ணன்தாம் கீதோபதேசமும் செய்தவர். வெறும் முத்தையாவாக இருந்தவர் கண்ணனுக்குத் தாசனாகி கண்ணதாசனான கதையும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்' போன்ற நூல்களும் அது சம்பந்தமான உரைகளும் மடாலயங்கள் கூட செய்திராத பணிகளை மக்களுக்குச் செய்தன.

அதிலும் அவர் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதை வலியுறுத்து மாற்போல இளைய சந்ததியினருக்குச் சொல்லிய கருத்துக் கள் மிகவும் அற்புதமானவை - அத்தனையும் தத்துவமுத்துக்கள்.

"ஆயிரம்பெண்மை மலரட்டுமே அதை ஆயிரம்கண்கள் ரசிக்கட்டுமே...... ஒருத்தியின் நெஞ்சம் ஒருவனுக்கென்றே சொல் சொல் தோழி" என்பது அவரது கவிதை வரிகள். பெண்களின் அழகை ரசிப்பதுகூடத் தவறில்லை . ஆனால் அங்கே 'ஒருவன் -ஒருத்தி' என்ற கற்புநிலை பேணப்பட வேண்டும் என்கிறார். (ரசிக்கத்தானே அழகு?)

இளைஞர்கள் தங்களுக்கு வரவேண்டியவர்களைப் பற்றியெல்லாம் பெரிய பெரிய கற்பனைகளில் மிதந்திருப்பார்கள் (மறுபக்கம் என்று பார்க்கும் போது இளம் பெண்களும் தாம்) வருபவள் எப்படியெல்லாம் அழகாகவும் தனக்குப் பொருத்தமாகவும் இருக்கவேண்டும் என்றெல்லாம் கனவு கண்டுகொண்டிருப்பான். இறுதியில் கிடைப்பதோ அவரவர் விதிப்படிதான். இவர்களுக்கெல்லாம் கவிஞர் சொல்லுகிறார் "விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு" வேண்டுமானால் அவன் அவளை- அந்தக் கனவுக் கன்னியை நினைத்துக்கொண்டு இவளை... 'அவள்தான் இவள்' என்று நினைத்துக்கொண்டு...

கண்ணதாசனுக்குப் பெண் பார்க்கும்ஏற்பாடு ஒரு கோயில் வீதியில்தான் அரங்கேறியதாம்... அதற்காக மூன்று அழகும் இளமையும் பொருந்திய பெண்களைத் தெரிவு செய்து வீதியில் மெல்ல நடைபயில வைத்துக்கொண்டு இவரை அவர்களுக்கு எதிராக அழைத்து வந்தார்கள்.

கவிஞரை அழைத்து வந்தவர்களில் ஒருவர் அவரைப் பார்த்து மெதுவான குரலில் "அதோ...அந்த மூன்றில் உனக்கு யாரைப் பிடித்திருக்கிறது? சொல் பார்க்கலாம்..." என்றார்.

கவிஞர் அழகில் ஒன்றை ஒன்று மிஞ்சும் அவர்களைப் பார்த்துவிட்டு "மூன்றையுமே எனக்குப் பிடித்துவிட்டது.. என்றாராம்.

* * *

**- சண் அங்கிள்.**

---

# யாழ்ப்பாணம்



### உணரத் தவறும் உண்மைகள்

நவீன கலாசார முன்னேற்றங்கள் எனப் பேசப்படும் ஒரு சில விடயங்கள் உண்மையில் பண்பாட்டுப் பிறழ்வுகளே.

இப்படிச் சொன்னால் ஒரு சிலருக்கு கோபம் பொத்துக்கொண்டுவரும்; ஒரு சிலரால் இதை ஜீரணிக்க முடியாதிருக்கும்.

நீண்டநாள் இடைவெளியின் பின், அண்மையில் சந்திக்க நேர்ந்த நண்பரொருவர் வாழ்க்கை நடைமுறைச் சிக்கல் பற்றிப் பெரிதாக அலுத்துக் கொண்டார்.

அவருக்கு அடுத்தடுத்து மூன்று பெண் பிள்ளைகள்; அவர் வர்த்தகத் துறையில் கொடிகட்டிப் பறக்காவிட்டாலும், அத்தொழில் மூலம் சுமாரான வசதி வாய்ப்புக்களோடு வாழ்ந்தவர்தான்; கடந்த கால யுத்தம் அவரை ஒட்டாண்டி ஆக்காவிட்டாலும், நொடித்துப் போகவைத்து விட்டது.

தற்போது அவரது மூத்த பெண்கள் இருவருக்கும் திருமண வயது; கடைக்குட்டி மகள் பல ஆண்டு இடைவெளியின் பின் பிறந்தவள். இதனால் மூத்த இரு பெண்களை விடக் கடைசிப் பெண் மீதே பெற்றோருக்குக் கரிசனை அதிகம். கடைசிப் பெண் பிறந்ததையடுத்தே நண்பரின் தொழில் முயற்சிகள் பாதிப்புற்று, பொருளாதார ரீதியில் அவர் முடங்க நேர்ந்ததாக ஒரு சிலர் வெளியிடும் விமர்சனத்தால் பெற்றவர்கள் பலதடவை மனம் வருந்தியதுண்டு.

இதற்கெல்லாம் மேலாக நண்பருக்கு தற்போது மற்றொரு இக்கட்டு நிலை.

ஏற்கனவே திருமணத்துக்குக் காத்திருக்கும் மூத்த இரு பெண்களுக்கு - சமூகத்தில் தமது கௌரவம் பாதிக்கப் படாத வகையிலும், பொருளாதாரப் பின்னடைவுப் பின்னணியின் மத்தியிலும் இவ் வாழ்க்கைச் சவாலை எதிர்கொண்டு பொறுப்பை நிறைவேற்ற வழி தெரியாது குழம்பிப் போயிருக்கும் நிலையில் - இப்போது நண்பருக்கு மேலுமொரு சவால்.

நாலுபேரின் விமர்சனத்துக்கு ஆளாகாத விதத்தில், எப்படியும் புதிதாக உருவான இச் சவாலை எதிர் கொண்டேயாக வேண்டுமெனக் கருதுகிறார் அந்த நண்பர்.

தாம் பெற்ற மகள், சிறிதளவாவது உளப்பாதிப்பு அடைய இடமளிக்கக் கூடாதென்பதில் பெற்றவள் அக்கறை எடுத்து இயங்க முயல்கிறாள்.

சமூக நீரோட்டம் என்ற பயணத்தில் தனித்துப் பின்தங்கிவிட இயலாமல், நீரோட்டத்தின் போக்கிலேயே நாமும் பயணித்தாக வேண்டிய இன்றைய சமூகக் கட்டமைப்பில் வசதியாய் வாழ்ந்து, இடைநடுவில் நொடித்துப் போய்விட்ட அந்த நண்பரைப் போன்றோரின் நிலை பரிதாபத்துக்குரியதே.

பூப்பெய்தியுள்ள இளைய மகளுக்கு வீடியோப் படப்பிடிப்பு, புகைப்படப்பிடிப்பு அடங்கலாக சோடைபோகாத வகையில் பூப்பு நீராட்டுவிழா நடத்தியாக வேண்டிய இக்கட்டு நிலை அந்தப் பெற்றோருக்கு.

அன்றைய யாழ்ப்பாணச் சமுதாயக் கட்டமைப்பில் இயற்கை நியதியான இத்தகைய சம்பவத்துக்கு அத்துணை பிரபல்யம் வழங்கப்பட்டதில்லை. அவ்வித சந்தர்ப்பத்தில் பெற்றோரும் உறவினரும் கூடி குறுகியதொரு வட்டத்துள் சமயாசாரச் சடங்குகளை நிறைவேற்றி மகிழ்வது வழமையான நடைமுறையாய் அமைந்து காணப்பட்டது.

காலச்சக்கர ஓட்டத்தில் சமூக நடைமுறைகளில் பழையன பல கழிந்து புதியன சில புகுந்தது புதுமையான தொன்றல்ல.

இவ்விதம் மாற்றம் பெற்ற நடைமுறைகளுள்ஒன்றான இது இன்று ஒரு சில பெற்றோருக்கு பூதாகரமான பிரச்சனையாகும் விதத்தில் உருவாகி நிற்கிறதே!

வசதி படைத்தவர்களுக்கு இது தம் வசதிநிலையை வெளிக்காட்ட வாய்ப்பாவதுடன் தத்தம் கௌரவத்தைப் பறைசாற்றக் கருவியாகவும் அமையக்கூடும்.

ஆனால் வசதி வாய்ப்புக்கள் குறைந்த நிலையில் டாம்பீகமாகக் கொண்டாடப்பட்ட ஒரு சில பெண் பிள்ளைகளின் பூப்பு நீராட்டு விழாவுக்கு இணையாக - தாமும் தமது பிள்ளையின் பூப்பு நீராட்டு வைபவத்தைக் கொண்டாடத் தவறினால் தமது பிள்ளை உளவியல் ரீதியில் பாதிக்கப்படக் கூடுமெனக் கருதி, தகுதிக்கு மீறித் தாமும் அதே டாம்பீகமாக விழா நடத்திச் சிரமப்பட வேண்டுமா?

வாழ்க்கை நடைமுறைகளில் நவீனத்துவம் முக்கியமானதொன்றென வாதிட முனைவது பொருத்தமற்றது; யதார்த்த நோக்குடனான, தெளிவான சிந்தனை சிரமத்தைக் குறைக்க வழி வகுக்கும்.

**பொன்வேலன்**

---

# "...தமிழன் என்றால்...

(III பக்கம் தொடர்ச்சி)

பல ஆண்டாண்டு காலமாக பல தடைகளுக்கு மத்தியிலே உள்ளே நுழையமுடியாமல் இருந்தது. ஆகையினால் முதன்முறையாக ஒரு கலைஞனாக இந்தப் பூமியில் அடியெடுத்துவைத்தேன். அடுத்து என்ன பண்ணலாம் என்றால். இங்கு கலாச்சாரம் தமிழ் நாட்டில் உள்ளது போல் உள்ளது. இங்கு ஒரு படம் எடுக்கலாம் என்று யோசிக்கின்றேன். அப்படிப் படம் எடுப்பது என்றால் இங்கு உள்ள ஊடகங்கள் எல்லாம் உதவி செய்வார்கள் தானே.

● வன்னிக்கும் சென்று வந்ததாகக் கூறினார்கள். அதுபற்றி?

◆ ஜவ்னா வரும் வழியில் மாவீரர் தினம் என்றார்கள். நீங்கள் பார்க்கவிரும்புகின்றீர்களா? என்று கேட்டார்கள். என்னுடைய நண்பர் மாவீரர் விளக்கேற்றும் காட்சியைக் காண்பித்தார். மிகவும் பிரமாதமாக இருந்தது. அதை மட்டும் பார்த்துவிட்டு வந்துவிட்டேன். ஜவ்னாலையும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் எல்லாவற்றையும் காட்டினார்கள். நான் பார்த்து பிரமித்துப் போனேன். இன்னொரு முக்கியமான விடயமும் பார்த்தேன். அதாவது ஊர்காவற்றுறையில் ஒரு போராளியின் வீரச்சாவு அஞ்சலி நிகழ்வையும் பார்த்தேன்.

இங்கு ஜவ்னாவில் அற்புதமான கட்டடங்கள் எல்லாம் தூர்ந்துபோய்க் காணப்பட்டன. அது எனது மனத்திற்கு வேதனையாக இருந்தது. துளைகள் என்ன என்று கேட்டேன். ஷெல் அடிச்சது என்றாங்க. அதைப்பார்க்க எனது நெஞ்சு வலித்தது. அதனையும் மீறி இந்த மக்கள் போராடி வாழ்ந்திருக்காங்க என்றால் அது எவ்வளவு பெரிய விசயம். ஒரு சின்ன வேட்டுச் சத்தத்துக்கே ஓடிப்போயிடுவாங்க எல்லாரும். இவ்வளவு பிரச்சினைக்கு மத்தியில இந்த மக்கள் வாழ்ந்திருக்காங்க என்றால் மிகப்பெரிய அதிசயம். அதில உங்க பத்திரிகையை ரொம்பப் பாராட்டி ஆகணும். இவ்வளவு நெருக்கடிக்கு மத்தியில பத்திரிகை நடத்துறது ரொம்பக் கஷ்டமான விசயம்.

.... பரவாயில்லை ஒரு வீரம் செறிந்த மண்ணில் இருக்கீங்க அதற்காகப் பெருமைப்படுங்க.... எங்களுக்கெல்லாம் அந்த வாய்ப்பில்லை....

● கடைசியாக யாழ்ப்பாண மக்களுக்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள்...?

◆ இதைச் சொல்லுவதால் நான் பயப்படப்போவதில்லை. இந்த 20 ஆண்டுகாலப் பகுதியில் உங்களுக்கிருந்த முனைப்பும் வேகமும் எந்தளவிற்கு இருந்ததோ அது காலம் பூராகவும் இருந்து நீங்கள் சாதிக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம். சாதனையில் வெற்றிபெறவேண்டும்.



# ...து உள்ளங்கைகளில்...

**மு.சிவநேசன்**

பஸ்ஸிலும் இருந்த படி யன்னல் வழியே சிரமப்பட்டு போர்ட்டு களை வாசித்து இடத்தை அறிய வேண்டிய அவசியம் அற்றுப்போய்விட்டது. கையிலிருக்கும் செல் போன் நீங்கள் இருக்கு மிடத்தைச் சிக்னல் மூலம் திரையில் காட்டுகிறது.

3G - Third Generation Standard - செக்கனுக்குக் குறைந்தது 144 கிலோபைற் (kilobite) அளவுள்ள தக வல்களைப் பரிமாறத் தக்க வலிமைகொண்ட போன்களே வீடியோ ஓடியோ வடிவங் களைச் சுமக்கவல் லன.

WINMAX - அதிவேக வயரில் லாத தகவல் பரி மாற்றம். இதன் மூலம்

பல்வேறு அலுவலகப் பணிகளை ஒருங்கிணைக்கலாம்.

VOIP - Voice Over Internet Protocol - இதனை net phone என்றும் சொல்லலாம். இணையத் தளம் ஊடான மலிவான தொலைபேசி உரையாடலுக்கு இது வழிவகுக்கிறது.

BLUE TOOTH - வயரில்லாமல் கணனி அல்லது செல்போனுடன் மவுஸ், பிரிண்டர், கீ போர்ட் செற்பாடு களை இணைக்கலாம். கருவிகளைச் சுற்றி வயர்ப் பின்னல்கள் இனி அவசியமில்லை. எல்லாம் றிமோட் மாதிரி செயற்படும்.

Wi-Fi - wireless fidelity என்பது அதிசக்தி வாய்ந்தது. பெருமளவு கிலோபைட் தகவல்களை இது சுமக்க வல்லதால் தெளிவாக வீடியோ மற்றும் டிவிடி பைல்கள் வானலையில் உலாவருகின்றன.

கொரியாவின் SAMSUNG நிறுவனம் தனது போனில 40 satellite தொலைக்காட்சி அலை வரிசைகளைப் பார்க்கலாம் என ஏற்கனவே அறிவித்துவிட்டது. அது உங்கள் புகைப்பட அல்பம் ஆகவும் உங்களுக்குப் பிடித்தமான சுமார் பத்தாயிரம் ஓடியோ அல்லது ஆயிரம் வீடியோ பாடல்களின் களஞ்சியமாகவும் இருக்கும். சீடிக்கள், கசெட்டுக்கள் எல்லாம் எங்காவது போய் ஒளிந்துவிடும். உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க இவை கட்டுபடியான விலைக்குக் கிடைக்கும்.

என்றாலும் PC களும் அவற்றின் பெரிய மொனிற்றர்களும் தரமான டிவிடிகளைத் தருவதுபோல செல்போன்களால் இயலாது. இவற்றின் கணனிச் செயற்பாடுகள் 1990இன் கணனித் தரத்தையே எட்டிப் பிடித்து இருக்கின்றன எனப் பரிகாசம் பண்ணுகிற கணனிப் பிரியர்கள் இருக்கிறார்கள். செல்போன்கள் கணனித் தரத்திற்கு வரும்போது கணனி எப்படி முன்னேறிவிடும் என்று பார்க்கலாம் என்கிறார்கள் அவர்கள்.


ஆனால், 1980களில் செங்கட்டி அளவில் செல்போன் வந்த காலத்தில் அது இப்படி முன்னேறும் என எவரும் நினைக்கவில்லை. பத்து பட்டன்களை வைத்துக் கொண்டு அத்தனை எழுத்தும் குறியீடுகளும் அடிக்கின்ற அற்புதம் இன்னும் எத்தனை புதுமை செய்யப்போகிறது என்று பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அடுத்த மொடல் வரும்வரை காத்திருப்பவர்கள் இலவு காத்த கிளிகள்தான். இந்த மாதம் இருபதாயிரம் விற்கிறது. அடுத்த மாதம் பத்தொன்பதாயிரமாகிறது என்றால் அது மலிவு விலையல்ல. கழிவு விலைதான் என்பது பலருக்குப் புரிவதில்லை. முன்னேறிவரும் சாதனங்களைப் பொறுத்தவரை அறிமுகவிலை அதிகமாகத்தான் இருக்கும்.

வின்டோஸின் தந்தை மைக்கிரோ சொவ்ட் அதிபர் பில்கேட்ஸ் என்பது தெரியாதவர் இருக்காது. அவர்தான் உலகின் முதல் பணக்காரர். காரணம் வின்டோஸின் வெற்றிதான், கணனியைப் பிளாஸ்ரிக்கும் உலோகமும் சிலிக்கனும் கொண்டு ஆயிரம் கம்பெனிகள் தயாரிக்கலாம். அவற்றிற்கு உயிர் கொடுக்க பில்கேட்ஸின் CD தான் வேண்டும் என்பது பொது விதியாகிவிட்டது. கடும் உழைப்பில் வெற்றி காணும் பில்கேட்ஸிற்கும் சந்தியில் குந்தி இருந்து கொண்டு நேரம் போதவில்லை என்று தவிக்கும் பிராணிகளுக்கும் உள்ளது ஒரு நாளைக்கு 24 மணித்தியாலங்கள்தான் என்பது எவ்வளவு கொடுமையான பங்கீடு?


பண்டைய ஆய்வாளர்கள், கண்டுபிடிப்பாளர்களின் பட்டியல்கள் பாடப் புத்தகங்களில் இருக்கும். எம் கண்முன்னே இன்று வாழும் பல அற்புதமான கண்டுபிடிப்பாளர்கள் பற்றி நாம கவலைப்படுவது பொது அறிவுப் போட்டிக்குப் போகும்போது மட்டும்தான். இப்படியான இன்றைய கண்டுபிடிப்பாளர்கள் சிலரைப் பற்றிய அறிமுகம் இவ்விடத்தில் அவசியமாகிறது.

செல்போனில் 911 என்ற இலக்கத்தை அழுத்தி எதற்கும் அவரச உதவி கோர அமெரிக்கர்கள் தயாராகிவிட்டார்கள். அழுத்தியதும் போன் இருக்கும் இடம் துல்லியமாகக் கண்காணிப்பாளர்களின் திரையில் மின்னும். ஆபத்துக் காலங்களைச் சமாளிக்க இது பெரிதும் உதவும். இதற்காக அமெரிக்கர்கள் மட்டுமல்ல, உலக மக்கள் அனைவரும் நன்றி கூற வேண்டியது 46 வயதான இந்தியரும் பெங்களூரில் தறபோது வசிப்பவருமான Sasken ltd இன் தலைவருமான றஜீவ் மோடி என்கின்ற உண்மை பயனாளிகளுக்குப் பெரும்பாலும் தெரிவதில்லை. தனது கண்டுபிடிப்புகள் பிரபலமடைவதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னரே 1991 இல் இவர் இந்தியா திரும்பிவிட்டார்.

Wi-Fiயின் தந்தை? - 30 வயதான Anthony Townsend என்பவர்தான். தனது நண்பர்களிடையே விளையாட்டாக அவர் பரிமாறியதுதான் இத்தொழில்நுட்பம். இனி இது தான் நவயுகம் என்றாகப் போகிறது. தமது தயாரிப்புகளை Wi-Fi இற்கு இசைவாக மாற்றியாகாதபோது பாரிய கம்பனிகளை மண் கவ்வ வைக்கவும் புதியவற்றை உருவாக்கவும் இத் தொழில்நுட்பத்தினால் இயலும்.



செல்போன் என்பது ஒரு போன் மட்டுமல்ல என அதற்கு ரெலிவிஷன் கமெரா MP 3 என்றெல்லாம் முதன் முதலில் புகுத்திய பெருமை தென்கொரிய SAMSUNG கம்பனியின் தகவல் பரிமாற்ற முதல்வர் Lee Ki Tae இனைச் சாரும். ஜப்பான் தயாரிப்புகள்தான் வேண்டும் என்று அடம்பிடித்து கொரியன் தயாரிப்பு என்றதும் முகத்தைச் சுழிப்பவர்களுக்கு இது பலத்த அடிதான். மட்டுமல்ல, இன்று வருமானத்தை பொறுத்தவரையில் உலகினில் முதலிடம் வகிக்கும் அமெரிக்காவின் மைக்கிரோ சொவ்ட்டிற்கு அடுத்ததாக் கொரியாவின் SAMSUNG நிறுவனமே திகழ்கிறது என்பது கிழக்காசியாவிற்கு இனிப்பான செய்தி. இதேபோல் தாய்வான் Computer chips உற்பத்தியில் அமெரிக்காவுக்குச் சவாலாக நிற்கிறது.



பூகோளம் வயலெஸ் தொழில்நுட்பமும் டிஜிட்டலாக இணைகின்றபோது துல்லியமாக ஒரு செல்போன் இருக்கும் இடத்தை உலகப் படத்திலோ, தேசப் படத்திலோ, ஊர்ப்படத்திலோ புள்ளியிட்டுக்காட்டிவிடலாம். எனவே, தப்பான முயற்சிகளுக்கு உதவாப் பொருளாகச் செல்போன் மாறிவிடும் காலம் வெகுதொலைவில் இல்லை. Satellite இணைப்புகள் இவற்றைச் சாத்தியமாக்கும். அதேபோல Satellite இற்கு இணைக்கப்பட்ட கணனியில் தேசப்படத்தைக் க்ளிக் செய்து zoom பண்ணிக்கொண்டே போனால ஒரு நாடு, நகரம், தெரு, வீடு, வாகனம், வாகனத்தின் இலக்கத் தகடு, தகட்டில் உள்ள வெடிப்பு என்று விவரங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டே போகலாம். இது Key-hole தொழில்நுட்பம் எனப்படுகிறது. சாவித் துவாரத்தின் ஊடாகப் பார்ப்பது போல உலகத்தைப் பார்க்க இது உதவும். எவரும் தனது செயற்பாடுகளை Satellite இன் வான் பார்வையிலிருந்து தவிர்த்து ஆற்ற வேண்டிய நிலமை உருவாகிறது.

கம்பனிகள் தமது வெளிக்கள பணியாளர்களுக்கு GPS வசதிகொண்ட செல்போன்களை வழங்கி வருகின்றன. எனவே, பணியாள்கள் இனி வீட்டிலோ, ஹோட்டலிலோ நின்று கொண்டு வேலைத்தளத்தில் நிற்பதாகப் பாசாங்கு பண்ணமுடியாது. இதேபோல, கணவன், மனைவி, பிள்ளைகளின் பயணங்களை வழி நடத்தவும் கண்காணிக்கவும் வசதிகள் வாய்க்கின்றன. சாரதிகள் தமது எண்ணத்திற்கு வாகனங்களை வேறு இடங்களுக்கு எடுத்துச்செல்ல இயலாது. செல்போன் திருடர்கள் பாடும் சிக்கல் தான்.

ராடர் செயற்பாடுகளுக்கு ஒத்த வகையில் இவற்றை இனங்காண இயலும் என்பதால் வாகனங்களின் வேகத்தை அதிலிருக்கும் செல்போனே காட்டிக் கொடுத்துவிடும். தனியான கமெராக்கள் அதற்கென்று அவசியமில்லை. சகலரதும் சகல நடவடிக்கைகளையும் யாராவது வேலை இல்லாமல் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்று கூற முடியாது. ஆனால், நடவடிக்கைகள் அனைத்தும் எங்காவது பதியப்படலாம். அவசியமேற்படுமிடத்து ஆராயப்படலாம்.

Apple Computer Corporation பெருமையுடன் அறிமுகப்படுத்தியிருக்கும் சாதனம் ஒரு சிறிய வோக்மன் . i - pod என அழைக்கப்படுகின்ற இது மூன்று மில்லியன் பாவனையாளர்களின் செல்லமாக இருக்கிறது. அவரவர் தனக்குத் தேவையான அத்தனை இசை வகைகளையும் இதில் பதிந்துகொள்ளலாம். செல்லுமிடமெல்லாம் இயர்போன் சகிதம் அடுத்தவருக்கு இடைஞ்சல் இல்லாமல் இசை ரசனையுடன் உலாவரலாம். இதனால், பெரிய Hi-Fi Sterio sets எலலாம் மாயமாகிவிடலாம். அவற்றைக் கட்டிமேய்க்க நூற்றுக்கணக்கான CDகள் அல்லது கசெற்றுக்கள் தேவை அல்லவா. பொக்கெற்றுக்குள் அசலான பத்தாயிரம் பாடல்கள் இருந்தால் உற்சாகம் எப்படி இருக்கும்? அல்லது இதில் ஒரு விரிவுரையாளர் தனது பாடத்திட்டம் முழுவதையும் ஒலிவடிவில் அடக்கிவிட்டால் அவரின் நிலமையை சொல்லவா வேண்டும்.

இந்த ஆண்டு முடிவடைந்து 2005 பிறக்கும் போது உலகினில் 21மில்லியன் டிஜிட்டல் வோக்கமன்கள் பாவனையில் இருக்கும். அவற்றில் 5 மில்லியனிற்கும் மேலானவை Apple இன் i-podகளாக இருக்கும். ஒரு MP3 CD யில் 150 வரையான 5 நிமிடப்பாடல்களை வைத்துக்கொண்டு 12 மணித்தியாலங்களைச் சமாளிக்க இயலும் என்கின்ற நிலைமை மாறி ஒரு i - podஇனை வைத்துக்கொண்டு 40 நாள்கள் ஓயாது சமாளிக்கலாம் என்கின்ற நிலைமை பிறந்துவிட்டது. நினைத்தால் பைத்தியமாக்கிவிடும் நிலைமை இதுவல்லவா? ஆனால், விலைதான் சாதாரணமானவர்களுக்குக் கட்டுப்படியாகாது. MP3 CDஇல் ஒரு பாட்டுக்கு 50 சதம் தான் கொடுக்கின்றோம். 75 ரூபாவுக்கு 150 பதிய பாடல்கள் கொண்ட CD தாராளமாகக் கிடைக்கிறது.

வானொலியில் நாளுக்கு நாலுதரம் ஒரே பாடலைக் கேட்கும் நிலைமையில் i - pod இனை நிரப்ப அத்தனை பாடல்களுக்கு எங்கே போவது? நாலு சனல் டிவியை வைத்துக் கொண்டு 40 தரம் சனல் மாற்றுகிறவர்கள் 4000 பாடல்களை வைத்துக்கொண்டு தடுமாறப் போகிறார்களே. ஆசை நிறையவே அலையவைக்கப் போகிறது.

i - pod இன் தந்தை Apple இன் முதல்வர் Steve Jobs அவர்களிற்கோ பெருமை பிடிபடவில்லை. சற்றுத் தள்ளாட்டம் கண்டுகொண்டிருந்த கம்பனியை i - pod விற்பனை தூக்கி நிறுத்தியிருக்கிறது. பணக்கார நகரங்களான நியூயோர்க்கிலும் லண்டனிலும் இதுதான் கைக் கடிகாரத்தை மிஞ்சுகிறது. அதற்குக் கணனி மற்றும் தொலைபேசி வசதிகளும் இணைக்கப்பட்டால் Apple விரைவில் உலகினை ஆளும். இதற்குப் போட்டியாக ஏனைய நிறுவனங்களும் களத்தில் இறங்காமல் இல்லை. அன்றாடம் உழைத்தால் வேகமாகச் செயற்பட்டு அன்றாடம் மாற்றங்களை அனுசரித்துத் தயாரிப்புகளை ரசனைக்கேற்ப மாற்றினால் மட்டுமே வர்த்தகச் சந்தையில் நின்று பிடிக்க இயலும்.

அண்மையில் டோக்கியோவில் ஒரு வர்த்தகக் கண்காட்சி - அது ஒரு டிஜிட்டல் சொர்க்கம் என வருணிக்கப்பட்டது.தமது தயாரிப்புகளை பல முன்னணி நிறுவனங்கள் காட்சிப்படுத்தி இருந்தன. மினி மினி சாதனங்கள் வழங்கிய இசை வெள்ளம் எவரையும் வாயைத் திறக்கவிடவில்லை. ஆயிரம் திரைகளில் மின்னும் pixels உலகம் கண்களைக் கொள்ளைகொள்ள நூற்றுக்கணக்கான கம்பனிகள் விளம்பரம் தேடிக்கொண்டன.

அங்கே அனைவரையும் கவர்ந்த அம்சம் PSP எனப்படும் SONY யின் play Station portable என்கின்ற தகவல் அசரவைக்கிறது. 260 கிராம் எடைகொண்ட இதன் விலை 300 அமெரிக்க டொலர்கள். இதற்கு Wi - Fi இணைப்பு வசதிகள் மட்டுமல்ல வீடியோ படங்கள், தொலைக்காட்சி, கணனி விளையாட்டுக்கள், இசை, போட்டோ அல்பம் என அனைத்தையும் தரமாகத் தரும் சக்தி உள்ளது. இதன் அனைத்து வசதிகளையும் ஆசுவாசமாக அனுபவிக்க மனிதருக்கு நேரம் இருக்காது என்றே கருதப்படுகிறது. இந்த நிலையில் PSPயின் தந்தை Ken Kutaragiதான். 21ஆம் நூற்றாண்டில் பலரினாலும் அதிகம் விரும்பப்படும் சாதனத்தின் கண்டுபிடிப்பாளர் ஆகிறார். பெரியபெரிய நிறுவனங்கள் சிறியசிறிய தயாரிப்புகளை உச்சத் திறனுடன் அறிமுகம் செய்து பிழைத்துக் கொள்கின்ற காலகட்டம் இது.

தற்போது பாவனையில் இருக்கும் CDகளில் 700 MB வரையிலான தகவல்களையே சேகரிக்க முடிகிறது. படமொன்றைப் பார்வையிட 3 CDக்கள் தேவைப்படுகின்றன. நாணயக் குற்றி அளவிலான முழு நீளப் படத்தையும் கொள்ளத்தக்க UMD (Universal Media Disk) எனப்படும் டிஸ்க்குகள் விரைவில் சந்தைக்கு வந்துவிடும்.

கசெற் பிளேயருக்குள் திணிக்கும் கசற்றுக்குள் இனி ரேப்பும் 12 பாட்டுகளும் மட்டும் இருக்காது. அதே பிளேயருக்குள் திணிக்கத்தக்க நவீன கசற்றுக்குள் ஒரு தலைப்பும் (head) பல மணித்தியாலயங்களுக்கான ஒலி வடிவங்களும் (இசை, பாடல்) பொதிந்திருக்கும். அப்படியானால் பழைய கசெற் பிளேயரையும் தூசி தட்டி எடுத்து வைக்கத்தான் வேண்டும்.

போட்டி போட்டுக்கொண்டு சாதனங்களைத் தயாரித்துச் சாதனை படைக்கப் பல ஆசிய நாடுகள் களத்தில் நிற்கின்றன. ஜப்பான், தென் கொரியா, தாய்வான், சீனா, சிங்கப்பூர், மலேசியா போன்ற ஆசிய நாடுகளில் உழைப்பும் உற்பத்தியும்தான் அரசியல் என்கின்ற நிலைமை முன்னேற்றம் காட்டுகிறது. இந்தியாவும் வாகன உற்பத்தி, மருத்துவம் போன்ற துறைகளில் காலடி எடுத்து வைத்திருக்கிறது. கண்டுபிடிப்பாளர்களினதும் விஞ்ஞானிகளினதும் பெயர்கள் ஆங்கிலப் பெயர்களாகத்தான் இருக்க வேண் டும் என்கின்ற காலம் மலையேறிவிட்டது.



# நீண்ட எதிர்காலம் சொக்கனுக்காகக் காத்திருக்கின்றது...

நீண்ட எதிர்காலம் சொக்கனுக்காகக் காத்திருக்கின்றது என்ற தலைப்பில் இரசிகமணி கனக செந்திநாதன் ஈழகேசரிப் பத்திரிகையில் 21.08.1955 அன்று வரைந்த கட்டுரை இது. மறைந்த மூதறிஞர் சொக்கனின் ஞாபகார்த்தமாக அதனை இங்கு பிரசுரஞ் செய்கின்றோம்.

பாடசாலை மாணவனாயிருந்தபோதே 'வள்ளி', குப்பையிலே மாணிக்கம் என்ற கதைகளை எழுதிய சிறுவனிடம் திறமையிருந்ததைப் பத்திரிகை ஆசிரியர்களும் சகபாடிகளும் கண்டு வாழ்த்தினார்கள். அவர்தான் இன்று சரித்திரக் கதைகளையும் உணர்ச்சிச் சித்திரங்களையும் சரித்திர நாடகங்களையும் தீட்டி ஈழத்து எழுத்தாளர்களில் தமக்கென ஒரு தனி இடத்தைச் சம்பாதித்துக் கொண்ட க.சொக்கலிங்கம் என்ற சொக்கன் அவர்கள்.

'குப்பையிலே மாணிக்கம்', 'பொன் பூச்சு', 'வேதாந்தி', 'கனவுக் கோவில்', 'கவிஞன் பலி', 'தாமரையின் ஏக்கம்', 'மாணிக்கம்', 'கற்பரசி', 'வினோத நண்பர்', 'ஞாபச் சின்னம்', 'பிள்ளைப் பாசம்', 'தீர்ப்பு', 'குட்டை நாய்', 'கூனல்', 'பனித்துளி' என்ற பதினைந்து கதைகளும் அவர் எழுதிய கதைகளுக்குள்ளே உயர்தரமாகக் கணிக்கப்படுகின்றன.

அவர் எழுதிய கதைகளுக்குள்ளே எனக்குப் பிடித்தது 'குட்டைநாய்' என்பதுதான். ஆனந்தமும் ஒளியும். போட்டியிட்டு ஆக்கிரமிக்கும் மோட்ச உலகத்தின் ஒரு வெளியிலே ஓர் ஆண் நாயையும் அதன் காதலியையும் சந்திக்கச் செய்து பெண் நாயின் வாயால் மனிதர்களின் புகழையும் ஆண் நாயின் வாயால் அவர்களின் இரக்கத்தன்மையையும் காணும்படி படைத்த அந்தச் சிறுகதை இருக்கிறதே, அது ஈழ நாட்டில் முதல் தரமானதொன்று என்பதை யாராலும் மறக்க முடியாது.

ஆனால், கதை அம்சத்திலும் அதை எழுதியிருக்கும் பாணியிலும் 'மாணிக்கம்' என்ற கதைதான் சிறந்திருக்கிறது என்பது பலர் அபிப்பிராயம். இந்தக் கதை சுடலை ஞானத்தோடு ஆரம்பமாகிப் பால்ய நினைவுகளோடு முடிகிறது. இலங்கைப் பெண் ஒருத்திக்கும் இந்தியந் தந்தைக்கும் பிறந்த மாணிக்கம் தகப்பனோடு வண்டியோட்டி வாழ்ந்து விவாகஞ்செய்து, கிராமத்தை விட்டுப் போய், பட்டணத்திலே சாரதியாக மாறுகின்றான். பின்பு பழையபடி கிராமத்துக்குத் திரும்பி வந்ததும் பட்டணத்தின் பகட்டான வாழ்க்கை அவனை விடவில்லை. அது மாத்திரமா? அவன் சமதர்மவாதியாகியும் விட்டான். பஸ் கம்பனி ஒன்றின் சாரதியாகிவிட்ட மாணிக்கம் வேலைநிறுத்தத்தில் பங்கெடுத்துக்கொண்டு சரமாரியாகப் பேசுகிறான். கடைசியிலே "துப்பாக்கிப் பிரயோகம் 'தொழிலாளர் வாழ்க' என்று கோஷித்து யாழ்ப்பாணத்தின் கௌரவத்தைக் காப்பாற்றி மண்ணை முத்தமிட்டான்" என்று முடிக்கிறார் ஆசிரியர்.

கதை 'பழைய சரக்குத்'தான் என்றாலும் அவர் எழுதியிருக்கும் முறை அற்புதமானது. "அவன் தனது மகனுக்கென்று வைத்தவை ஒரு துவரந்தடியும் பெரிய எழுத்துத் தேசிங்குராஜன் கதையும் சில சில்லறைக் கடன்களுந்தான். எங்கள் வீட்டுக்கு மாணிக்கம்தான் புதினப் பத்திரிகை. ஒருகிழமையாகத்தான் காரோட்டப் பழகிய பிரதாபங்களை வர்ணனைகள், அணிகள், உவமைகள் ஆதியாம் உத்திகளுடன் வெளியிட்டுக் கொண்டிருந்தது அது' என்றெல்லாம் அவர் எழுதும்போது வாசிக்காமல் யாராலும் இருக்கமுடியுமா?

வலைகம்பாகுவையும் தாட்டியனையும் சோமதேவியையும் வைத்துப் பின்னிய கதைதான் கற்பரசி. "நிலவுக் குழந்தை வான மைதானத்தில் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்தது. அதன் நட்சத்திரத் தோழர்கள் வெண்மேகத் திரையினிடையே அது மறையும்போது ஏமாந்தும் வெளிப்படும்போது துரத்திப் பிடிக்க முயன்றும் களைத்துப்போய் பெருமூச்சு விட்டன" என்றெல்லாம் வர்ணனைகளோடு எழுதியுள்ளார் அவர்.

'வினோத நண்பர்' என்ற கதை கடிதத்தோடு தொடங்குகிறது. 'இனிமேல் குடிக்கமாட்டேன்' என்று சத்தியம் செய்துவிட்டுப் பிறழ்ந்த தன் நண்பனைத் திருத்தக் கெஞ்சல், பயமுறுத்தல், ஆற்றாமை, ஏமாற்றம் ஆதியாம் உணர்ச்சிகள் தோன்ற அது எழுதப்பட்டிருக்கிறது. வாசிக்க வாசிக்க இன்பமாக இருக்கிறது.



"எட்டாத கனவுக் கோட்டையின் மேல் எண்ணம் என்ற சிறகு விரித்துப் பறந்து சென்றேன். உலகத்தில் என்னைவிடப் பாக்கியசாலி யார் என்னும் கர்வத்தோடு பறந்து சென்றேன். ஆனால்...? என் சிறகுகள் சரியான சமயத்தில் முறிந்து விழுந்துவிட்டன. உதிரம் வடியப் பெற்ற உள்ளத்தோடு எட்ட முடியாத பாதாளத்திற்குப் போய்க் கொண்டிக்கிறேன். கீழே... கீழே... இன்னும் கீழே... ஐயோ, இதற்கு முடிவே இல்லையோ! நான் அதலபாதாளத்தில் விழுந்துதான் ஆக வேண்டுமா?" எல்லாளனை வென்றுவிட்டு அமைதியடை யாமல் இருந்த துட்டகைமுனு அவனுக்கு ஏற்படுத்திய ஞாபகச் சின்னத்தை வைத்து எழுதிய சரித்திரக் கதையும் தன் கண வனாகிய அழகப்பனின் நோயைத் தீர்ப்பதற்காகப் பிள்ளையை இருபத்தைந்து ரூபாவிற்கு விற்ற 'பிள்ளைப் பாசம்' என்ற கதையும் சங்கிலியன் - பரநிருபசிங்கன் - காக்கைவன்னியன் என்போரை வைத்து எழுதிய 'தீர்ப்பு' என்ற சரித்திரக் கதை யும் முதலாளியையும் தொழிலாளியையும் வைத்துப் பின்னிய 'கூனல்' என்ற கதையும் அவருக்கு எப்பொழுதும் நிரந்தரப் புகழை அளித்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. மின்னொளி பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய 'கடைசி ஆசை' முதற் பரிசு பெற்றதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறுகதைகளைவிட அவர் 'மலர்ப்பலி' என்ற நாவலையும் எழுதியுள்ளார். இருபத்தொன்பது அதிகாரங்களையுடைய இந்த நாவல் ஆசிரிய சமூகத்தைப் பற்றியது. நாகராசன், புவனேஸ்வரி ஆகிய இருவரும் ஆசிரிய கலாசாலை மாணவர்கள். நாகராசன் மீது புவனாவிற்குக் காதல் ஏற்பட்டு விடுகிறது.......... மனதில் காதலை வளர்த்துக்கொண்டு வெளியிலே வீண் கர்வம் காட்டுவது எவ்வளவு தீமையானது என்பதை அடிப்படையாகக் கொண்ட இந்த நாவலில் பாத்திரங்களை உயிர்த்துடிப்போடு ஊடாட விட்டிருக்கிறார் அவர். எனினும், முன் நடந்த நிகழ்ச்சிகளை இருவர் வாயாலும் மாறிமாறிக் கேட்கும்போது சில இடங்களில் அலுப்புத் தட்டத்தான் செய்கிறது. ஆனால், அந்த அலுப்பை அவர் இடையே போடும் பொன் மொழிகளும் கீதாஞ்சலி வாசகங்களும் உவமான உவமேயங்களும் நீக்கிவிடுகின்றன என்பது உண்மை. "சத்தியபாமாவின், இன்மொழிகளாலும் பட்டாடைகளாலும் சரிவராத கண்ணனின் பாரம் ருக்மணியின் ஒரு சின்னஞ்சிறு மாலையால் சரிவந்தது என்பதெல்லாம் கட்டுக்கதை யல்ல", "காளிக்குச் சங்கரனைக் காலின் கீழ்ப்போட்டு மிதிக்கத்தான் தெரியும். தொழுதேத்தத் தெரியுமா?", "கண்மூடா இரவுப் பொறுமையால் தலை கவிழ்ந்து நட்சத்திரங்கள் மூலம் நுண்ணியதாய்க் கவனித்து நிற்கிறது." இப்படி எத்தனையோ வசனங்கள் அந்த மலர்ப்பலியை அலங்கரித்து அழகு செய்கின்றன.

'கவிஞன் பலி', 'கவிஞன் பரிசு', 'தாய் உள்ளம்', 'கனவுக் கோயில்', 'புனிதவதி', 'பரீட்சைப் பிசாசு' ஆகிய நாடகங்களையெல்லாம் அவர் திறம்பட எழுதித்தான் ஒரு திறமையான நாடக எழுத்தாளர் என்பதை நிரூபிக்கிறார். இவருடைய நாடகங்கள் பல கொழும்பு வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டுள்ளன. 'கவிஞன் பரிசு' என்ற யாழ். பாடியின் கதை பலாலி ஆசிரிய கலாசாலையில் அரங்கேற்றமும் செய்யப்பட்டுப் பெரும் புகழும் பெற்றது. வானமளாவிய மாட மாளிகைகளின் வானமெட்டும் புகழ்ப்பிரதாபத்துடன் சிங்கள வேந்தர் வாழ்ந்த காலம். சிங்கக் கொடி ஈழத்தில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா முதலாம் நாடுகளிலும் கம்பீரத்துடன் பறந்த காலம். அந்நாள்களில் வாழ்ந்த வேந்தருள் ஒருவன் குமாரதாசன். கவிஞன் அவன் நட்புக்கு ஓர் இலட்சியம்; அன்பின் கொள்கலம்; அறிவின் வாரிதி. அன்பிற்காக உயிர் விட்ட கதைதான் இது", என்று கவிஞன் பலியை நமக்கு அருமையாக அறிமுகம் செய்து வைக்கிறார். அவரது நாடகங்களில் பாத்திரங்களின் உயர்வுக்குத் தக்கபடி சம்பாஷணைகளில் அழகுடன் பண்பும் காணக்கிடைக்கின்றன.

குட்டை நாயைப் போன்ற ஒப்பற்ற படைப்புக்களை இன்னும் சொக்கன் செய்வாரென அவரிடம் எதிர்பார்க்கிறேன். நீண்ட எதிர்காலம் அவருக்காகக் காத்திருக்கிறது. வாசகர் அவர் கைவரிசையைக் கண்டுகளிக்கலாம் என்பது உறுதி.

நன்றி ஈழகேசரி 21.08.1955



காலைக் கவி கந்தப்பனார்

## பார்வை


எண்ணற்ற மாடிகளின்
ஏற்றத்தில் நின்று
விண்ணதைத் தொடுவது போல் – அந்த
கண்ணதன் உந்(து)தல்!
நீ நீயாயும்
நான் நானாயும் இருப்பது இழந்து;
பிறிதொன்று என்னுள்



பிரசவம் செய்கின்றதே
ஓர் இசைச் சங்கமத்தின்
ஈற்று முழக்கம் – அந்த
விசைக்குச் சமம்!
சூரியத் தெறிப்பின்
வீரிய வீச்சை விஞ்சிய
கூரியதான தூரிகை மொழி!
எத்தனை கவிகளை
எழுதிச் சுமந்தேன்!
அத்தனையும் செல்லாதது போல்
இல்லாதவையாயின;
இமைகள் விழித்த
இ(ந்)தப் பார்வை முன்....?
இலக்கிய உவமைகள் இன்னுமேன்.
வால்மீகி நாலும்
தோல்வியில் போகும்!
கண்ணதாசன் கண் விழித்தால்
அந்நக் கண்ணின்தாசன் என்றிருப்பான்!
அந்தப்பார்வை வீச்சினை
பக்கத்தில் வைத்து
கல்லறை துயிலும்
ஷெல்லியைத் தட்டுங்கள்!
உயிர்த்தெழுவான் மீண்டும்!
புறங்கள் யாவும் புறந்தள்ளி
அகத்தால் மட்டும் – உன்னை
அர்ச்சிக்கின்றேன்
அணைத்து விடு – இன்றேல்
அணைத்து விடு.

## வண்ணத்துப் பூச்சி

நிசப்த சிறகுகளால்
நீச்சலடிக்கும்
தூரிகை தொடாத
வண்ண ஓவியம்!
பூவின் உறியில்
தேன் எடுக்கும்
பூ(ச்சி)க் கண்ணா – இனி
புடைவையையும் திருட
புறப்பட்டு விடாதே.
நீயே ஜவுளிகளின்
வண்ணத்தினிசு!
பூவின் மேல் உனை வைத்து
புள்ளியிட்டுக் கொண்டேன்.



மலரே உன்னை
மண்டியிட்டுக்கொண்டது!
வண்ணப்பூவிற்கு நூறு புள்ளிகள்
வண்ணத்துப் பூச்சிக்கு நூற்றிரண்டு!
என் ரசனை இராச்சியத்தில்
முடி சூ(ட்)டிய இளவரசி,
அளவற்ற அழகு
ஆபத்தானதென
அர்த்தம் கற்பிக்கும்
நர்த்தனமே,
உன்வடிவத்தில்
சில வடிவில்லை.......
உன் பூர்வீகப் புறப்பாடு
விசம் கொட்டும்
மயிர்க்கொட்டியாமே!
மலர்க்குடும்பத்தில்
பூக்களின் உதிரம் உறிஞ்சி
உயிர் வாழும் உன்னோடு
இனிமேல் எனக்கு – உறவில்லை!

மாசியூர் ரட்ணேஸ்